
www.tamilarangam.net

# எரிமலை

ஜூலை 2005



கரும்புலிகள் நாள் ■ ஜூலை - 5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




www.tamilarangam.net

# உள்ளே...

எரிமலை







## கட்டுரைகள்

நாதன் 04

துளசிராம் வட்டம் 08

சிந்துஜா ஓம்பிரகாஸ் 19

மீரா 27

மு.பொ 35

பே.சுகந்தன் 40

மனோன்மணி சண்முகதாஸ் 52

## களப்பதிவு

அலையிசை 16

## உண்மைப்பதிவு

மணலாறு விஜயன் 38

## அணையாததீபம் 10

கரும்புலி மேஜர் டாம்போ 12

கரும்புலி மேஜர் அறிவுக்குமரன்

## சிறுகதை

செ.யோகநாதன் 32

ஃப்ரன்ஸ் காஃப்கா 44

## நேர்காணல்

ஓவியர் புகழேந்தி 20

## கவிதை

பே.சுகந்தன் 15

மெலிஞ்சி முத்தன் 42

## கவிநாடகம்

மா. கி. கிறிஸ்ரியன் 31


## தொகுப்பு

நினைவுக்குறிப்பு 54

மீள்பார்வை 55

நிகழ்வும் பதிவும் 56

பதிவுகள் 58




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








இந்த உலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவனும் எல்லாவற்றிற்கும் மேலாக தன்னையே காதலிக்கிறான். உயிர் வாழ வேண்டும் என்று துடிக்கிறான். மனிதன் உயிரை நேசிப்பதால், உயிர்வாழ விரும்புவதால், உயிர் அற்றுப்போகும் சாவு என்ற இல்லாமை நிலைக்கு பயப்படுகிறான். இது மனித இயல்பு. இயற்கையின் நியதி.

ஆனால் ஒரு கரும்புலிவீரன் தன்னை விட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக் கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான். அந்தக் குறிக்கோள் அவனது சுயத்திற்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன் பற்றியது; நல்வாழ்வு பற்றியது. மற்றவர்கள் இன்புற்று இருக்கவேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீக துறவறம். அந்தத் தெய்வீக பிறவிகள் தான் கரும்புலிகள்.

தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தைத் தழுவிக்கொள்ளும் ஒவ்வொருவனும் முதலில் தன்னை விடுதலை செய்து கொள்ள வேண்டும். தனது மனவுலக ஆசைகளிலிருந்தும், அச்சங்களிலிருந்தும் தன்னை விடுதலைசெய்து கொள்ளபவன் தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகைமையைப் பெறமுடியும். மனமானது பயங்களிலிருந்து விடுதலை பெறும் போது தான் வீரம் தோன்றுகிறது; துணிவு பிறக்கிறது. இந்த மனவியல் உண்மையை நான் ஆரம்பத்திலிருந்தே எமது போராளிகளுக்கு எடுத்துரைத்து வருகிறேன்.

பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத்தனத்தின் தோழன்; உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கு எல்லாம் மூலமானது மரணபயம். இந்த மரணபயத்தைக் கொன்றுவிடுபவன்தான் தன்னை வென்று விடுகிறான். அவன்தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறுகிறான்.

கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்து விடுகிறது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சாவு பற்றி சிந்திப்பதில்லை. தம்மை அழிக்கும் அந்த இறுதிக் கணத்திலும் தமது இலக்கை அழிக்கும் நோக்கிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பர். இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

'கரும்புலி' என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகிறோம். இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத, பூடகமான, இரகசியமான தன்மையையும் செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே 'கரும்புலி' என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிவமாக அமையப்பெற்றிருக்கிறது.

இந்த இரகசியத்தன்மை கரும்புலிகளின் செயற்பாட்டு வெற்றிக்கு மூலாதாரமானது. ஆளுக்கும் பெயருக்கும் அப்பால், அந்த தனிமனித தனித்துவத்திற்கு அப்பால், செயற்பாடே இங்கு முதன்மை பெறுகிறது. மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே ஒரு போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகிறது.

பல கரும்புலி வீரர்கள் இன்று பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அநாமதேயமாக உறங்கிய போதும் அவர்களது அற்பு
சாதனைகள் வரலாற்றுக் காவியங்
என்றும் அழியாப் புகழ்பெற்று வாழும்.

மனித தியாகத்தின் இமயத்தை
விட்ட இந்த இனிமையானவர்களை
அறிவேன். அவர்களது நெஞ்சத்தின்
யில் ஊற்றெடுத்த உணர்வுகளையும்
புரிவேன். ஏதோ ஒன்று மனித விடிவை
நகரும் உந்துசக்தியாக அவர்களை
கொண்டிருந்தது. அந்த விடுதலையின்
தைத் தீர்க்க எதையும் செய்வதற்கு அ
தயாராக இருந்தார்கள். அவர்களை
னைத்து விடையளிக்கும்போது இன
யாத உணர்வுகளால் எனது ஆன்மா
கும்.

ஒரு புனித யாத்திரையில் அவர்க
னார்கள். கண்ணீர் வடித்து நிற்கும்
மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும்
அசையாத நம்பிக்கையில் அந்தத்
பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்த
களை எண்ணும் பொழுதெல்லாம்
நெஞ்சு புல்லரிக்கும்.

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று மு
கமும் பேசுகிறது; அவர்களது மக
தியாகத்தைக் கண்டு மலைத்துப்
நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும்
போராட்டத்தின் உக்கிரத்தை உலக
தாயத்திற்கு உயர்த்தியவர்கள் கரும்பு

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்

05.07.1993 அன்று, கரும்புலிகள்
முன்னிட்டு தேசியத்தலைவர் அவர்கள்
செய்தியில்

**கரும்புலிகள் நாள் | ஜூலை 5**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

இருபத்திநான்காம் ஆண்டு

ஜுலை

2005

திருவள்ளுவர் ஆண்டு 2036

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrenees,

75020 Paris.

Tel: 01 - 43 58 11 42

Fax: 01 - 43 58 11 91

e.mail: info@erimalai.info

www.erimalai.info

# எரிமலை

## படுகுழியில் வீழ்ந்த பேரினவாதம்

தான் வைத்த பொறியில் தானே வீழ்ந்த கதையாகச் சிங்களப் பேரின வாதத்தின் அண்மைக்கால வரலாறு அமைகின்றது. தனிச்சிங்களச் சட்டம் இயற்றப்பட்டு அரை நூற்றாண்டு சென்றுவிட்டபோதும் தனது தவற்றை உணர்ந்து தானாகவே திருந்தும் நிலையில் சிங்களப் பேரினவாதம் இன்றும் இல்லை. வரலாற்றுத் தவறுகள் திருத்தப்படுவதுதான் உலக வழமை, இதற்குச் சிறீலங்கா விதிவிலக்காக அமைகின்றது. தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கக்கூடாது, அவர்களுடைய வாழ் நிலங்களை குடியேற்றி அபகரிக்கவேண்டும், ஒரேயொரு மதம் மாத்திரம் இருக்கவேண்டும் என்று மும்முனை கொண்ட சிங்களப் பேரினவாதம் தலைவிரித்தாடுகின்றது. ஐம்பது வருட குருதி தோய்ந்த வரலாற்றிற்கு தனிச் சிங்களச் சட்டம் எப்படி அடிகோலியதோ அதேபோல் இப்போது பாராளுமன்றத்தில் புகுத்தப்பட விருக்கும் மத மாற்றச் சட்ட நகல் இருக்கின்றது. இதன் விளைவுகள் மிகவும் பயங்கரமாக இருக்கும். ஏற்கனவே சிறீலங்கா அரசியல் சாசனத் தின் ஒன்பதாம் சரத்து 'இது சிங்கள பௌத்த நாடு' என்று பிரகடனம் செய்கின்றது. மத மாற்றச் சட்டம் அமுலுக்கு வந்தால் கிறிஸ்தவ, மற்றும் இஸ்லாம் மதங்கள் முடக்கப்பட்டுவிடும். இது சர்வதேச அரங்கில் பார தூரமான விளைவுகளை ஏற்படுத்தும், அது பற்றி சிங்கள அரசியல்வாதிகள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

குழியில் வீழ்ந்தவன், தான் வீழ்ந்து கிடக்கும் குழியை மென்மேலும் ஆழமாக்கக் கூடாது என்று சொல்வார்கள். ஒரு படியாக சுனாமிப் பொதுக் கட்டமைப்பு சம்பந்தமான ஆவணம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அது முடி வல்ல, பிரச்சினைகளின் ஆரம்பம். அரசியல்வாதிகளாக மாறியுள்ள புத்த பிக்குகளும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் காவலரான ஜே.வீ.பி யின ரும் பொது கட்டமைப்புக்கு எதிராக நீதிமன்றம் சென்றுள்ளனர். அது அரசி யல் சாசனத்திற்கு முரணானது, இலங்கையின் இறைமைக்கும் பாதக மானது என்றெல்லாம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனு கூறுகின்றது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பற்றி, அவர்கள் எந்த இனத்தவராக இருந்தாலும் பரவாயில்லை, ஒருவரும் கவலைப்படுவதாக இல்லை. பேரினவாதம் மக்களைப் பற்றிச் சிந்திக்காமல் தனது எதிர்கால அரசியல் இலாபம் பற்றியே கணக்கெடுக்கின்றது. தாம் வீழ்ந்தகுழியை ஆழ மாக்குவதுதான் அவர்கள் திட்டமாக இருக்கின்றது.

உலக சமுதாயத்தின் கடும் அழுத்தம் காரணமாகச் சந்திரிக்கா சுனாமிப் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார். அதற்கு இப்போது புதுப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. பொதுக் கட்டமைப்பின் புதியபெயர் புரியாத புதிராக இருந்தாலும் (பீ-ரொம்ஸ்) விசயம் ஒன்றுதான். இப்போது இருக்கும் குழப்ப நிலை சந்திரிகாவுக்குச் சாதகமாக இருக்கிறது. இழுத்தடிப்பு உபாயத்தைத் தாராளமாகக் கையாளும் அவருக்கு நீதிமன்றம் விசாரணைகள் கை கொடுக்கும் என்பது உறுதி. இப்போது சந்திரிகாவுக்கு உலக அரங்கில் நல்ல வரவேற்பு இருக்கிறது. தகப்பனைக் கொன்ற பிக்குகள் என்னை கொல்லப் போகி றார்கள் என்ற குரலை அவர் கண்டியில் நடந்த கடன்வழங்கும் நாடுகள் மாநாட்டில் எழுப்பினார். எதுவரினும் ஒப்பமிடுவேன் என்று அவர் சூளு ரைத்தார். அவரைப் பொறுத்தளவில் அந்தளவும் போதும். பொதுக் கட்ட மைப்பில் சொல்லப்பட்ட மூன்று தட்டு நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கம் பற்றிய பேச்சையே காணோம். பொதுக் கட்டமைப்பும் ஒரு கண்துடைப்புத் தான் என்று சொல்லத் தோன்றுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# பொதுக்கட்டமைப்பு:

## சிங்களத்தேசியவாத வியூகத்துடனான முரண்பாடு

ஆழிப்பேரலையிற்குப் பின்னான நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்புக்கான (P-TOMS) புரிந்துணர்வு உடன்பாடானது சிறீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டு விட்டது. நீண்ட காலதாமதத்திற்கும் - இழுபறி நிறைந்த திரைமறைவுப் பேச்சுக்களுக்கும், பகிரங்க தேசியவாத பிரகடனங்களுக்கும் மத்தியில் இந்த மனிதாபிமானப் பணிகளுக்கான கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அனைத்துலக சமூகத்தின் தீவிர ஆதரவையும், புலிகளின் சம்மதத்தையும் பெற்ற இந்த உடன்பாடானது சிங்கள தேசியவாத அமைப்பினுள் குழப்பத்தையும், அதன் தலைமைகளினுள் இழுபறிச் சூழலையும் ஏற்படுத்தியுள்ளது. வெறும் மனிதாபிமான நிர்வாக கட்டமைப்புடன் தொடர்புபட்ட இந்த விடயத்திற்கு ஏன் இத்தனை எதிர்ப்பு?

இந்தகைய தேசியவாத எதிர்ப்புக்கள் தமிழீழ மக்களுக்கு பரீட்சயமானவையாயினும் இலங்கைத்தீவின் சூழல்பற்றிய ஆழமான பார்வையில்லாத பெரும்பான்மையான அனைத்துலக தரப்பிற்கு இது வியப்பையும், விரக்தியையும் கொடுத்திருக்கும். நீண்ட காலப்போர் அழிவுகளையும், பொருண்மியச் சுமைகளையும் சுமக்கும் சிங்கள சிறீலங்கா வெறும் மனிதாபிமானக் கட்டமைப்புக்குக் கூட எதிர்ப்பினை தெரிவிப்பது பரீட்சயமற்றவர்களுக்கு அதிர்ச்சியூட்டுவது இயல்பானதே. எனினும், சிங்கள தேசியவாதத்தின் அகப்புற இயல்பு பற்றிய பார்வை கொண்டவர்களுக்கு சிங்கள தேசியவாதத்தின் இந்த கூக்குரலை புரிந்து கொள்ள முடியும். இந்த கூக்குரலுக்குப் பின்னால் உள்ள வியூக நோக்கினையும் (Strategic concern) புரிந்து கொள்ள முடியும்.

* * *

இலங்கைத்தீவின் இனச்சிக்கலினை "சிறுபான்மை" தமிழ் சமூகத்தின் ஏற்றுக்கொள்ள முடியாதவொரு நிர்ப்பந்தமாகவே சிங்கள தேசியவாதம் புரிந்து வைத்துள்ளது. பௌத்த சிங்கள தேசியவாத சிந்தனைகளும், வரலாறு பற்றிய தப்பிதமான கருத்துக்களும் நிறைந்த இந்த உட்கிடக்கையை முன்னாள் சனாதிபதி வீரதுங்காவின் 'ஆலமரத்தில் படர்ந்துள்ள கொடி' என்ற உவமையும், சந்திரிகா தென்னாபிரிக்காவில் தெரிவித்த தமிழரின் வருகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் சிங்களப் பேரினவாதம்

பற்றிய கொச்சைப்படுத்தப்பட்ட விபரிப்புக்களும் வெளிப்படுத்தின. இடதுசாரிகளாகவும், வலதுசாரிகளாகவும், தாராளவாதிகளாகவும் பிரிந்து நின்றாலும் சிங்கள தேசியவாதிகள் வடக்குக்கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ் தேசிய இனத்தின் (சிறுபான்மை என்கின்ற சொற்பதம் முற்றிலும் தவறானது) தேசியத்தையும், உரிமைகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, இந்தச் சிந்தனைகளை சிங்கள தேசியவாதம் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கின்றது. போர்நிறுத்த உடன்பாட்டில் கையொப்பமிட்டு தன்னை உயர்வான சிங்களத் தலைவனாக வெளிக்காட்டிட முற்பட்ட ரணில் விக்கிரமசிங்க கண்டியில் வைத்து வெளியிட்ட அறிவிப்பில், தமிழர் தாயகம் என்கின்ற கோட்பாட்டை பகிரங்கமாக நிராகரித்தமையை எவரும் மறந்திருக்க முடியாது. வடக்குக்கிழக்கு பிராந்தியத்தின் தற்காலிக இணைப்பை பிரிப்பதற்கான பிரேரணைகளை சந்திரிகா காலத்திற்குக் காலம் பரிசீலித்து வந்துள்ளார். அவர்களின் சிந்தனைப் புலத்தினுள் ஒரு மாகாணசபை தீர்வே அதிகபட்சமான உரிமைகளைக் கொண்டதாகும். அதற்கு மேல் சிந்திக்கும் அரசியல் விசாலம் அந்த சிங்கள தேசியவாதத்தினுள் முளைவிடாமைக்கு பலவித சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகள் உண்டு.

இத்தகைய பின்புலத்தினுள் தமிழர்களின் ஆயுதம் தரித்த எதிர்ப்பியக்கத்தின் வளர்ச்சி தாக்கம் செலுத்தியது. போர்நிறுத்த உடன்பாடு, பேச்சுவார்த்தைகள் மற்றும் சர்வதேச தரப்புகளுக்கும் தமிழர் தலைமைகளுக்குமிடையேயான தொடர்பாடல்கள் என்பன சிங்கள தேசியவாதத்தின் இறைமை பற்றிய சிந்தனைகளை மிகுதியாக வேதனைப்படுத்தின. ஆயினும், வளர்ச்சிகண்ட ஆயுத எதிர்ப்பியக்கம் காரணமாக விட்டுக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்த சூழல் சிங்களதேசியவாதிகளுக்கு ஏற்பட்டது. இந்த சமரசம் தமிழ் தேசியத்தினை மதித்து உரிமைகளைப் பகிரும் எண்ணத்தின் அடிப்படையில் தோற்றம் பெறவில்லை. மாறாக, ஒருவித வியூகவகுப்பின் வெளிப்பாடாக (Strategic concern) தோன்றியது.

தமிழர்களின் ஆயுத எதிர்ப்பியக்கத்தினை வெற்றிகொள்வதற்கான புதிய வியூகங்களை சிங்கள தேசியவாதம் தேடியது. இந்த தேடல்களுக்காக பெரும் இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன்கள் மற்றும் சிந்தனைகளுடன் தனது சிந்தனைகளை பொருத்திப் பார்க்க முற்பட்டது. அமெரிக்கா, சீனா போன்ற முரண்படும் அனைத்துலக தரப்புகளுடன் தனித்தனிக் காரணங்களைக் கூறித் தன்னை இணைத்துப் பார்க்க முற்பட்டது. பயங்கரவாதம் போன்ற சர்வதேசப் பொதுக்காரணிகளின் பின்னால் போய் பதுங்கிக் கொள்ள முயன்றது. புலிகளையும், தமிழர்களையும் பிரித்துப் பார்ப்பது போன்று பாவனை பண்ணியது. தமிழர் தரப்புக்கு மாற்றீடான புதிய தலைமையைக் கொழும்பில் வைத்து உருவாக்குமொரு ஒன்றிணைந்த சதி முயற்சிகளில் ஈடுபட்டது. தமிழர் தரப்புடனான நேரிடையான போரை நிறுத்திக் கொண்டு நீண்டகால நோக்கும், சிந்தனையும் கொண்ட சர்வதேசப் பாதுகாப்பு வலையைப் (International safety net) உருவாக்கிட ரணில் விக்கிரமசிங்க - மிலிந்த முறகொட முன்னிறுத்திய விபரிப்புக்களை உற்றுப் பார்ப்பது முக்கியமானது. அதே போன்று புலிகளுக்கு எதிரான சந்திரிகா அரசு நடாத்தும் நிழல்போரும் அவதானிப்புக்குரியது.

மறுபுறம், இந்தப் புதியவியூக வகுப்புக்கள் ஏற்படுத்தும் தவிர்க்க முடியாத இடைவெளிகள் ஊடாக தமிழர்களின் தேசிய விடுதலைப்போர் சர்வதேச அங்கீகாரத்தையோ, ஏற்றுக்கொள்கையையோ எட்டிவிடக் கூடாது என்பதில் சிங்களத் தேசிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாதம் தீவிரம் காட்டியது. தாயகக் கோட்பாட்டை ரணில் முற்கூட்டியே நிராகரித்தமையும், இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எதிரான சந்திரிகாவின் போர்க்கொடியும் இத்தகைய வகைப்பட்டது. இந்த வியூகத்தின் நோக்கினை தெளிவாகப் புரிந்து கொண்ட தலைமை தமிழர்களிடமிருந்தது. தமிழீழத் தேசியத் தலைவர் தெளிவாகவே காய்களை நகர்த்தினார். ஒருபுறம், போரில் பெற்ற வெற்றிகளை விட்டுக் கொடுக்காத எல்லைக் கோட்டைப் போட்டுக் கொண்டு சிங்கள தேசியவாதத்துடன் இராஜதந்திர ரீதியில் மோதினார்.

2003ம் ஆண்டு வாசிங்டனில் நடந்த இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்திற்குப் புலிகள் அழைக்கப்படவில்லை. இது அனைத்துத்தரப்பும் ஏற்றுக்கொண்ட சமநிலை நிலைப்பாடுகளுக்கு முரணானது. அதுவரை மென்மையாக நகர்ந்த பிரபாகரன் தீர்க்கமான முடிவினை எடுத்தார். நேரடியான பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்டது. டோக்கியோவில் இடம்பெற்ற உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் புலிகள் பங்கேற்கவில்லை. இதனால் அதன் சமச்சீரில்லாத பிரகடனங்களுக்கும் புலிகள் பொறுப்பாளிகள் அல்ல என்பதை பிரபாகரன் கோடிட்டுக் காட்டினார். இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபு புலிகளினால் 2003 கடைசிப்பகுதியில் முன்வைக்கப்பட்டது. இதுவொரு முக்கியமானதொரு வரலாற்று ஆவணமாக வெளிவந்தது.

இந்த ஆவணம் தமிழர்களின் தேசிய சுயநிர்ணய கோட்பாடு, தேசிய இறைமை மற்றும் தமிழ் மக்கள் போரினால் இழந்து பெற்ற வெற்றிகளின் தளத்தில் நின்று எழுதப்பட்டது என்பதை முதற்பார்வையில் அனைவரும் புரிந்து கொண்டனர். ஆனால், இதன் பின்னால் பிரபாகரன் நகர்த்திய காய் மிகநுட்பமானது. சிங்களம் புதிதாக வகுத்துச் செயற்பட்ட வியூகத்திற்கு வைக்கப்பட்ட பொறியாக அது விளங்கியது. தமிழர்களின் அடிப்படையான கோட்பாடுகளை அங்கீகரிக்காது சர்வதேச வலைவிரிப்புக்குள் தமிழர்களை வீழ்ந்த முனைந்த சிங்களத்தின் தலைமைகளுக்கு புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான வரைவு சவாலாக விளங்கியது. இதனால் சிங்களத்தின் நவீனவியூகத்திற்கு தலைமையேற்ற ரணில் விக்கிரமசிங்க அரங்கிலிருந்து அப்புறப்படுத்தப்பட சந்திரிகா விடயத்தைக் கையிலெடுத்தார். கடும் தேசியவாத போக்கும்- தனக்கான நிகழ்ச்சித்திட்டமும் கொண்ட ஜேவிபியும் சந்திரிகாவுடன் இணைந்து தலைமைக்கு வந்தது. புலிகள் தொடர்ந்தும் இராஜதந்திர நெருக்குதலைக் கொடுத்தனர். இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைவின் அடிப்படையில் பேசவருமாறு நெருக்குவாரம் செய்தனர். இது ஒரு அரசியல் இராஜதந்திரப் போராக வலுவுடன் புலிகளால் முன்னெடுக்கப்பட்டது. புலிகளின் சர்வதேசப் பயணங்களின் பின்னால் உள்ள அரசியல் இதுவென்பதை பலதரப்பும் ஊகித்துக் கொண்டது.

மறுபுறம், தமக்கான நிகழ்ச்சித்திட்டத்தில் இலங்கைத்தீவின் இனமுரண்பாட்டினை கையாளும் சர்வதேச சக்திகளுக்குப் புலிகள் ஏற்படுத்தும் அழுத்தம் போராக வெடிக்குமோ என்கின்ற பயம் ஏற்பட்டது. சிங்கள தேசிய வாதத்தின் பலவீனமான புள்ளிகளில் புலிகளின் அடிவிழுவதை கணித்துக் கொண்ட உலக சமூகம் ஒருவித இடைவெளியைத் தேடியது. தமிழர்களின் நெருக்குவாரம் தமது வியூகத்தின் மீது விழுவதை கணித்துக் கொண்ட சிறீலங்கா, இராணுவ நடவடிக்கைகளினை முடுக்கிவிட்டது. இடைக்கால நிர்வாக அமைப்புக்கான வரைவு வெளிவந்த சில மாத காலத்தில் நிழல்யுத்தம் புலிகளுக்கு எதிராக தொடுக்கப்பட்டது. ஆழ ஊடுருவித் தாக்கும் படைகள் மீள செயற்படத் தொடங்கின. ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. புலிகளின் பகிரங்கமான பதிலடியை எதிர்பார்த்து சிறீலங்கா பொறிவைத்தது. புலிகள் இந்த ஆட்டத்திலும் பங்கேற்றனர். சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்துடன் நேரிடையாக முரண்படும் போரினை தவிர்த்தனர் அல்லது பின்போட்டனர். நிழல் போரினை எதிர்கொண்டனர். இந்தச் சூழலில் 2004ம் ஆண்டு மாவீரர் நாளில் தமிழீழ தேசிய தலைவர் நிகழ்த்திய கோட்பாட்டு விளக்கவுரையில், தமிழர்களின் அரசியல் சூன்ய நிலையை கோடிட்டுக் காட்டப்பட்டது. ஒரு போரின் விளிம்புக்குள் இலங்கைத்தீவு இருப்பதை வெளிச்சம் போட்டார். இந்த அறிவிப்பும், விபரிப்பும் சர்வதேச சமூகத்தின் முன் வைக்கப்பட்ட அரசியல் - இராஜதந்திர வினாவாகவே அமைந்தது.

ஆழிப்பேரலை இந்த வினாவுக்கானதொரு தப்பிக்கும் வாயிலை சர்வதேச தரப்புக்கு திறந்து வைத்தது. மக்களின் மனிதாபிமானத் தேவைகளுக்கு உதவிட வேண்டிய அதேவேளையில், தமது முரண்பாட்டு தீர்வு முயற்சிகளுக்கானதொரு வாய்ப்பாகவும் இதனை சர்வதேச தரப்புப் பாவித்தது. சிறீலங்காவிற்கும், தமிழீழத்திற்குமானதொரு உறவு பரிமாற்றத் தளத்தை ஆழிப்பேரலை நிவாரண முயற்சிகள் ஊடாக அனைத்துலக சமூகம் முன்னிறுத்தியது. இது இணக்க முயற்சிகளை மீள ஆரம்பிக்க உதவும் என நம்பியது. புலிகள் இந்த விடயத்தில் மற்றுமொரு காய் நகர்த்தலை செய்தனர். சர்வதேச சமூகத்தின் நோக்கினைப் புரிந்து கொண்டாலும், தமது அடிப்படை நிலையில் நின்றவாறு இந்த முயற்சிக்கு முழுமையாகவே ஆதரவை வழங்கினார்கள்.

பொதுக்கட்டமைப்பினை வரைவு செய்த நோர்வே தரப்பினர் தமது அனுபவங்கள் மற்றும் தமிழ்த் தலைமையின் நிலைப்பாட்டின் உறுதியைக் கணக்கில் எடுத்து சிங்கள அரசமைப்புக்குள் அடங்காத கட்டமைப்பை முன்வைத்தனர். வடக்குக்கிழக்குக்கான பிராந்திய நிர்வாகம், சர்வதேச நிறுவனம் ஊடான நிதிக்கையாள்கை என்பனவற்றினை சர்வதேச தரப்பு முன்வைத்தது. சிங்கள வியூகத்துக்கு இது அச்சுறுத்தலாக இருந்தது. ஆயினும், சிறீலங்கா தலைமையினால் இதனை நிராகரிக்க முடியவில்லை. ஆரம்பத்தில் சிங்கள வெளிவிவகாரத்துறை சில பரப்புரை முயற்சிகளை எடுத்தது. சில சர்வதேச சந்திப்புக்களை நடாத்தியது. எனினும், உலக சமூகத்தின் பிடி வலுவாக இருந்தது. இதனால் மற்றுமொரு விட்டுக்கொடுப்புக்கு சந்திரிகா தலைமையிலான சக்திகள் உடன்பட்டன. மற்றுமொரு சர்வதேச சக்திகளின் தயவு நாடும் சக்தியான ரணில் தரப்பினர் இந்த நிலைப்பாட்டுடன் முரண்படவில்லை. எனினும், அடிப்படையில் சிங்கள தேசியவாதத்திற்கு இந்தக் கட்டமைப்பு ஏற்புடையதல்ல. பிரதமர் மகிந்த ராஜபக்சவின் மௌனமான எதிர்ப்பும், ரணில் தரப்பு முன்வைக்கும் ஆதரவு போன்ற எதிர்ப்பும் இவற்றிற்கு வெளிப்படையான சான்றாகும். இந்தப் பொதுக்கட்டமைப்பின் இரண்டாவது தளமான பிராந்திய குழுவுக்குப் புலிகளினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி தலைமை ஏற்பதை ஐ.தே.க எதிர்ப்பதாக நாசுக்காகப் பேசும் பேராசிரியர் பீரிஸ் பேரினவாதி போன்று விபரித்தமையை வியப்பானதல்ல.

பொதுக்கட்டமைப்பு பற்றிய தமது எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது ஜே.வி.பியும், சிங்கள தேசியவாத சிந்தனையாளர்களின் ஒரு பகுதியினரும் மொன்றிவீடியோ (Montivideo Convention - 1933) உடன்படிக்கையின் பிரிவு ஒன்றின் கீழ் சொல்லப்படும் விடயத்தினை எடுகோள்களாக்கினார்கள். இந்த உடன்பாடு புதிய தேசங்களை அங்கீகரிப்பதற்கான நிபந்தனைகளை எடுத்துக் காட்டி அச்சப்பட்டமை சுவாரசியமானதாக இருந்தது. பொதுக்கட்டமைப்பின் கீழ் வருவது 2 கி.மீ கரையோரத்திற்கான நிர்வாகமே ஆயினும் இது தமிழீழத்தை ஏற்றுக்கொள்வதற்கான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்று இவர்கள் கருதுகின்றனர்.

சிறீலங்காவின் அரசமைப்புக்கும், பாராளுமன்றத்திற்கும் பதிலளிக்காத கட்டமைப்பு, திறைசேரிக்குக் கட்டுப்படாத நிதிப்பங்கீடு என்பனவற்றினை ஏற்றுக் கொள்வது சிங்கள தேசியவாதத்தினைப் பொறுத்தவரை ஏதோ ஒன்று உண்மையாகவே கைநழுவிப் போவதைப் போன்றுள்ளது. அது உண்மையாகி விடுமென நம்புவோம்!

**நாதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# கரும்புலிகள் நாள் நிகழ்வில் தேசியத் தலைவர் பங்கேற்பு

05 யூலை 2005

வன்னியில் பிரத்தியேகமான இடமொன்றில் இடம்பெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு கரும்புலிகளுக்கு சுடர் ஏற்றி வீரவணக்கம் செலுத்தினார்.



www.tamilarangam.net



துளசிராம் வட்டம்

# இன்று எழுநூற்று முப்பதாவது நாள்

குரல் 01:- உலகம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது. விஞ்ஞானத்தில் மட்டுமல்ல அனைத்திலும் அனைத்திலுமே.........

குரல் 02:- உலகம் என்று யாரைக் கருதுவது? உலகம் என்பதற்கு உயிர் கொடுத்ததே அதில்வாழ்கின்ற ஒவ்வொரு உயிரியும் தானே. அப்படிப் பார்த்தால் உலகம் இன்னும் முன்னேறவில்லை. ஏனென்றால் தன்னிறைவடைந்த நாடுகளை விடவும் வளர்முக நாடுகளே பெரும்பான்மையாக உள்ளன.

குரல் 01:- தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த செகத்தினையே அழிக்க நினைத்தார் எங்கள் புரட்சிக் கவிஞர். ஆனால் இங்கே தனியொருவருக்கல்ல ஒரு கண்டத்தின் குறிப்பிட்ட நாடுகளுக்கு....... அந்த நாடுகளின் இலட்சக் கணக்கான மக்களுக்கு..... உணவில்லை. எங்கள் தேசத்தின் வறிய கிராமங்களின் தெருநாய்களைப் போன்ற விலாவென்புகள் வெளித்தள்ளியவாறான அந்த உணவற்ற தேசத்து மக்களின் படங்கள் நவீன மயப்படுத்தப்பட்ட ஊடகப் பக்கங்களில் இடைக்கிடையே வந்து போகின்றன திருநீற்றுப் பூசணிக்காய்கள் போல...

குரல் 02:- ஆனாலும் உலகம் முன்னேறி விட்டதாம் நம்ப முடியவில்லை என்றாலும் பரவலாக எங்கும் இப்படித்தான் கதைக்கின்றார்கள்.

உண்மையில் முன்னேறியது யார்? என்று பார்த்தால் காலெடுத்து முன்னால் வைக்க வலுவுள்ளவர்கள் முன்னேறிக் கொண்டேயிருக்கின்றார்கள். பசித்துக் கிடக்கின்ற அப்பாவி மனிதர்களின் மீது பசி தீர்த்தவர்கள் நடந்து போகின்றார்கள். பாதை அமைத்து..... பாதம் பதித்து.... பசித்தவர்களால் எதுவும் செய்ய முடியாதுள்ளது ஏனென்றால் அவர்களுக்கு இப்போது அதிகமாகப்பசிக்கின்றது.

குரல் 01:- தங்களது சகோதரர்களின் மேலே ஏறிப்போவது பற்றி பசிதீர்த்தவர்களுக்குக் கவலை இல்லை. அவர்களது பாதங்கள் கூசவேயில்லை. அவர்களுக்கு இப்போது வேறு பசிகள். சமுத்திரத்தின் அடியாழம் வரை ஊடுருவும் ஊடுகதிர் கண்டு பிடிப்பது பற்றி... உலகை முழுவதுமாய்க் கண்காணிக்கக் கூடிய ஒரேயொரு செய்மதியைச் செய்வது பற்றி.....வேற்றுக் கிரகங்களை அறிவது பற்றி... பூமியை விட்டு இன்னும் எவ்வளவு தூரம் சென்று வாழலாம் என்பது பற்றி.....

குரல் 02:- கண்டு பிடிக்கப்பட்ட ஒரு கிரகத்தில் அக்கிரக வாசியொருவருக்கு மாலைச்சிற்றுண்டி இல்லையெனில் நாடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போட்டி போட்டுக் கொண்டு உணவுகளைத் தாங்கிய செய்மதி களை அனுப்பும். அந்தப் புதிய கிரகமே நிறைந்து போகுமளவிற்கு.....அதே நேரம் இங்கே பசித்த தேசத்து மனிதர்கள் இலையான்களுக்கு உணவாகிக் கொண்டிருப்பார்கள். காரணம் புதிய கிரகத்தில் புதிய கனிய வளங்கள் இருக்கும். இங்கே செத்துக் கொண்டிருப்பவர்களின் தேசத்திலோ பழகிப் போய்விட்ட சிலிக்காவும் தங்கம் வெட்டி எடுக்கப்பட்ட பள்ளங்களும் தான் இருக்கும்.

குரல் 01:- உலகம் இப்படித்தான் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. வசதி படைத்தவர்களின் சுயநல, வக்கிர தேவைகளுக்கு ஏற்றவாறே கண்டுபிடிப்புக்களும் நடைபெறுகின்றன. அதிசயம் என்று வியக்கப்படுகின்றவற்றின் வரலாறுகளை ஆராய்ந்தால் அவை அழகானவையாகவே இல்லை.

குரல் 02:- என்ன தான் இருந்தாலும் உலகம் முன்னேறிக் கொண்டேதான் இருக்கின்றது.

குரல் 01:- பசித்தவர்களையும், நோயுற்று நலிந்தவர்களையும் அப்படி அப்படியே விட்டுவிட்டு உலகம் தன்பாட்டில் முன்னேறுகின்றது.

குரல் 02:- பசித்தவர்களும் பாதிக்கப்பட்டவர்களும் இதிலிருந்து உணரவேண்டியது யாதெனில் ஒவ்வொருவரும் தத்தமது தேவையைத் தீர்க்க தாங்களே முயற்சிக்க வேண்டுமென்பதே.

குரல் 01:- பசித்தவர்கள் தங்களது வலுவற்ற கைகளால் மண்ணைக் கிண்டிக் களையை எனினும் விதைத்து பசியாறித் தெம்பினைப் பெற்றுக் கொள்ளவேண்டும். பின்னர் விதை தரப் பலபேர் வருவார்கள். நோயுற்றுச் சீழ் வருகின்றவர்களும் கூட அந்தக் கைகளாலேயே மருந்தைக் கண்டுபிடித்து பூசிக் கொண்டு குணமாகினால் போதும் பின்பு தோல் நிறத்தை அழகுபடுத்த உதவவும், தழும்புகளை அழிப்பது பற்றி வகுப்பெடுக்கவும் அனேகம் பேர் அவசரமாய் வருவார்கள்.

குரல் 02:- அவர்களது இந்த அவசரத்தின் காரணம் சக மனிதர்கள் மீதான பாசமல்ல. அடுத்தவன் தங்களை விடவும் ருசியாய்ச் சாப்பிட்டு விடக்கூடாது என்ற துடிப்பு. மற்றவன் தங்களை விடவும் அழகாக ஆகிவிடக் கூடாது என்ற தவிப்பு. ஆகவே உலகம் இப்படித்தான் முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

குரல் 01:- இந்த உலகத்தில் தான் எங்களது தேசமும் வாழ்வா, சாவா என்ற போரில் வென்று வாழ்வே என்ற உறுதியுடன் தலை நிமிர்ந்துள்ளது.

இந்தத் தலைநிமிர்வுக்காகத் தலைமறைவாக வாழ்ந்தவர்கள் பலர். தம்மை ஈந்தவர்கள் பலர். எங்களுக்காக தாங்களேதான் செயலாற்ற வேண்டும் என்ற சத்தியம் தெரிந்து தெளிந்த மனிதர்கள் அவர்கள்.

குரல் 02:- இன்றைய இந்த வேட்டற்ற பொழுதுகள் விடிய வேண்டும் என்பதற்காய் தங்கள் இரவுகளை அவர்கள் தொலைத்து செயலாற்றத் தொடங்கியது எப்பொழுது என்பதை அவர்கள் மட்டுமே அறிவார்கள்.

குரல் 01:- பசிக்காமல் எங்கள் சந்ததி வாழ
அவர்கள் பசித்திருந்தார்கள்
நிம்மதியாய் எங்கள் மக்கள் தூங்குவதற்காக
அவர்கள் விழித்திருந்தார்கள்
எங்கள் தேசத்தின் சிலுவையை இறக்க
அவர்கள் தங்கள் மீது ஆணியறைந்து
கொண்டார்கள்.

குரல் 02:- அழகான இலட்சியங்களை மனதில் கொண்ட அந்த இளைய மனிதர்களின் பாதங்கள் பதிந்துபோன தடம் மறைந்த இடத்திலிருந்தே இன்றைக்கு சமாதானமும் பயணித்து வந்திருக்கின்றது.

குரல் 01:- சண்டையின் அதியுச்ச விளைவு இதுவென்று திசைகள் அதிர இவர்கள் உணர்த்தியபொழுதுதான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அவசியம் புரிந்து கொள்ளப்பட்டது.

குரல் 02:- உலகம் என்று கருதப்படுகின்ற முடிவெடுக்கக்கூடிய சக்திகளனைத்துமே அவர்கள் காற்றாகிப் போன இடம் வரை வந்து கை குலுக்கிக் கொள்கின்றன.

குரல் 01:- தன் பாட்டில் முன்னேறிக் கொண்டிருந்த உலகத்தின் முன்னால் போய் எங்கள் தேச வாழ்வு பற்றிய கேள்விக் கொத்தை தங்கள் உதிர மையினால் அவர்கள் எழுதி நீட்டியபொழுது உள்ளுக்குள் உறைந்து போனது உலகம். அந்த உறைதலில் உந்துதல் தான் இன்றைய சமாதானத்தில் அவர்களை உத்வேகம் காட்டி ஓடித்திரியச் செய்கிறது.. உதவி வழங்கியாவது சமாளித்து விடலாம் என்று நினைக்க வைக்கின்றது.

குரல் 02:- இன்றைக்குச் சரியாய் இரண்டு வருடங்களின் முன் இறுதியாய் அவர்களின் பாதங்கள் நடந்தன. கடைசியாய் அவர்கள் கலகலத்துக் சிரித்தார்கள். பிரிவின் பாடலை மனதிற்குள் இசைத்தபடி வெளியே அவர்கள் வேடிக்கையாய்ப் பாடினார்கள். தங்களது இறுதி இரவுணவினைக் கூட அவர்கள் ரசித்துத்தான் சாப்பிட்டார்கள். எல்லாமே இறுதியாய்........ஆனால் உறுதியாய்.........

குரல் 01:- சாகப் போகிறோம் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் அதனைத் தமது முடிவு என்று நினைக்கவில்லை. ஒரு அராஜகத்திற்கு அட்டூழியத்திற்கு தாங்கள் எழுதும் முடிவுரை என்றே நினைத்தார்கள்.

குரல் 01:- இலக்கு நோக்கி ஒவ்வொரு அடியாய் முன்னேறுகையில் அவர்களது மனதிற்குள் ஆயிரம் கேள்விகள்.

குரல் 02:- வழியில் ஏதும் தடைகள் வருமா?

குரல் 01:- இலக்குகள் எல்லாம் நினைத்தபடி இருக்குமா?

குரல் 02 :- எம்முடன் கூடவரும் இந்த வெடி பொருட்கள் இறுதிக் கணங்களில் செயற்பாட்டில் பிசகுமா?

குரல் 01:- இந்த மருந்துகள் இலக்கினை முழுமையாகத் தகர்க்கப் போதுமா?

குரல் 02:- இன்னும் அதிகமாய் இலக்குக் கிடைத்தால் வெடிபொருளுக்கு என்ன செய்வது?

குரல் 01:- ஆகக்கூடியதாய் எவ்வளவைத் தகர்க்கலாம்?

குரல் 02:- தாக்குதலின் விளைவு எப்படி இருக்கும்?

குரல் 01:- இவை போனால் உடனே புதிய உபகரணங்களின் கொள்வனவு நடைபெறுமா?

குரல் 02:- உள்ளே யாரும் அப்பாவிகள் இருப்பார்களா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களுக்கு ஆபத்தை விளைவித்து விடுவோமா?

குரல் 01:- எதிர்பார்ப்பை மிஞ்சுகின்ற கேள்விகள்.........
கேள்விகளை மீறிய பரபரப்பு.....
பரபரப்பை மீறிய பகை மீதெரியும் கோபம்.......
கோபத்தால் விளைகின்ற வேகம்..........
வேகத்தின் உள்ளிருக்கும் வெற்றி.......
அந்த வெற்றியை எண்ணும்பொழுது வரும்
உற்சாகம்.....

குரல் 02:- நாளைய விடியலில் கதிர்களில் விரியப் போகும்
தங்களது செயலின் விளைவுகள்.......
எதிரி அடையப் போகின்ற அதிர்ச்சி......
மக்கள் அடையப் போகின்ற மகிழ்ச்சி.........
ஆராரின் பிள்ளைகளோ என்று தெரியாது
தெய்வத்தைக் கைதொழப் போகின்ற அம்மாக்கள்........

குரல் 01:- அம்மா..........
எப்படியும் உணர்ந்து கொள்ளும் ஒரு ஜீவன்
அப்பாவுக்கும் நெஞ்சிற்குள் வலிக்கும்
அக்கா விழிநீரைத் துடைத்துக் கொள்வாள்
அண்ணா பல்லை இறுகக் கடிப்பான்.
தம்பி அதிர்ந்து போவான்
தங்கச்சி பாவம் அவள் சின்னப் பிள்ளை
பாட்டி உடனே பேரனை விசாரிப்பாள்
தாத்தாவும் பாவம் தவித்துப் போவார்

குரல் 02:- அவர்களை விடவும் இதோ கட்டியணைத்துக் கையசைக்கின்ற இவர்கள் மிகவும் பாவம். எங்களுக்காக மௌனமாய் நிற்கின்ற இவர்கள் மனதிற்குள் இப்பொழுதே அழுகிறார்களோ? என்ன செய்வது? இழப்புகளில்லாமல் வெற்றிகளுமில்லை. எப்படியும் வெற்றி பெறவே வேண்டும். துன்பங்கள் இனிமேலும் தொடரக்கூடாது. அவர்களது மனதின் சிந்தனைகள் விரிந்துகொண்டிருக்க அவர்களின் பாதங்கள் இலக்கின் எல்லையைத் தொட்டன. இனி விசைவில்லின் அழுத்துகைக்கு உட்படும் பிரதேசம் நின்று நிதானித்த அவர்களின் சிரங்கள் இறுதியாய் வட கிழக்கை நோக்கி திரும்பின.

குரல் 01:- எம் இனிய தேசத்து உறவுகளே!
நீங்கள் உங்களை மறந்து உறங்கிக் கொண்டிருந்த
அந்தக் காரிருள் பொழுதினில்
அவர்களின் கரங்கள் உங்களை நோக்கி அசைந்தன
நேற்றுப் பிறந்த மருமகனிடமும்
இன்று நிலம் பார்க்கும் பெறாமகனிடமும்
நாளைக்கு வரப்போகின்ற பேரக் குழந்தைகளிடமும்
அதன் பின்னரான சந்ததிகளிடமும்
இறுதி விடை கேட்டு அவர்களின் கரங்கள் அசைந்தன
நீங்கள் யாருமே அதை உணரவுமில்லை
அவர்களுக்கு விடை கொடுக்கவுமில்லை
விடைகிடைக்குமென்று அவர்கள்
காத்திருக்கவுமில்லை.

குரல் 02:- அவர்கள் போய் விட்டார்கள் இன்றைய நாட்கள்
அவர்களுடையவை இந்த அமைதி அவர்களால் வந்தது புரிந்து உணரும் திறன் எல்லோருக்கும் வேண்டும்
அது இல்லாவிட்டால்.........

குரல் 01:- அது இல்லாவிட்டால்...
மீண்டும் தேசம் சிவக்குமெனின்
இதே பாதை புதுப்பிக்கப் படலாம்
தேசம் தேவை என்று எதிர்பார்க்கையில்
எதுவும் செய்யப் பலர் தயாராகவே உள்ளார்கள்.
'எம் தேசத்திற்காய் எங்கெங்கும்'.

# சோகத்தை வெல்ல வீரத்தை விதைத்தான்

அடர்ந்த காட்டின் நடுவிலிருக்கும் பயிற்சி முகாம். காட்டு மரங்கள் தலை குனிந்து சலசலப்பில்லாமல் சத்தமின்றி நின்றன. பயிற்சி முகாமின் உள்ளே ஓடும் ஒவ்வொரு ஒற்றையடிப்பாதையும் டாம்போவின் காலடியைத் தேடித் தேடி தவித்தன.

காணும் ஒவ்வொரு மரமும் - அவற்றின் ஒவ்வொரு அசைவும் அவனின் நினைவையே திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருந்தன.

மரங்களின் மறைவுகளில் தெரிந்தும் தெரியாமலும் அமைக்கப்பட்ட கூடாரங்கள் அவற்றிற்கு நடுவே அழகாக நிற்கும் வட்டவடிவக் காட்டில். காட்டின்சிறிய தடிகளால் அமைக்கப்பட்ட இருக்கைகள். எதைப் பார்த்தாலும் டாம்போவின் கதை சொல்லின.

இந்த முகாமின் அழகையும் - அமைப்பையும் நிர்மாணித்தவனே டாம்போ தான்.

முகாமினுள் தொலைக்காட்சியும் வானொலியும் அவனின் இழப்பின் பின் ஒருநாளும் இயங்கவில்லை. ஆனால், அவனிருக்கும் பொழுது அவை ஒரு நாளும் மௌனமாக நின்றதில்லை. போராளிகளின் இழப்புக்களின் போது மட்டும் சோகமாக நின்றுவிடும் அவை. இன்று நிரந்தரமாக மௌனமாகி நின்றன.

முகாமிற்கு அருகா ஓடும் காட்டுப் பாதையின் ஓரமாக நிற்கும் வாகனத்திடம் செல்லுங்கள். அது தன் சோகத்தைச்சொல்லும் டாம்போவின் சாரதியத் திறமையைப் பற்றிச் சொல்லும்.

வாகனங்களைச் செலுத்தும் பொழுது அருகில் இருப்பதே இனிமையானது. காட்டின் ஒவ்வொரு மரத்திற்கும் பாதைகளில் நீட்டிக் கொண்டு நிற்கும் கட்டைகளிற்கும் அழகாக, இலகுவாக, விலகி விலகி ஓடும் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். பயிற்சி முகாமில் - போராளிகள் ஓய்வு நாள் ஒன்றில் ஒன்றாகக் கூடுவார்கள். தங்கள் மனவுணர்வுகளை, எதிர்பார்ப்புகளை கலைவடிவங்கள் மூலம் வெளிப்படுத்துவார்கள். சிலாவத்துறை இராணுவ முகாம் தாக்குதல் நடவடிக்கைக்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு கூட, அங்கு ஒரு கலை நிகழ்ச்சி நடந்தது. புதிய போராளிகள் டாம்போவை பாடச் சொன்னார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும் தலைவரைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கரும்புலி மேஜர் டாம்போ

(கா. தயாபரன்,
முழங்காவில், மன்னார்.)

பற்றிப்பாடும் ஒரு பாடலைத்தான் அவன் பாடுவான் என்று. ஆனாலும் அவனின் குரலில் அந்தப் பாடலைக் கேட்க அவர்கள் விரும்பினார்கள். அவனும் பாடினான்.

'பிரபாகரன் நினைத்தது நடக்கும் - அவன் புலிப்படை நெருப்பாற்றை நீந்திக் கடக்கும்' கவிஞர் காசி அண்ணனின் அந்தப்பாடல் இளைய போராளிகளின் மகிழ்ச்சிக் கூச்சல்களிடையே அவன் குரலில் ஒலித்து ஓயும்.

முகாமின் நடுவே நிற்கும் பெரிய மரத்தின் நிழலின் கீழ்த்தான் கலை நிகழ்ச்சிகள் நடப்பது வழமை. அந்த மரத்திற்கும் டாம்போவைப்பற்றி - அவனின் மனவுணர்வுகளைப்பற்றி நன்றாகவே தெரியும். அதன் அடிவேரில் இருந்துதான் அவன் தோழன் ஒருவனுக்கு தன் துயரம் நிறைந்த குடும்பப் பின்னணியைக் கூறினான். தயங்கித் தயங்கி வந்த அவனின் சோகமான குரல் இலகுவாக மறக்கக் கூடியதல்ல.

எங்கள் வீட்டில் மூன்று ஆண்களுக்கு பின்தான் கடைசித் தங்கச்சி பிறந்தாள். நான்தான் மூத்த பிள்ளை. எங்களுக்குச் சின்ன வயதாக இருக்கும்பொழுதே அப்பாவிற்கு இயலாமல் போய்விட்டது. அம்மாதான் கூலி வேலை செய்து கஷ்டப்பட்டு எங்களை வளர்த்தா. நான் வளர்ந்ததும் அம்மாவின் சுமையைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினேன்.

என்னைவிட தம்பிகளும் - தங்கையும் படிக்க வேண்டுமென்று நினைத்தேன். நாங்கள் எல்லோரும் ஒரு கூட்டின் பறவைகள் போல் பாசம் நிறைந்தவர்களாக இருந்தோம்.

எனது தேசத்தில் நிகழ்ந்தவைகள் என்னை ஒரு போராளியாக மாறச் சொன்னது. குடும்பத்தின் நிலையோ தடுத்தது. ஆனாலும் நான் மண்ணுக்காக வாழ்வதென முடிவெடுத்தேன். 1986இன் நடுப்பகுதியில் இயக்கத்தில் இணைந்து கொண்டேன்.

அதன் பின்பும் சில தடவைகள் வீட்டிற்கு சென்றேன். ஆனால் அண்மையில்தான் என் வீட்டில் வேதனை நிறைந்த சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

தம்பிக்கும் தங்கச்சிக்கும் இடையே சின்னதொரு பிரச்சனை, அம்மா தம்பிக்கு அடித்து விட்டா. தன்னால் அண்ணனுக்கு அடி விழுந்து விட்டதே என்ற வேதனையில் என் தங்கை அறிவீனமாகத் தன் உயிரை அழித்துக் கொண்டாள். சொல்லிக் கொண்டிருந்த டாம்போ மௌனமானான். சத்தமற்ற அந்தக் கணங்களில் தன்னைத் திடப்படுத்திக் கொண்டே தொடர்ந்தான்.

அதன் பின்பு கடலில் பயணம் சென்ற என் தம்பியை கடற்படை பிடித்ததாகச் சொன்னார்கள். எங்கள் தேசத்தில் கைது செய்யப்படுபவர்கள் காணாமல் போனதொன்றும் அதிசயமில்லைத்தானே.

என் மூன்றாவது தம்பியை அம்மாவே அழைத்து வந்து இயக்கத்தில் சேர்ப்பித்ததாகக் கேள்விப்பட்டேன். அவனும் இந்தப் பயிற்சி முகாமில்தான் ஓடித்திரிகின்றான்.

இப்போதெல்லாம் வீட்டில் எனது அம்மாவும் - அப்பாவும் தனியாக ஏக்கத்தோடு ஏதோவொரு எதிர்பார்ப்போடு இருப்பார்கள் என நினைக்கின்றேன். எனச் சொல்லி முடித்தான்.

டாம்போ மென்மையான இரக்கம் நிறைந்த சுபாவமுடையவன். உண்மையில் சொல்லப்போனால், அவன் ஒவ்வொரு போராளியையும் தன் சகோதரர்களாக நினைத்துத்தான் பழகினான்.

இந்தியப்படை இம்மண்ணை ஆக்கிரமித்திருந்த நேரம், ஒருமுறை இவன் காலில் காயமடைந்திருந்தான். அந்நேரம் வைத்தியத்திற்காக தமிழ் நாட்டிற்கு அனுப்பப்பட்டான். ஒரு நிலையில், தமிழ் நாட்டில் வைத்து எமது போராளிகள் கைது செய்யப்பட்ட பொழுது டாம்போவும் கைது செய்யப்பட்டான். காலப்போக்கில் தமிழீழத்திலிருந்த இந்தியச் சிறைகளிற்கு அவர்கள் மாற்றப்பட்டார்கள்.

வவுனியா நகரத்தின் மத்தியில் பலத்த பாதுகாப்புடன் சிறை வைக்கப்பட்டிருந்த புலிப்படைப் போராளிகள் சிறையை உடைத்துத் தப்பி வந்தார்கள். டாம்போவும் அச்சிறையுடைப்பின் போது தப்பி வந்தான். அதன் பின்பு இந்தியப் படை இந்த மண்ணில் இருக்கையிலும் அவர்கள் சென்ற பின்பும் டாம்போ போராட்டத்தின் வளர்ச்சிக்காகக் கடுமையாக உழைத்தான்.

கரும்புலிகளைப் பற்றி, அவர்களின் உறுதியை, ஒப்பற்ற தியாகத்தைப்பற்றி எல்லாம் பெரிதாக மதித்துக் கதைக்கும் டாம்போ ஒன்றில் மட்டும் உறுதியாக இருந்தான்.

"இந்த மண்ணின்ர விடுதலைக்காக, யாராவது ஒருவர் மரணிப்பதாக இருந்தால் முதலில் அது நானாக இருக்க வேண்டும். என்றுதான் நான் விரும்புகின்றேன். மன்னார் மண்ணில் கரும்புலித் தாக்குதல் என்றால், அதனை நான்தான் செய்வேன்" என்று தெளிவாகச் சொல்வான்.

அவனின் விருப்பமும் நிறைவேறும் நாள் வந்தது. சிலாவத்துறை இராணுவ முகாம் மீது கரும்புலித் தாக்குதல் நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

டாம்போவின் வேண்டுதல் ஏற்கப்பட்டது. தன் மரணத்தின் நாளை உறுதிப்படுத்திக் கொண்டான். முகாம் தாக்குதலிற்குரிய தயாரிப்புகளில் அவனும் கலந்து கொண்டான். இடையில் ஒருநாள் தன் கிராமத்திற்குச் சென்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன் தாயையும், தந்தையையும் சந்தித்தான். திடீரென அம்மாவை அணைத்துக் கொஞ்சினான். தன் மகனின் விசித்திரமான நடவடிக்கையைப் பார்த்து தாய் சிரித்தாள். தன் சிரித்த முகத்தின் இறுதித் தோற்றத்தை அவர்களுக்குக் காட்டிவிட்டு அவன் திரும்பினான்.

வேலைகளின் நடுவேதான் நேசித்த போராளிகளையும் இடை இடையே சந்தித்தான். தாக்குதலுக்கு இரண்டு நாட்களுக்கு முன் பயிற்சி முகாமிற்கு வந்தான்.

புதிய போராளிகளிடம், நான் கரும்புலியாகச் செல்கிறேன் எனக் கூறினான். டாம்போ அண்ணை பகிடி விடுகிறார் என எல்லோரும் சிரித்தார்கள். அவனும் சிரித்தான். இரவு துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வேட்டைக்கு சென்றான். எல்லாம் வழமைபோலவே நடந்தது. இவன்தான் கரும்புலியாகச் செல்கின்றான் என்று சொன்னால் எவருமே நம்பமாட்டார்கள்.

விடிந்ததும் தன் தம்பியை அழைத்து, "நான் போறன் வருவனோ தெரியாது" என்றான் டாம்போ. அவனது தம்பிக்கு எதுவுமே விளங்கவில்லை. தன் அண்ணனை மரியாதையுடன் பார்த்தபடியே விலகி நின்றான்.

சிரித்தபடியே டாம்போ வெளியேறினான். முகாமின் வாசலிற்குச் சென்றவன் திரும்பி முகாமை நீண்ட நேரம் பார்த்தான்.

போராளிகளிற்கு சிலர் கைகளைக் காட்டினர். கையை அசைத்தபடியே அவன் தொடர்ந்து நடந்தான்.

19ஆம் திகதி காலை நேரம் டாம்போ தன் நண்பன் ஒருவனுடன் இருந்தான். தாக்குதலில் தனக்கு வழங்கப்பட்ட கடமையைப்பற்றி அவன் நண்பன் சொல்லிக் கொண்டிருந்தான். டாம்போ மகிழ்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனிற்காக அந்த நண்பன் சோகமாக இருந்தான்.

தன் நண்பனிடம் "இப்படி ஒரு சா ஒருதருக்கும் வராது" என உறுதியாகச் சொன்னான் டாம்போ. இரவு வரும்வரை அவர்கள் காத்திருந்தார்கள்.

அன்று எல்லாப் போராளிகளிற்கும் தன் கையாலேயே உணவு தரவேண்டும் என டாம்போ நினைத்தான் போலும். பகலுணவை தன் தோழர்களுக்கெல்லாம் எடுத்துக் கொடுத்தான். அவர்கள் சாப்பிடுவதை ரசித்தபடியே பார்த்துக் கொண்டிருந்தான். போராளிகளின் கண்கள் கலங்கியிருந்தன. அன்று எவருமே முழுமையாகச் சாப்பிடவில்லை.

டாம்போ தனிமையாய் இருக்கும் பொழுது அந்த போராளி நண்பன் அருகில் வந்தான். "வெடிமருந்து வண்டியை விட்டவுடன் இறங்கி ஓடி வந்து விடு" என்று மெதுவாகச் சொன்னான்.

"நான் திரும்பி வரமாட்டேன், என்னால் முடிந்தளவு உள்ளே சென்று முகாமின் சுவரோடு மோதுவதுதான் எனது நோக்கம்" என்றான் டாம்போ. அவனின் உணர்வுகளை அந்த நண்பன் விளங்கிக் கொண்டான். அவன் அதன்பின் மௌனமாகிப் போனான்.

இரவு வந்தது..

சிலாவத்துறை இராணுவ முகாம் மீதான தாக்குதல் ஆரம்பமானது. சில மணித்துளிகளில் உதவி அரசாங்க அதிபர் விடுதியில் இருந்த சிறிய இராணுவமுகாம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது.

அந்தப் பக்கமாக இருந்த கொண்டச்சி வீதியால்தான் வெடிமருந்து நிரப்பப்பட்ட வண்டி இராணுவ முகாமினுள் செல்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வண்டி செல்வதற்காக போராளிகள் வீதியை செப்பனிட்டுக் கொண்டிருந்தார்கள், அந்த இடை நேரத்திலும் டாம்போ தாக்குதலின் பொழுது காயமடைந்த போராளிகளைத் தூக்கி வருவதிலும், சிகிச்சையளிப்பதிலும் ஈடுபட்டிருந்தான்.

வண்டி செல்வதற்குரிய நேரம் வந்தது.

டாம்போ வெடிமருந்து வண்டியின் அருகில் வந்தான். பக்கத்தில் நின்ற தோழனை இறுக அணைத்து முத்தமிட்டான்.

"நானும் கொஞ்சத்தூரம் வாறன்" என்றான் அத்தோழன்.

"வேண்டாம், ஏதும் தவறென்றாலும் ஏன் வீணா எல்லோரும் சாவான்" என்று சொல்லியபடியே வண்டியில் ஏறி இயக்கினான் டாம்போ. வண்டியின் அருகில் ஓடிவந்தபடியே "விட்டு விட்டு ஓடி வரலாம்தானே" என்று தயங்கித் தயங்கிக் கேட்டான் அந்தத் தோழன்.

"சரி பார்ப்போம்" டாம்போவின் இறுதி வார்த்தைகள் இவைதான்.

வெடிமருந்து வண்டி உறுமிக் கொண்டு இராணுவ முகாமை தேடி ஓடியது. அந்த வண்டியை நோக்கி இராணுவத்தினரின் முழு ஆயுதங்களும் குறிவைத்து இயங்கின. குறித்த இலக்கிற்கு முன்பே அந்த வண்டி வெடித்துச் சிதறியது.

ஒளிப்பிழம்புடன் கரும்புகையொன்று வானில் எழுந்து கலந்தது. கடற்கரைகளில், வயல் வெளிகளில் - தூரத்துக்காட்டின் ஓரங்களில் நின்ற போராளிகளின் நெஞ்சங்களை வெடியோசை பாரமாக அழுத்தியது. அவர்கள் நேசித்த டாம்போவின் வீரச்சாவுச்செய்தியை அந்தச் சப்தம் காதோடு வந்து சொல்லிச் சென்றது.

ஜஸ்மின்

ஆண்குரல்:- "அம்மா.... எங்களுடைய தாயகமண்ணின் மீட்சிக்காக.... என்னால் செய்யக்கூடிய தியாகம் எதுவோ.... அதைத்தான் நான் செய்யப்போகிறன்.. அதை மனமகிழ்வோடும் பூரண சந்தோஷத்தோடும் செய்கின்றேன். உங்களுக்கு இது ஜீரணிக்க முடியாத வேதனையாய்த்தான் இருக்கும். எனவே எங்களின் சாவுக்காக கண்ணீர் வடித்து கவலையடைவதைவிட நீங்கள் அதை ஏற்றுக்கொள்வதே எனக்கு நீங்கள் செய்யும் இறுதிக்கடனாய் ஆத்மாசாந்தியாய் இருக்கும் அம்மா..... உங்கள் மகன் நினைவுக்கல்லில் நிமிர்ந்து நிற்பான்... நீங்கள் சுவாசிக்கும் காற்றில் நனையும் மழைத்துளியில் எல்லாம் உங்கள் மகன் கலந்திருப்பான்...."

கரும்புலி மேஜர் அறிவுக்குமரனின் அன்புசுமந்த வரிகள் இவை... தன்தாயை நேசித்தது போலவே... தன் தாயகத்தையும் பூசித்த தேசப்பற்றாளன்.....

தாய்:- "என்ரபிள்ளை... என்ர பிள்ளை எவ்வளவு கஷ்டங்களைத் தாங்கிப்படிச்சது... இப்ப.... இப்ப... அதுக்குப்பலனாய் ஒரு உத்தியோகம் கிடைச்சிருக்கு.. கேள்விப்பட்டால் பிள்ளை எவ்வளவு சந்தோஷம்படுவான்.. ம்... என்ர பிள்ளையின்ர கெட்டித்தனத்துக்கு பரிசு கிடைச்சிருக்கு...





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பகலில் ஒளிரும் விண்மீன்கள்

மகன்:- "அம்மா.......... என்னை எங்கையும் தேடவேண்டாம்... நான் எல்லோருக்குமாகப் போராடப்போகிறேன்........."

குரல்:- அவன் தன்னுடையதும்... தன் குடும்பத்தினதும் முன்னேற்றத்தைவிட தேசத்தின் விடுதலையே பெரிதென்று சிந்தித்தான். "கொற்றவன் தம்மைக் கண்டுகண்டுள்ளம் குளிர எம் கண்கள் குளிர்ந்தனவே" என்று எல்லோரும் எண்ண இந்தத் தேசத்தின் புதல்வனாய் தன்னை அர்ப்பணித்துச் சென்றவன் அறிவுக்குமரன்.

அறிவுக்குமரன் மென்மையின் உறைவிடம்... அவன் மென்மையாய்... புன்னகை சுமந்து திரிந்தாலும் அவனுக்குள்ளே எப்போதும் ஓர் எரிமலை கனன்று கொண்டே திரிந்தது... தனக்கு கிடைத்த எல்லாவற்றையும் விட.... தேசியத்தலைவரையும்.... போராளிகளையும்.... மக்களையும் உன்னத உறவுகளாய் நேசித்தான்... தான் எத்தனை துயரங்களை துன்பங்களை அனுபவித்தாலும் தன்சக போராளிகளோ.... தன் நேசத்துக்குரிய மக்களோ துன்பப்படுவதை அவன் தாங்கிக் கொள்ளமாட்டான்...


"தேசத்தைச் செதுக்கியவர்களே....
இன்று உங்களுக்காய் கல்லறையில்
நினைவுக்கல்லில் உங்கள் பெயர்களைச்
செதுக்குகின்றோம்.
செதுக்கப்படாமலும் இன்னும் சிலர்
வெளித்தெரியாமலும்... எங்கள் மனதில் மட்டும்.
உண்ணாமல் பசிகிடந்து... உறங்காமல் விழித்திருந்து
கால்வலிக்க காடுதாண்டி
கைகள்வலிக்க கடல் தாண்டி
ஈழம் வேண்டிடப்போனீர்... நாம்...
இதயம் விம்மிட நிற்கின்றோம்...
என்று இடியாய்க் கனன்ற கரும்புலிகளை எண்ணி இதயத்தில் துடித்தவன் அறிவுக்குமரன்....





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெளிந்த சிந்தையோடு போராட்டத்தில் இணைந்துகொண்ட அறிவுக்குமரன்... தன்னை அழித்தெனினும் தன் தேசத்து மக்களுக்கு சுதந்திரமான வாழ்வை.... கௌரவமான வாழ்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனத்துடித்து நின்றவன்... கடுமையான பயிற்சிகளையெல்லாம் தன்மக்களின் விடுதலைவாழ்வை எண்ணி ஏற்றுக் கொண்டவன்...

அவன் முதலில் கந்தகப்பொதி சுமந்தகளம் ஜெயசிக்குறு சமர்க்களம் விடுதலைப்புலிகள் பலமிழந்திருப்பதாய் கற்பனைபண்ணி விடுதலைப்புலிகளை அழித்துவிடலாமென்ற நம்பிக்கையோடு எதிரி நன்கு திட்டமிட்டு தொடக்கிய சமர்முனை ஜெயசிக்குறு. இந்த ஜெயசிக்குறு மீதான எதிர்ச்சமர்க்காலத்தில்... 10.06.97 அன்று தாண்டிக்குளம் படைத்தளம் மீதான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கரும்புலி ஊடறுப்புத் தாக்குதலும் நடந்தது. இந்தத்தாக்குதலில் அறிவுக்குமரனும் பங்கேற்றான்.

அந்த ஜெயசிக்குறு மீதான எதிர்ச்சமர்முனையில் தாண்டிக்குளத்தில் வரலாறாய் நிலையான தன் சககரும்புலிகளின் பிரிவு இவனை நெருப்பாய்ச் சுட்டது. தன்னோடு ஒன்றாயிருந்து.. ஒன்றாய் உண்டு... ஒன்றாய் வந்தவர்கள் வரலாற்றில் வரலாறானபோது... இவன்மனம் பெருமையுடன் துயரமும் சுமந்தது.

1997ஆம் ஆண்டின் இறுதிநாட்கள்... ஒரு நாட்பொழுதில் அந்த மகிழ்ச்சிமிக்க சம்பவம் நிகழ்ந்தது. தாக்குதல் ஒன்றுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள கரும்புலிகளில் ஒருவனாய் அறிவுக்குமரனும் தெரிவானான். அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லை இல்லாமலிருக்க.... அந்தமகிழ்வை இரட்டிப்பாக்குவதுபோல தேசியத்தலைவர் அவர்களும்.... அவர்களைச் சந்தித்தார். தலைவரின் சந்திப்போடும்... அறிவுறுத்தலோடும்... ஆசிகளோடும் புறப்பட்ட அறிவுக்குமரன் உட்பட்ட கரும்புலி அணியினர் 02.01.1998 அன்று தமக்குரிய இலக்குள்ள இடத்தை வந்தடைகின்றனர்.

அதுவும் ஜெயசிக்குறு களமுனைப்பகுதிகளில் ஒன்றான கரிப்பட்டமுறிப்பு ஆக இருந்தது. அங்கிருந்துதான் ஜெயசிக்குறு நடவடிக்கைக்கான வான்வழி விநியோகத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான் எதிரி. அன்று அந்த விநியோகத்தளத்தையும்.... எதிரியின் உலங்கு வானூர்தியையும் ஒருசேர தாக்கி அழித்தார்கள் கரும்புலி அணியினர். தேசியத்தலைவனின் வழிகாட்டலில் எதிரியின் வானூர்தியையும், தளத்தையும் சிதறடித்தவர்களுக்கு உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.. இந்த துணிகரமான வெற்றியைப் படைத்துவிட்டு வந்தவர்களில் கரும்புலி மேஜர் அறிவுக்குமரனும் ஒருவன். அவனுடைய இயந்திரத்துப்பாக்கி அன்று பேசியவை வெறும் வார்த்தைகளல்ல.....

மீண்டும் கடுமையான பயிற்சிகள் அறிவுக்குமரன் சோர்ந்து போய் விடவில்லை.. தேசியத்தலைவரின் உற்சாகமான வார்த்தைகள் அவர்களை உந்தின. 01.02.1998 இல் இன்னொருகளமுனை ஆனையிறவுத் தளம்... அங்கே உப்பளமுகாம் அழிப்புக்காக நுழைந்த கரும்புலிகளில் அறிவுக்குமரனும் அடக்கம். அதிகாலை 1.15 இற்கு தாக்குதல் ஆரம்பமாகிறது, எதிரி கடுமையான எதிர்ப்புக்காட்டுகிறான். அந்த கடுமையான எதிர்ப்புகளின் மத்தியிலும் உப்பள முகாம்மீதான தாக்குதல் உச்சம் பெறுகின்றது.

கடுமையான காயங்களுக்குள்ளான கரும்புலி சபேசன் வெடியாய் அதிர்ந்து விடுகிறான். எதிரியும் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்வாங்குகிறான். கரும்புலி குமரேசுவுக்கும் காயம்......... கால்கள் இரண்டும் செயலிழந்துவிட்டன.. அவனும் வெடியாகிப் போகிறான்... எஞ்சியோரைப் பின்வாங்கச் சொல்கிறான் இந்தத் தாக்குதலுக்கு தலைமைதாங்கிய குமுதன்.

அறிவுக்குமரன் பின்வாங்கி வந்தது இன்னமும் மெய்சிலிர்க்கும் நினைவுகளாகவே உள்ளன. உயிரோடு மீண்டுவந்து நடந்தவற்றை ஏனைய போராளிகளிடம் சொல்லிவிடுவதற்காக அவன் அனுபவித்த இன்னல்கள் எல்லாம் வார்த்தைகளுக்கும் வரிவடிவங்களுக்கும் அப்பாற்பட்டவை... எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் உயிர்பறிக்கும் ஆபத்துக்கள் காத்திருந்தன. சாதாரண மனிதப்பிறவிகளால் நினைத்துப்பார்க்கமுடியாத அந்த ஆபத்துக்களையெல்லாம் கடந்து அவன் தன் தோழர்களை வந்தடைந்தான். அவன் கடந்த ஒவ்வொரு கணமும் மரணம் அவனைத்துரத்திக் கொண்டிருந்தது. ஒவ்வொரு தடவையும் மரணத்தை நெஞ்சிலுதைத்து வீழ்த்திவிட்டு அவன் நிமிர்ந்தான்.

இப்போது தாக்குதலுக்கு தலைமைதாங்கிவந்த குமுதனுக்கும் உடல்முழுக்க காயம்.
“நான் சாச்சை இழுக்கப்போறன்.. நீங்கள் போங்கோ....”
அந்தவார்த்தைகளும் அறிவுக்குமரனுக்குள் துழைந்தன
அறிவுக்குமரன் குமுதனைப்பார்க்கிறான்.....

“நீங்கள் வெளியிலை போகோணும்.. உங்களுக்குள்ளை கிடக்கிற முழுத்தகவல்களையும் போய்ச்சொல்லவேணும்.. அது... இன்னொரு சண்டை செய்யிறதுக்கு உதவும்...”

சிறிது நேரத்தில்... அந்த வெடிச்சத்தம் பெரிதாய் ஒலிக்கிறது.. இப்போது அறிவுக்குமரன் மட்டுமே.... அறிவுக்குமரன் தன்னை எப்படியோ பாதுகாத்துக் கொண்டு... எத்தனையோ இடர்களைத் தாண்டி வெளிவருகிறான்.. மரணத்தைத் துரத்தி தேசத்தின் புதல்வனாய் வெளியே வந்தவன்.... தன் உணர்வுகளை கவிதை வரிகளாக்கினான்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“இளமையை இதமான உணர்வுகளை
இனியசுகங்களை ஒதுக்கியவர்களே....
தமிழர் எம் தேசத்தை செதுக்கியவர்களே..
இன்று உங்களுக்காய் கல்லறையில்
நினைவுக்கல்லில் உங்கள்
பெயரைச்செதுக்குகின்றோம்...
செதுக்கப்படாமலும்... இன்னும்சிலர்
வெளித்தெரியாமல் எங்கள் மனதில் மட்டும்”

அறிவுக்குமரன் ஒருபோதும் ஓயாத புயற்காற்று, ஆனையிறவுப் படைத்தளப்பிரதேசத்துக்குள்.. வேவுப்பணிகளில் ஈடுபட்டான்.... வேவுப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது... கையில் காயமுறுகிறான்.. ஆனாலும்... காயம் மாறமுன்பு... மீண்டும் கடும் பயிற்சிகளில் ஈடுபடுகிறான்...

10.10.1999 அன்று அவன் திருமலைக்கு செல்லவேண்டும்... அங்கும் அவனது கடமைகள் இருந்தன... அன்று - முதல் பெண்மாவீரர் இரண்டாம் லெப்டினன் மாலதியின் நினைவு நாளில் தன் உள்ளத்து உணர்வுகளைக் கொட்டி அனைவருடனும் பழகுகின்றான்.. அவனது அன்பில் எல்லோரும் திளைத்திருக்க... கையசைத்து படகேறுகிறான் அறிவுக்குமரன்.

திருமலையில்... அவனுடைய பணிகள் தொடர்ந்துகொண்டிருந்தன.... இரவும்பகலுமாய் அவன் உழைத்தான். கால்களிலும், கைகளிலும் உள்ள விழுப்புண்கள் வேதனை கொடுத்தாலும்... அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆறுமாதங்களாய் அவனது அயராத பணிக்கு நடுவே.. அந்த அழைப்பு... அவனை வன்னி பெருநிலப்பரப்புக்கு வருமாறு கேட்கிறது... அவனுக்குள் ஆனந்தம்... மீண்டும் வன்னி மண்ணைப் பார்க்கப்போகும் பரவசம்... அருகே நின்ற தோழனின் கரங்களைப் பற்றி தன் அன்பைத் தெரிவித்தவன்... அவனிடம் இரு கைக்குண்டுகளையும் வாங்கிக் கொண்டு புறப்படுகிறான்.

11.04.2000 அன்று.... கடலிலே படகு அறிவுக்குமரனையும், துணைப்படைவீரன் ஜோன்சனையும் ஏற்றிக்கொண்டு விரைகிறது... அறிவுக்குமரனின் முகத்தில் ஆனந்தப் பூரிப்பு. பழைய தோழர்களின் நினைவுகள் கொடிவிட்டுப்பறக்கின்றன..

கடலில் எதிரியோடு மோதல் வெடிக்கிறது... அந்த மோதலில் வீரவரலாகிறான் அறிவுக்குமரன்... அறிவுக்குமரனோடு... துணைப்படைவீரன் ஜோன்சனும், அறிவுக்குமரன் கரும்புலி மேஜர் அறிவுக்குமரனாய்.. எல்லோர் மனங்களிலும் நிறைகிறான்... அறிவுக்குமரனுக்குள் ஆயிரம் உணர்வுகள் இருந்தன. அவன் சிறந்த படைப்பாளியாகவும் இருந்தான்.... கவிதைகளை, பாடல்களை, சம்பவங்களை புலிகளின்குரல் நேயர்களுக்காக எழுதினான்... தன்னுடைய அனுபவங்கள்.. தன்னோடிருந்த தோழர்களின் சாதனைகள், அவர்களின் உள்ளத்து உணர்வுகள் மக்களை சென்றடைய வேண்டும் என்று அவன் எண்ணினான்.. புலிகளின்குரல் வானொலியில் அவனுடைய எண்ணங்களும், சிந்திப்புகளும் ஒலிபரப்பாகின.

அறிவுக்குமரனை திருமலைக்கடற்பரப்பு தன்னுடன் வாரி அணைத்துக் கொண்டது. அவன் சாதித்துவிட்ட சாதனைகள் எங்களோடு நிறைந்திருக்கின்றன. அவனின் இலட்சியமும் இதயக்கனவுகளும் எங்களோடு ஒட்டியனவாய் என்றுமுள்ளன.

**சி. கண்ணம்மா**



# உயிராயுதம்

விழிகளிலே கனல் கொண்டு
நெஞ்சினிலே உரம் கொண்டு
கறுப்பு யூலை தான் நினைந்து
கரிய புலி ஆகி நின்றீர்

மில்லர் அண்ணா வழி நின்று
மீட்டிடுவீர் ஈழமண்ணை
கல்லறைகள் கேட்காமல்
காவியமாய்ப் போய்விடுவீர்

இடியன் மீதேறி நின்று
இலக்குத் தேடி அடைவீர்கள்
ஆழ ஊடுருவி அங்கும் வெடிப்பீர்கள்

எமனுக்கே தேதி சொல்வீர்
எதிரிக்கும் சேர்த்துச் சொல்வீர்

ஆடிக்கலவரத்தில் ஆனந்தக் கூத்தாடி
மாறி மாறி ஆட்சி ஏறி
மனிதத்தைக் கொன்றவரே
ஆடி பிறந்துவிட்டால்
அடி வயிறு கலக்குதாமே
அதுபோதும் எங்களுக்கு
உங்களுக்காகவே - இவர்
உருவெடுத்தார் உயிராயுதமாய்.

**பே.சுகந்தன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# படகுக்காவி(டொக்)

அலையிசை

அந்த நடவடிக்கை திட்டமிட்டது தான். எதிரியின் மூர்க்கமாக நகர்வால் வன்னி மண் சின்னாபின்னமாகிக் கொண்டிருந்த காலம் அது. முப்படைகளின் நகர்வுகளையும் மரபணிபாய் தோற்றம் பெற்றுக்கொண்டிருந்த எமது அணிகள் எதிர்த்துப் போரிட்டுக்கொண்டிருந்தன.

நாளும் எல்லைக் காவலரண்களில் வீரச்சாவுகளும், விழிப்புண் அடைபவர்களினதும் பட்டியல்கள் நீண்டுகொண்டிருந்தன.

வெற்றிடங்கள் அடைக்கப்பட வேண்டியவையே. இல்லாது போனால் எதிரி எம் மண்ணை, மக்களை ஆக்கிரமித்து விடுவது தவிர்க்க முடியாது போய்விடும்.

வெற்றிடங்களை நிரவ தென்தமிழீழத்தில் இருந்து படையணிகளை கடல்வழியாக நகர்ந்துவதென்று முடிவாகிற்று.

எதிரிக்கு கடல்வழிப்பாதை எவ்வளவு அவசியமோ அதைப்போல் தான் எமக்கு என்பதையும் எதிரியும் உணர்ந்திருந்தான்.

நேர காலமின்றி கொக்கிளாய் தொடங்கி தென்தமிழீழக் கடல் எல்லையோரக் காவலரண்கள் வரை விழிப்பாகவே செயற்பட்டுக்கொண்டிருக்கும். கூடவே துல்லியமாக இலக்குகளை இனம் காட்டும் ரேடார்கள் இயங்கும். அதைப் போலவே கடலில் அசையும், கலங்களும்.

கடல் வழிப்பாதை என்னவோ இறுக்கம்தான். சண்டை செய்தென்றாலும் புடவைக்கட்டில் இருந்து போராளிகளை முல்லைத்தீவிற்கு நகர்த்துவதென்று முடிவாகிற்று.

இதற்காக கடலிறக்கும் பணிக்கான சண்டைப்படகுகளும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விநியோகப்படகுகளும் தயார்ப்படுத்தும் வேலைகள் வேகமாக இயக்கம் பெற்றிருந்தன.

புளியமர நிழலில் நின்றிருந்த சின்னவனின் கரும்புலிப் படகும் இணைக்கப்பட்டிருந்தது. அனைத்துப் போராளிகளும் தமக்குத்தரப்பட்ட பணியினை உணர்ந்து செயற்பட்டனர்.

விரிக்கப்பட்டிருந்த வரைபடத்தின் முன் முளைவிட்டிருந்தது கடற்கலங்கள். அவற்றினது நகர்வுப் பாதைகள் தெளிவாக குறிக்கப்பட்டிருந்தது.

விநியோகப்படகுகளில் வரும் போராளிகளிற்கு எந்த விதமான இடையூறுமற்று அவர்களைப் பாதுகாப்பாகக் கரையேற்ற வேண்டும்.

அதுவும் எதிரி விரித்திருக்கும் வலைப்பின்னல் கண்காணிப்பு, அதிவேகக் கலங்களை ஊடறுத்து.

வரைபடம் சொன்ன சேதியினை உள்வாங்கிய போராளிகளையும், படகுகளையும் சுமந்தவாறு டொக்குகள் பாதைகளால் கடற்கரையை நோக்கிப் பவனி வந்தது. சண்டைக்குத்தான் படகுகள் கடற்கரையை நோக்கி அசையும் என்பதை அறிந்திருந்த மீனவ கிராம மக்கள் விழிகள் விரிய போராளிகளைப் பார்த்தார்கள்.

விழி விரிப்பில் போராளிகளான அவர்கள் உறவுகளும் வந்தார்கள். கூடவே அவர்களது நேசத்திற்குரிய போராளி முகங்களும் தெரிந்தன.

அம் மக்களது உணர்வுகள் மௌனமாக கடற்களமாடப் போகும் போராளிகளது நலன்களை வேண்டியிருக்கும்.

ஒன்று, இரண்டு, மூன்றென தொடர் வரிசையில் படகுகளை கடலிற்குள் இறக்கி விட்டு படகுகளை சுமந்த டொக்குகள் வெறுமையாகின.

களமாடி வரும் படகுகளை ஏற்ற அவைகளும் கரையில் காத்திருக்கும்.

முல்லைத்தீவிலிருந்து, செம்மலையைத் தாண்டி அசையும் படகுகள், இருளை ஊடறுத்து, இலக்குகளாய் ரேடார்களில் பகைவனிற்கு இனம்காட்டிக் கொண்டிருக்க.

பகைக்கலங்கள் தயாராகிவிட்டன. அக்கடற்களத்தில் பகைக்கலங்களே வலிமை பொருந்தியவை. என்றாலும் எமக்கான தேவைகள் அதிகம் என்பதால் எதிரியோடு எதிர்த்து என்றாலும் பணியை முடிக்க வேண்டும். எமக்கும் எதிரிக்குமான தூரங்கள் குறையைக் கொக்குத்தொடுவாய்க்கு நேரே எமது படகுகளை எதிரி வழிமறிக்க ஆரம்பித்து விட்டான்.

நெருப்புக்கு கதிர்கள் ஒலியோடு எரியத் தொடங்கிவிட்டன. விநியோகப் படகுகள் தங்களது இலக்கு நோக்கி நகர, அவற்றை மறிக்கும் ஆவேசத்தோடு பகைக்கலங்கள்.

அக்கலங்களை அடித்து விரட்டியவாறு சண்டைப்படகுகள் விநியோகப் படகணிகள் முன்னேறப்பாதை அமைத்துக் கொடுத்துக்கொண்டிருந்தன.

புடவைக்கட்டுக்குள் போராளிகளைப் பக்குவமாய் ஏற்றும் விநியோகப் படகுகளை பாதுகாத்தவாறு, எதிரிப்படகுகளை அடித்து விரட்டிய போது சண்டைப்படகுகளிற்கும் எதிரிக்குமான தூரம் 5 கிலோ மீற்றராக மாறி இருந்தது.

எட்ட நின்றும் எதிரி சுட்டுக்கொண்டிருந்தான் அசையும் விநியோக அணிகளை ரேடாரில் இனம் கண்டு அவற்றைத் தாக்கப் பாய்ந்தோடும் பகைக் கலங்களை மறித்து சண்டையிட்டவாறு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தன. சண்டைப்படகணிகள்.

எதிரியின் கலங்களும் எமது சண்டைப்படகுகளும் கிளித்தட்டு மறித்துக் கொண்டிருக்க எவ்விதமான இடையூறுமின்றி போராளிகள் முல்லையில் தரையிறங்கிக் கொண்டிருந்தார்கள்.

இருள் கவிழ்ந்த நேரத்தில் இருந்து நடுச்சாம நேரத்தையும் தாண்டி புடவைக்கட்டிலிருந்து செம்மலை வரையான கடற்பரப்பு அதிர்ந்து கொண்டேயிருந்தது.

பணிபூரணமாகிக் கொண்டிருந்த தருணம் பகைக்கும் மறக்க முடியாத பாடம் ஒன்றை கற்பிக்க வேண்டும் என்ற மூர்க்கத்தோடு எதிரிக்கலங்களை நெருங்கித்தாக்கிய போது, சந்தர்பத்திற்காகக் காத்திருந்த சின்னவன் அவனோடு சிறியும் இணைந்து, அகலக்கோடும் நெடுங்கோடும் இணைந்த புல்மோட்டைக் கடற்பரப்பில் P452 என்ற இலக்கமுடைய டோறவை சிதைத்து அழித்தார்கள்.

விடிவெள்ளி தோன்றியிருந்தது. பணியும் நிறைவடைந்திருந்தது;

இழப்போடு பகைவனும், நிறைவோடு போராளிகளும், முல்லைத்தீவுக் கரையில் படகுகளை டொக்குகளிற்கும் உரிய படகுகள் கரையேறிவிட்டன. கப்டன் சின்னவனையும், மேஜர் சிறியையும் அவர்களது கரும்புலிப் படகையும் காவித்திரிந்த டொக் தனித்து நின்றது.

டொக்கின் தனிமையில் பல உண்மைகள் உறங்கிக்கொண்டிருந்தன. தமிழீழ தேச விடிவிற்காய் படகுகளைக்காவும் டொக்குகள் படகுகளின் அர்ப்பணிப்போடு தனித்து விடுவது தவிர்க்க இயலாதது நிரந்தர விடிவிற்காக, நாளையும் டொக்குகள் வெறுமையாகவே கடற்கரையில் காத்திருக்கும்.

நன்றி: சுதந்திரப்பறவைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அதிவேக உந்துருளி படையணியின் பயிற்சிப் பாசறை நிறைவு நிகழ்வில் தேசியத் தலைவர் பங்கேற்பு

03 யூலை 2005

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய படையணிகளில் ஒன்றான இம்ரான் பாண்டியன் படையணியின் அதிவேக உந்துருளி படை அணியின் இரண்டாவது அணி 03.07.2005 அன்று தனது பயிற்சிப் பாசறையை நிறைவு செய்துள்ளது. வன்னியில் பிரத்தியேகமான இடம்மொன்றில் நடைபெற்ற இந்த நிறைவு விழாவில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு படையணியினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்த நூற்றாண்டின் இணையற்ற தலைவர்



வரலாற்றை தாமே படைத்து அதன் நாயகராகவும் விளங்குவோர் மிகச் சிலரே அந்தச் சிலருள் ஒருவரே இந்த நூற்றாண்டின் இணையற்ற தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்.

ஆயிரம் ஆண்டுகளாய் அடிமைப்பட்டு, மண்ணிழந்து, மதியிழந்து, மொழிகெட்டு, விழிகெட்டு, கடலிழந்து, கொடியிழந்து, கொற்றமிழந்து, பன்னூறு ஆண்டுகளாய் நோற்ற தவமே தமிழீழ விடுதலைக்காய் களமாடுகின்ற எங்கள் தானைத் தலைவரைத் தோற்றுவித்தது.

'இயற்கை எனது நண்பன்
வாழ்க்கை எனது ஆசான்
வரலாறு எனது வழிகாட்டி'

எனக் கூறி ஒரு கைத்துப்பாக்கியுடன் பதினான்கு வயதிலேயே விடுதலைக்கு அகரம் எழுதினார். இன்று உலகின் தலைசிறந்த கெரில்லாத் தலைவர்களில் ஒருவரான சேகுராவுடன் ஒப்பிட்டு பேசப்படும் நிலைக்கு உயர்ந்துள்ளார்.

இதற்கெல்லாம் காரணம் களத்திலே அவர் பெற்ற வெற்றிகளே. ஒப்ரேசன் லிபரேசன், பலவேகய, ஜெசிக்குறு, சத்ஜெய, ஓயாத அலைகள், ஆனையிறவுப் பெருஞ்சமர் என நீண்டு கொண்டே போகும் வெற்றியின் பட்டியல்கள். இந்த வெற்றிகளைக் குவித்திட அவர் நவீன உலகில் தமிழருக்கென நவீன போர் படையணிகள் தேவை என உணர்ந்தார். திருக்குறளில் குறிப்பிட்டது போல

'கூற்றுடன் மேல்வரினும் கூடி எதிர் நிற்கும் ஆற்றலதுவே படை' அதாவது வியூகம் அமைத்து எமனே சினம் கொண்டு வந்தாலும் எதிர் நின்று வெல்லக்கூடிய ஆற்றல் உள்ள படையணியை உருவாக்கினார். ஒரு கைத்துப்பாக்கியுடன் போராடப்புறப்பட்ட தேசியத் தலைவர் படிப்படியாக தீர்க்கமான அணுகுமுறையுடன் தரைப்படை, கவச எதிர்ப்புப்படை என தரைப்போர் ஆற்றல்களை விரிவுபடுத்தியதுடன், கடற்புலிகள், கரும்புலிகள், வான்புலிகள் என அறிமுகம் செய்தது மட்டுமல்லாமல் விடுதலை சார்ந்த கலை இலக்கியப்படைப்புக்களையும் உருவாக்கி வந்தார். தமிழீழ வளர்ச்சியின் பொருட்டு அவர் தொடாத துறைகளே இல்லை எனலாம்.

எமது தேசம் இன்று எழுந்து நிற்கின்றது. ஆண்கள், பெண்கள், முதியோர் என மக்கள் திரண்டு சிங்கள இராணுவத்தை எதிர்கொள்ளுகின்றனர். எமது தேசத்தின் சுதந்திரப்போர் பல்லாயிரம் சிங்கள இராணுவத்துப்பாக்கிகளாலும் நவீன கடற்படை விமானப்படைத் தளங்களாலும் தாக்கப்படும் போதெல்லாம் எமது சின்னஞ் சிறு தேசம் தனித்து நின்று போராடி வெற்றிகளைக் குவித்தது.

இதற்கு குறைந்த ஆட்தொகையும் குறைந்த ஆயுதவளங்களையும் வைத்திருந்தபடி அவற்றின் உச்சப் பயனை பெறும் வகையில் தலைவர் பிரபாகரன் செயற்படுத்தும் போர்த் திட்டங்களே இத்தகைய வெற்றிகளுக்குக் காரணமாக அமைந்தன. இதற்கு எடுத்துக் காட்டாக மிகக் குறைந்த போராளிகளோடு உலகின் நாலாவது பலம் பொருந்திய வல்லரசு ஒன்றின் நோக்கத்தை முடியடித்து உலகின் இணையற்ற தலைவர்களில் ஒருவரானார். இதனாலேயே விடுதலைப் புலிகளின் பரம வைரியும், தமிழீழத்தில் அமைதிப்படை என்ற பெயரில் நடத்திய கொடூரங்களுக்கு தலைமை வகித்தவருமான ஜே.என்.டிக்சித் பின்வருமாறு கூறினார்.

"பல குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதிலும் அந்த மனிதரிடம் ஒரு உள்ளீடான இலட்சிய நெருப்பும், கொள்கை உறுதியும் உண்டு என்பதை அறிமுகம் செய்வதிலும் அவரிடம் இயற்கையாகவே இராணுவத்திறனாய்வு அதற்கேற்ப காய்நகர்த்தும் மதிநுட்பமும் உடையவர்" என்றார்.

எனவேதான் அவரின் மதிநுட்பமான போர்த்திறனையும் இராஜதந்திரங்களையும் கவனித்தே தமிழீழ விடுதலைப்போரை ஆதரிப்போரும் சரி, எதிர்ப்போரும் சரி இன்று உலகில் உள்ள கெரில்லாத் தலைவர்களுள் எமது தேசியத்தலைவர் பிரபாகரன் ஆற்றலும் செயற்பாடும் மிக்க தலைவர் என ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கரிபால்டி பசி, தாகம், நீண்ட பயணம், மரணம் என்பவற்றையே தன்னால் வழங்க முடியும் என்றும் சுகமான நல்வாழ்வுக்கு உறுதியில்லை என்றும், தாய்நாட்டின் மீது உண்மையான பற்றுடையோர் தன்னோடு சேரலாம் எனக் கூறி அவ்வாறு தன்னுடன் இணைந்த போராளிகளைக் கொண்டு போர் நிகழ்த்தி இத்தாலியை ஒற்றுமை பூணவைத்தார். இன்று கழுத்தில் சயனற்றைக் கட்டிக் கொண்டு தம் தலைவர் ஆணையிட்டால் அதனை விழுங்கி மரணத்தை தழுவிக்கொள்ளவும் ஆயிரமாயிரம் மாவீரர்கள் அவர் பின் அணிவகுத்து நிற்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக சமாதானம், பேச்சுவார்த்தை என்ற பெரும் அரசியல் இராஜதந்திர முறையை ஏற்படுத்தி இன்று சர்வதேச சமூகத்தின் மத்தியில் பிரச்சினைக்குள் உள்வாங்கச் செய்து உலக சமூகத்தின் மத்தியில் பிரச்சினையை கையளித்துள்ளார். இந்த பெரும் நுட்பமான அணுகுமுறையை கண்ட மேற்குலக இராஜதந்திர அதிகாரிகள் வன்னியை வட்டமிட்டபடியே உள்ளனர். இதுவரை காலமும் உள்நாட்டுப்போர் என்று கூறிவந்த சிங்கள அரசின் கூக்குரல் இன்று நசுக்கப்பட்டு இரு தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடு என அங்கீகாரிக்கப் பட்டுள்ளது. இது எமது தலைவரின் மிக நுட்பமான இராஜதந்திர அணுகுமுறை. இன்றைய உலகின் போக்கிற்கு தம்மை மாற்றிக் கொண்ட ஓர் நிகழ்வு. எனவே இன்று சர்வதேச மத்தியஸ்தம் என்ற பெயரில் எமது தேசத்தின் விடுதலை இயக்கத்தின் கோரிக்கை உலக சமூகத்திடம் ஆதரவு பெறத் தொடங்கியுள்ளது.

இந்த வெற்றிகளின் பின்னால் எம் தேசத்து மாவீரர்களின் கடும் உழைப்பும் தியாகமும் தலைவர் பிரபாகரனின் மதிநுட்ப வழிநடத்தலும் உள்ளது என்பது வெள்ளிடை மலை. அதுவே அவரை இந்நூற்றாண்டின் இணையற்ற தலைவர்களில் ஒருவராக்கியது.

**சிந்துஜா ஓம்பிரகாஸ்** (ஜேர்மனி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேர்கண்டவர்: தி.தவபாலன்

## ஓவியர் புகழேந்தி

ஓவியர் புகழேந்தி தஞ்சை மாவட்டம் தும்பத்திக்கோட்டை கிராமத்தில் பிறந்தார். கும்பகோணம் ஓவியக்கல்லூரியில் மாணவனாக இணைந்து அவர் ஓவியம் பயின்றார். அந்தக் காலத்திலேயே அதாவது 1983ஆம் ஆண்டளவிலேயே இலங்கையில் ஈழத்தமிழருக்கு எதிரான இனக்கலவரம் வெடித்துக் கிளம்பியது. அந்த சம்பவம் ஓவியரின் மனதை ஆழமாக துயர்கொள்ளவைத்தது. ஆவணி மாதம் அளவில் ஓவியக்கல்லூரியில் இணைந்திருந்த அவர் ஈழத்தமிழருக்கு ஆதரவாக தமிழகத்தில் நடைபெற்ற மாணவர் போராட்டங்களில் கலந்து கொண்டார். பெரிய அளவில் எழுச்சியுடன் நடைபெற்ற அப்போராட்டத்தில் அவரும் துடிப்புடன் கலந்து கொண்டு உழைத்தார். தமிழகத்தில் ஈழத்தமிழருக்கு ஆதரவாக அக்காலத்தில் நிகழ்ந்த போராட்டம் அது. நீண்ட நெடிய போராட்டமாக விளங்கியது. ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் தமிழகமே ஸ்தம்பிக்கும் அளவில் அப்போராட்டம் நடைபெற்றது. தமிழகத்தில் 1965களில் எதிர்ப்பு போராட்டம் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டதற்கு பிறகு நிகழ்ந்த நீண்ட நெடிய ஒரு போராட்டமாக அது விளங்கியது.

அப்போது ஓவியத்தின் ஊடாகவும் இப்போராட்டத்திற்கு உதவ முடியும் என அவரது மனதில் எண்ணிக்கொண்டதாக கூறுகிறார். அவர் முதலில் கல்லூரியில் இணையும் போது விளம்பரப் பகுதியில் இணைய வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தார். அதுவே வருமானத்தை ஈட்டித்தரும் எனவும் பலர் கூறி இருந்ததையும் அவர் கருத்தில் கொண்டிருந்தாலும் பின்னர் அத்தகைய கருத்து நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு புதிய ஓவியப் படைப்புலகம் ஒன்றில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பல பரிசில்களையும், விருதுகளையும் வென்று மிகவும் குறிப்பிடத்தக்க ஓவியராக உயர்ந்துள்ளார். இன்று வரை அவரது ஓவியப் படைப்புலகமானது மக்கள் மத்தியில் பெரும் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. இவர் அண்மையில் தாயகத்திற்குப் பயணம் செய்து ஓவியக் கண்காட்சிகளை நிகழ்த்தினார்.

இந்த ஓவிய பயணத்தின் மூலம் அவர் பல பயிற்சிப் பட்டறைகளையும் நிகழ்த்தினார். இச்சந்தர்ப்பத்தின் போது எரிமலை சஞ்சிகைக்காக புலிகளின் குரல் பிரதம செய்தியாளர் தவபாலன் அவர்கள் ஓவியர் அவர்களை நேர்கண்டார்.



# ஓவியர் புகழேந்தியின் படைப்புலகும் தூரிகையின் மொழியும்

**ஓவியம் மீதான ஈடுபாடு தங்களுக்குள் எவ்வாறு எழுந்தது?**

தமிழீழ விடுதலைப் போராட்டம் என்னை சிந்திக்கத்தூண்டியது. ஒரு படைப்பாளனாக இருந்து இந்த போராட்டத்திற்கு உதவவேண்டும் என என்னை உந்தித்தள்ளியது. அப்பொழுது நிறைய புகைப்படங்கள் செய்திகள் நாள் தோறும் என்னை வந்து அடையும். அவற்றையெல்லாம் கேட்கின்ற பொழுதும் படிக்கின்ற பொழுதும் புகைப்படங்களையெல்லாம் பார்க்கின்ற பொழுதும் அதை நான் உள்வாங்கிக் கொண்டு அப்படுகொலைகளையெல்லாம் கலவரங்களையெல்லாம் வைத்து நிறைய ஓவியங்களை வரைந்தேன். அப்போது தமிழகத்தில் நடைபெற்ற ஊர்வலங்களையெல்லாம் பார்க்கும் போராளிகளுக்கு இவ்ஓவியங்களைக் காண்பிப்பேன். அப்போது அவர்கள் அவ்ஓவியங்களையெல்லாம் பார்த்து ஈர்த்து மேலும் சில வீடியோக்காட்சிகளையெல்லாம் எனக்குத் தந்தார்கள். நீண்ட நாட்கள் அந்த வீடியோ படங்களையெல்லாம் போட்டுப் பார்த்து மேலும் என்னை அந்த உணர்வுகளோடு ஒன்றிணைந்து உள்வாங்கிக் கொண்டு மேலும் மேலும் என்னுடைய படைப்பினை அந்த திசையை நோக்கி செலுத்தினேன். அந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரத்திலேயே என்னுடைய படிப்பு சம்பந்தமாகவும் நான் ஒரு முடிவுக்கு வந்தேன் விளம்பர கலைப்பிரிவில் சேர்ந்து ஒரு விளம்பர நிறுவனத்திலே ஓவியனாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலே இருந்த நான், ஒரு படைப்பாளனாக இருக்க வேண்டும் அப்படி இருந்து ஒரு சமூகப்படைப்பாளனாக வேண்டும் என்ற முடிவுக்கும் நான் வந்தேன். அத்தோடு ஒரு வண்ண கலைப்பிரிவில் சேர்ந்து நான் படிக்க வேண்டும் என்று கல்லூரியில் சேர்ந்த 2,3 மாதங்களிலேயே முடிவுசெய்து விட்டேன். இப்படி எனது முடிவுகள் மாற்றுவதற்கும் எனது சிந்தனைகளை வளர்த்து கொள்வதற்கும் இவ்ஈழப்போராட்டம் மிகவும் துணைநின்றது. அந்த அடிப்படையில் தான் நான் ஒரு ஓவியனாக ஒரு படைப்பாளனாக இன்று உலகத்தின் முன் படைப்புகள் ஆக்கிக்கொண்டு ஒரு சமூக பொறுப்புள்ள சமூகப்படைப்பாளனாக இன்று இருக்கின்றேன். ஒரு படைப்பாளன் ஒரு சமூக விமர்சனாக இருக்க வேண்டும் என்கின்ற அடிப்படையிலேயே இன்று உலகில் எது நடந்தாலும் அவற்றை எதிர்த்து குரல் கொடுக்கின்றவனாக எனது படைப்புக்கள் என்னை ஆக்கி இருக்கின்றது இதற்கு இந்த ஈழப்போராட்டம் முக்கிய காரணம்.

கேள்வி: இப்பொழுது நீங்கள் ஈழத்தமிழருக்கு ஆதரவாக உங்களது படைப்புகளை கொண்டு வருகின்ற போது ஒரு சிக்கல் ஏற்படும் அதாவது நீங்கள் தமிழுணர்வாளர்களுடன் இணைந்து தமிழுணர்வுத்தளத்தினுடாகத்தான் நீங்கள் செயற் படக்கூடிய நிலமை இருக்கின்றது. இந்த வகையிலே தமிழ் உணர்வாளர்கள் முற்று முழுதாக கலையின் நவீனத்துவத்தை உள்வாங்கியவர்களாகவும் இல்லை. அதிலும் ஒரு மரபுத்திடம் அவர்களிடம் வந்துவிட்டது. இந்தச் சூழலில் நீங்கள் ஓவியத்தில் மரபுகளை உடைத்து தேறியிருக்கிறீர்கள் இதற்கு எவ்வாறு ஆரம்ப கட்டத்திலே வரவேற்பு இருந்திருக்கும் இது ஒரு பிரச்சினைக்குரிய விடயம், ஒரு சவால்?

பதில்: குறிப்பாக நான் திராவிட சிந்தனை உள்ள ஒருவன்தான். திராவிட இயக்கம்தான் என்னை வளர்த்தது. திராவிட இயக்கம் ஒன்று இல்லை என்றால், இன்றைக்கு தமிழ்ச் சிந்தனையே இருந்திருக்காது. அவ்வடிப்படையிலேயே நானும் ஒரு திராவிட சிந்தனையுள்ளவன். நீங்கள் சொல்வதைப்போல் திராவிட சிந்தனை உள்ளவர்களுக்கு ஒத்த மரபு சார்ந்ததிலேயே அதிகமான ஈடுபாடும், நவீனம் சார்ந்ததில் ஒரு புரிதலும் அதைப்பற்றி ஒரு அக்கறை இல்லாத நிலை இருந்தது உண்மை. ஆனால், இப்போதைய காலகட்டத்தில் திறமை மாற்றம் இருக்கிறது. அதனால் நான் இந்த நவீனம் சேர்ந்து இயங்கிய காலத்தில் நான் பல்வேறு வகையான இந்த புரிதல் சிக்கல்களை எதிர்கொண்டேன். தமிழீழ சிந்தனை கொண்டவர்கள் குறிப்பாக இந்த நவீனம் சார்ந்து ஒரு அண்மித்த தன்மை கொண்டிருந்ததை நான் அப்பொழுது உணர்ந்தேன். ஆனால் அவர்களிலும் பலர் குறிப்பாக இலக்கியத்தில் நிற்பவர்கள். இன்றைய நவீனம் சார்ந்து சிந்திக்க கூடியவர்களாக இருந்தார்கள். நிறைய இலக்கியங்களில் நவீன கவிதைகளையும், புதுக்கவிதைகளையும் எழுதக் கூடியவர்களாக திராவிட இயக்கத்தில் இருந்தார்கள். நிறைய மாற்றத்தை புதுக்கவிதை தோற்றுவித்திருந்தது. புதியமாற்றத்தை தொடக்கி வைத்து விட்டார்கள். அப்படி ஒரு தொடக்கம் ஒரு அறிமுகம் இருந்தகாரணத்தினால் எனக்கு சற்று ஓவியத்திலே எளிதாக இருந்தது எனலாம் அப்படி ஓவியங்களை நான் செய்து காட்சிக்கு வைக்கின்ற பொழுது என்னுடைய சிந்தனைகளை ஏற்றுக் கொண்டவர்கள் என்னுடைய கருத்துக்களை ஏற்றுக்கொண்டவர்கள் என்னுடைய வடிவத்திலே சற்று மாற்றம் தேவை என்று கருதியதால் நான் அவர்களுடன் விவாதித்து கலந்துரையாடி எனது கருத்துக்களை வலியுறுத்தினேன். வெறும் மரபு என்று மட்டும் இருந்து விட்டு அதுவே ஒரு தன்மையாக மாறிவிட்டது என நான் திராவிடஇயக்க கருத்தாளர்களிடம் கவிஞர்களிடம் எழுத்தாளர்களிடம் சொன்னேன். புதிய மாற்றங்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நவீன சிந்தனைகளை நாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டும் அப்போதுதான் நாம் புதிய புதிய வடிவங்களை கையாள்வதற்கு வாய்ப்புக் கிட்டும் என நான் அவர்களிடம் வாதாடினேன்.

பிறகு, காலம் செல்லச் செல்ல நான் அதில் வெற்றி பெற்றேன். அவர்கள் மட்டும் அல்ல பொதுவாக நவீன ஓவியங்கள் என்ற அடிப்படையிலேயே மிகவும் ஒரு அந்நியத்தன்மை தமிழக சூழலில் இருந்தது மக்களுடன் ஒட்டாமல் அந்நியப்பட்டு இருந்ததிலேயே நான் இவ் ஓவியங்களைச் செய்து கண்காட்சிகளுக்கு அனுப்புகின்ற சூழல் - பலரும் அதைப்பார்த்து விட்டு அதற்கு வைக்கின்ற விமர்சனங்கள் பாராட்டுக்கள் இப்படி நிறைய வந்தது. இப்படி ஓவியங்களுக்கு தேசிய விருது மாநில விருது என பல விருதுகள் கிடைத்த சந்தர்ப்பங்களில் பல்வேறு இதழ்கள் அவ் ஓவியங்களைப் பிரசுரித்தன. கட்டுரைகள் எழுதின. (அந்தக்காலகட்டம் 1987) அந்த 87ல் ஒரு நவீன ஓவியம் மக்கள் மத்தியில் பரவலாக வெளிவந்தது. அந்தச்சந்தர்ப்பத்தில் பல்வேறு தரப்பும் அவ் ஓவியத்தைப் பார்த்து விட்டு அவ் ஓவியத்தில் இருக்கின்ற ஆழம், கருத்து இவைகளையெல்லாம் பற்றி விவாதிக்கத் தொடங்கினார்கள். அதன் பிறகு எனக்கு எளிதாக இருந்தது. அது ஒரு சாதகமான சூழலாக மாறியது. அதன் பிறகு ஈழ போராட்ட ஓவியங்கள் மேலும் வரையத் தொடங்கினேன். மாநில விருது, தேசிய விருது, வாங்கிய ஓவியங்கள் கூட ஈழம் சம்மந்தப்பட்ட ஓவியங்கள்தான் அப்போது அவ் ஓவியங்களிற்கு 'பாதிக்கப்பட்டவன்' எனத் தலைப்பிட்டேன். அதன் பிறகு பல்வேறு ஓவியங்களை நான்



திலீபன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


யாழ் நூலக எரிப்பு


வல்லைப் படுகொலை


குட்டிமணியின் கண்கள்


யாழ் வெளியேற்றம்


செம்மணி


விதைக்கப்பட்டவர்கள்

செய்தேன். அவ் ஓவியத்தில் இருக்கக் கூடிய உள்ளடக்கம் வெகுவாக மக்களை ஈர்த்தது. கண்காட்சிகளாக வைக்கின்ற பொழுது நிறைய மக்கள் அதைப்பார்த்துவிட்டு எளிதாக புரிந்துகொள்கின்ற அந்த நிலையை எட்டின.

அப்பொழுதுதான் நான் உ ணர்ந்து கொண்டேன் மக்களிடம் சொல்லுகின்ற பொழுது நிச்சயமாக ஒரு வரவேற்பும் ஆதரவும் கிடைக்கும் என நான் கருதினேன். இவ் ஆதரவுகளின் பின் பல்வேறு பத்திரிகைகள் அதைப் பற்றி எழுதின இவ்வாறு நான் அதை மக்கள் மத்தியில் நவீன மயப்படுத்தும் பொழுது மிகப் பெரிய சவால்களையும் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. முதலில் மக்கள் மத்தியில் வைக்கும்பொழுது ஒரு குழப்பமான சூழல் உருவானது ஏன் என்றால் இதை ஒரு அந்நியத்தனமான மொழியாக இவ் ஓவியத்தை கருதினார்கள். ஆனால் நின்று நிதானித்துப் பார்த்து அவ்ஓவியங்களை உள்வாங்கிக் கொண்டார்கள். அதற்கான பயிற்சியை அவர்கள் பெற்றார்கள். அதன் பிறகு அவ் ஓவியத்திற்கு கிடைத்த வரவேற்பு என்பது அதிகம்.

கேள்வி: உங்களுடைய ஓவியங்களில் மரபு சார்ந்த ஓவியங்கள் அல்லது ஓவியத்தின் வர்ணங்களிற்கு குறிப்பிடப்படுகின்ற மனநிலை அல்லது அதற்கான சூத்திரங்களிற்கு அப்பால் நீங்கள் முறியடித்து இவ் ஓவியங்களை வரைகிறீர்களா?

பதில் : மரபு, நவீனம் என்னைப் பொறுத்தவரையில் நான் இவ் இரண்டிலுமே மரபில் இருந்துதான் நான் நவீனத்தை கையாளுகிறேன். எனக்கு மரபு எதிரி அல்ல. மரபுதான் எமக்கு சொல்லித்தருகிறது. மரபை நாம் சரியாக உள்வாங்கிக் கொண்டால்தான் நவீனத்தைப்பற்றி வெளிப்படுத்த முடியும். மரபு என்பது நமக்கான மிகப்பெரிய அடிப்படை என நான் கருதுகிறேன்.

ஐந்து ஆண்டு நான் படித்த படிப்பும் அவ் அடிப்படைதான். அது இலக்கியமாக இருந்தாலும் ஓவியமாக இருந்தாலும் சரி நவீனம் என்று உடனடியாக முளைத்து விடுவதாக நான் கருதவில்லை. அப்படி ஒன்று இருக்கவும் முடியாது சிலபேர் கூறுகிறார்கள் நவீன கவிதை எழுதுவது எப்படி என்று சொல்லித்தரமுடியும் என்று. அதேபோல் நவீன ஓவியம் வரைவது எப்படி என்று சொல்லித்தரமுடியும் எனவும் நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருதவில்லை. மரபை நாம் அறிந்துகொண்டு புரிந்துகொண்டு உள்வாங்கிக் கொண்டு அதனால் கிடைக்கின்ற அனுபவத்திலே நாம் புதிய ஒன்றைப் படைக்கலாம். அப்படித்தான் நான் நவீனத்தைப் படைக்கிறேன். எடுத்த உடனேயே ஒரு படைப்பாளன் நவீன ஓவியத்தைப் படைக்க முடியும் என நான் கருதவில்லை. அப்படி என்றால் ஒரு குழந்தை மிகப் பெரிய நவீன ஓவியத்தை வரைகிறது என கூறலாம். இம் மரபுசார்ந்த அடிப்படை மிகப்பெரியதொரு ஆழத்தைத் தருகிறது. அதுதான் இவ் ஓவியத்தில் வெற்றி பெற்றிருப்பதாக கருதுகிறேன். மனித உருவங்களை படைக்கின்ற பொழுது உடற்கூறுகளைப் படைக்கின்ற பொழுது அவ்வுடற்கூறுகள் சரியான அளவில் இருக்க வேண்டும் என்பதற்காக அதில் மாற்றங்கள் செய்து உணர்வுகளுக்கு ஏற்றாற் போல். அவ் உடற் கூறுகளை சற்று நவீனத்துவமாக்கி வெளிப்படுத்துகிறேன். நிறங்களை ஒத்த கருத்தை சொல்ல வருகிறோமோ அந்தக் கருத்துக்கு ஏற்ப கையாள்கிறேன். அங்கே எனக்கு மரபு குறுக்கிடவில்லை மரபையும் கையாளவில்லை மரபு ஓவியங்களைச் செய்யும் போது மரபு சார்ந்த ஓவியங்களை கையாள்கிறேன். நவீன ஓவியங்களை செய்யும் போது எந்த கருத்தை எடுத்தேனோ அதற்கு தேவையான நிறங்களை நான் கையாள்கிறேன்.

கேள்வி: ஈழத்தமிழர்களுடைய போராட்டத்தை மைய்யமாக வைத்து நீங்கள் வரைந்த ஓவியங்களில் இரண்டு முக்கியமான ஓவியங்கள் இருப்பதாக கருதுகிறேன். ஒன்று போராளி அடுத்து தியாகதீபம் தீலிபனுடைய வீரச்சாவு ஓவியம். இதில் தியாகதீலிபனுடைய ஓவியம் மிகச்சிறந்ததாக அந்த உணர்வை வெளிப்படுத்துவதாக அமைகிறது உண்மையில் ஒரு புகைப்படத்தில் கூட அந்த உணர்வை நாங்கள் பார்த்ததில்லை அதனை எவ்வாறு உள்வாங்கி வெளிப்படுத்தினீர்கள்?


பதில்: அதாவது ஒரு புகைப்படத்திற்கும் ஓவியத்திற்க்கும் வேறுபாடு என்னவென்றால் இருக்கின்ற உணர்வுகளை அப்படியே வெளிப்படுத்துவது புகைப்படம். எப்படித்தான் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தினாலும் இல்லாத ஒன்றை புகைப்படத்திலே கொண்டுவரமுடியாது. அது ஒளி நிழல் சார்ந்து கூட்டமைவு சார்ந்து எப்படி எடுத்தாலும் ஒரு அளவோடு மட்டுப்படுத்தப்பட்டுவிடும். ஆனால் ஒரு ஓவியம் என்பது அதற்கு இருக்கும் தளம் என்பது இன்னொருவகையான விரிந்து பரந்துசெல்கின்ற ஒரு தளமாக இருக்கின்றது. அங்கேதான் ஒரு படைப்பாளனாக நான் பல்வேறுவிடயங்களை உள்வாங்கிக் கொள்கிறேன். அதை அப்படியே என்ன சொல்ல வருகின்றோமோ அதற்கு தகுந்த மாதிரி வெளிப்படுத்துகிறேன். அப்படித்தான், நான் திலீபனுடைய உண்ணாவிரத நிகழ்வையும் பன்னிரண்டு நாள் ஒரு சொட்டு நீர்கூட அருந்தாமல் உண்ணாவிரமிருந்து இறந்ததையும் ஒவ்வொருநாளும் நான் தமிழகத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அதாவது கண்ணால் அல்ல ஒவ்வொருநாளும் செய்திகளில் வரும் நிகழ்வுகள் எம்மை உறங்கவிடாது செய்து கொண்டிருந்தன. ஒவ்வொருநாளும் இந்நிகழ்வு மிகபெரிய வேதனையைத் தந்தது. யாராவது தலையிட்டு அவ்வுண்ணாவிரதத்தை நிறுத்துவார்களா என நான் ஏங்கி இருக்கிறேன். இவரது கோரிக்கைகளை நிறைவேற்றி அவ்வுண்ணாவிரதத்தை தடுத்து நிறுத்துவார்கள் என நான் ஒவ்வொரு நாளும் நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் தான் 12வது நாள் மிகப் பெரிய சோகம் நிகழ்ந்தது. அவர் உயிர்தீத்தார். நீண்ட நாட்களாக என் மனதை அழுத்திக் கொண்டிருந்த நிகழ்வு அந்த நிகழ்வு. உடனடியாக அவ்ஓவியத்தை நான் செய்யவில்லை. பல்வேறு ஓவியங்களை நான் படைத்தேன். பல்வேறு வகையான நிகழ்வுகளை இடையிடை நான் படைத்தேன்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேசியத்தலைவர்

திலீபன் உண்ணாவிரமிருந்ததை நான் செய்யவில்லை. எனக்கு அவ்வளவு வலி இருந்தும் நான் உடனடியாக அதை வரையவில்லை. இருபதாம் நூற்றாண்டைப்பற்றி உலகம் நகர்ந்து கொண்டு இருக்கையிலே நான் இந்த இருபதாம் நூற்றாண்டை ஒரு ஓவியத்திலே மீள் பார்வை பார்க்க வேண்டும். என்று எண்ணி ஒரு ஓவியத்திலே ஒரு வரலாற்றைப் படைக்க வேண்டும் என்று எண்ணி அந்த திலீபனுடைய ஓவியத்தையும் இருபதாம் நூற்றாண்டில் நடந்த முக்கிய நிகழ்வுகளின் அடிப்படையிலே திலீபன் ஓவியத்தையும் நான் படைத்தேன். படைத்தேன் என்றால் என்மனதில் நீண்டநாட்கள் குமுறிக்கொண்டிருந்த உணர்வு ஒன்று வெளிப்பட்டது. பல்வேறு ஓவியங்கள் இன்றைக்கு வரையப்படாத ஓவியங்கள் என்னிலே அழுத்திக் கொண்டிருக்கின்றது. அப்படித்தான் 87ல் இருந்து அதாவது திலீபன் உண்ணாவிரதம் இருந்த ஆண்டிலிருந்து இவ்வுணர்வு என்னை அழுத்தி அழுத்தி ஒவ்வொரு நிகழ்வுகளைச் செய்யும் போதும் அதைப் பற்றிய தரவுகளை நான் எடுப்பேன். ஆனால் திலீபன் உண்ணாவிரதம் இருந்ததைப் பற்றி நான் எந்தக் தகவல்களும் எடுக்கவில்லை. காரணம் இவ்ஈழப்போராட்டத்தைப்பற்றி எந்தச் செய்தியும் எனக்கு அத்துப்படி. நான் எல்லா வகையான தகவல்களையும் மனதிலே வைத்திருப்பேன். அது ஆண்டுகளாக இருந்தாலும் சரி, நிகழ்வுகளாக இருந்தாலும் சரி, எல்லாவற்றையும் மனதிலே அழுத்தி வைத்திருக்கும் நிலைதான் இன்னும் இருக்கிறது. அப்படி அந்த சிக்கலிலே எனக்கு நீண்டதொரு அனுபவம் இருப்பதினால் இந்த ஓவியத்தை எந்த ஒரு தகவல்களையும் எடுக்காமல். அதைச்செய்ய வேண்டும் என்று நினைத்து அந்த கித்தானுக்கு எதிரே அமர்ந்து கொண்டு வழக்கமாக நான் ஒரு ஓவியத்தைப் படைக்கின்ற போது நான் அதற்குத் தேவையான முன்தயாரிப்பு ஓவியங்கள் என்று பல்வேறு ஓவியங்களை வரைவது வழக்கம் ஒரு இருபது அல்லது முப்பது முன் தயாரிப்பு ஓவியங்களை வரைவேன். ஆனால் திலீபன் ஓவியத்திற்கு அப்படியும் நான் வரையவில்லை. நேரடியாக கித்தானோடு என்னுடைய தூரிகை உறவு கொண்டது அப்போது தான் நான் அந்த ஓவியத்தை முடித்து என்னுடைய ஆழ்மனதில் இருந்தவைகளையெல்லாம் ஒவ்வொரு துளியும் அந்த உயிர் பிரிகின்ற அந்த தருணத்தைக்கொண்டு வரவேண்டும் என்றுதான் நினைத்தேன். அந்தக் கடைசி நிமிடத்தில் அதாவது அந்த உயிர் பிரிந்த போது என்ன வலியை இங்கு நேரடியாகப் பார்த்த மக்கள் பெற்றார்களோ அந்த உணர்வை அவ்ஓவியத்திலே கொண்டுவர வேண்டும் என நான் நினைத்தேன். அதற்கு முன் நான் திலீபன் ஓவியத்தை நான் மிகவும் எளிமையான ஒரு படைப்பாக - ஆனால் அது எந்தச்சிக்கல்களும் இல்லாத, ஒரு எளிமையாக வெளிப்படுத்தப்பட்ட, அந்த உயிர் பிரிந்த நிலையிலும் அதில் ஒரு உணர்வு வெளிப்படுத்தக் கூடிய ஒரு ஓவியமாக இருந்தது. இன்று அனைத்துத் தரப்பு மக்களாலும் பேசப்பட்டுக்கொண்டிருக்கின்ற ஓவியமாக இருக்கின்றது.

கேள்வி : அடுத்தது ஒரு போராளியினுடைய ஓவியம் வழமையான போராளிகளினுடைய ஓவியங்களிலே இருக்கின்ற குறியீடுகள் சீருடைகள் இராணுவச்சப்பாத்துகள் துப்பாக்கிகள் இவை எவையுமே இல்லாமல் ஒரு மனிதன் இறந்திருக்கின்றதையும் அவனுடைய உடையில் மிகக் குறைந்தளவு உடை இருக்கின்றன பக்கத்தில் இரண்டு செருப்புக்கள் இருக்கின்றன இதனை எவ்வாறு போராளி என்று குறிப்பிடுகின்றீர்கள்.

பதில்: அதாவது போராளி என்பதற்கான ஒரு பொதுக்குறியீடு அந்த ஓவியம். ஒரு போராளி என்பவனுக்கு சீருடை அவசியம் என்று நான் கருதவில்லை. ஒரு போராளி என்பவனுக்குத் துப்பாக்கி தேவை என்று நான் கருதவில்லை. சீருடை இல்லாமலும் துப்பாக்கி இல்லாமலும் ஒருவன் நிச்சயமாக போராளியாய் இருந்திருக்கலாம். ஒருவன் நிச்சயமாக போராளியாய் இருக்கலாம் என்று நான் நம்புகிறேன். அந்த அடிப்படையில்தான் அவ்ஓவியத்தை நான் அப்படிச் செய்தேன். என்னைப் பொறுத்தவரையிலே பொதுவாக ஓவியங்களிலே உடல் மொழியும் பேசும். என்னுடைய ஓவியங்களிலே அதிகமாக நிறங்கள் எப்படிப் பேசுகிறதோ வடிவங்கள் எப்படிப் பேசுகிறதோ அதேபோல் உடல் மொழியும் பேசும். அவ் உடல் மொழிக்கும் பல்வேறு தன்மைகள் இருக்கின்றன. வெளிப்படுத்துவதற்கு அதன் அடிப்படையில்தான் இன்றைக்கு என் ஓவியங்களிலே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறேன். அப்படித்தான் அந்தப் போராளி என்ற ஓவியத்திலும் அவன் அங்கே மடிந்து கிடக்கிறான். ஒரு போராளி இறந்துவிட்டால், இன்னோரு போராளி அப்பயணத்தைக் தொடர்வான். இதுதான் ஒரு போராட்டத்தினுடைய உண்மைத்தன்மையாக இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த அடிப்படையிலேதான் அந்தக் செருப்பை, அந்த மிதியடிகளை ஒரு தொடரும் பயணத்தின் குறியீடாக அவ்செருப்பை அங்கு வைத்தேன். அப்பொழுது அந்தக்காலத்தில் இவ்ஓவியங்களைக் கண்காட்சி வைக்கின்ற நிலையிலே பார்வையாளார்களிடையே மிகப் பெரியதொரு வரவேற்பை பெற்றதாக அமைகிறது. அகில இந்திய அளவிலே பேசப்பட்ட ஓவியம் அது. அப்போது பல்வேறு இதழ்களும் அவ்ஓவியத்தை அவ்ஓவியம் வெளிப்படுத்துகின்ற பொருளைச் செய்திகளை கூறுகளை ஆராய்ந்து இருக்கின்றன. பல்வேறு தரப்புப் பத்திரிகைகளும் அவ்ஓவியத்தை வெளியிட்டு இருக்கின்றன. அப்படித்தான் அவ்ஓவியத்தின் கரு இருப்பதாக நான் நினைக்கின்றேன். இன்றைக்கு இந்த மண்ணிலே நின்று கொண்டு இவ்ஓவியத்தைப் பார்ப்பதற்கும் போராட்டம் இல்லாத இடத்தில் நின்று கொண்டு இவ் ஓவியத்தை பார்ப்பதற்கும் எந்த வேறுபாடும் எனக்குத் தெரியவில்லை. நிச்சயமாக அவ்ஓவியத்தை நிறையப் பார்வையாளர்கள் உள்வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி: அதாவது சாதாரணமாக தமிழகத்திலும் சரி எங்களுடைய இடத்திலும் சரி புலம் பெயர்ந்த நாடுகளிலும் சரி உங்களுடைய ஓவியங்களை அதாவது நவீன ஓவியங்கள் தொடர்பான பரீட்சயம் இல்லாதவர்கள்கூட விரும்பிப் பார்ப்பதற்கான அடிப்படைக்கூறாக என்ன இருக்கின்றது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

பதில்: நிச்சயமாக நான் பயன்படுத்துகின்ற உடற்கூறு மொழி என்றுதான் நான் கருதுகிறேன். நான் நவீனத்துவ வெளிப்பாடுகளை செய்யத்தொடங்கிய உடனேயே நான் உருவம் சார்ந்துதான் பேசவேண்டும் என முடிவு செய்து கொண்டேன். உருவம் சார்ந்துதான் பேசவேண்டும் என்று சொன்னதற்கு இன்னொரு காரணமும் இருக்கின்றது. அதாவது நான் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். நானும் விவசாய இல்லங்களிலே வேலை செய்திருக்கிறேன். விவசாயிகளோடு தொழிலாளியோடு தொழிலாளியாக நின்று வயல்களிலே வேலை செய்திருக்கின்றேன். அவர்களோடு இருக்கின்ற அந்த நேரத்திலே அவர்களுடைய அந்த உடற்கூறு உடற் கட்டுக்கள் என்னை மிகவும் வசீகரித்தது. அவைகளை நான் உள்வாங்கிக் கொண்டேன். ஆனால் கல்லூரியில் சேர்ந்த பிறகு வழக்கமாக எல்லோரும் ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்குப் பிறகுதான் நவீன ஓவியத்தை தொடங்குவார்கள். ஆனால் நான் மரபு ஓவியங்களை செய்து கொண்டிருந்தேன். உள்ளது உள்ள படியே இருக்கின்ற அந்த மாதிரிகளைப் பார்த்து வரைந்து கொண்டிருந்த அந்த நிலையிலேயே நவீன ஓவியத்தையும் படைக்கத் தொடங்கி விட்டேன். அதற்கு காரணம் மிகமுக்கியமானதாக இருந்தது நான் கல்லூரியில் மரபு சார்ந்தும் கல்லூரியில் பெறுகின்ற அறிவை வைத்து வெளியில் அதிகமாகப் பெறுகின்ற அனுபவங்களும் நான் செய்கின்ற ஓவியங்களும் என்னை நவீன சிந்தனை நோக்கி நகர்த்தியது. அந்த வேளையிலே நான் என்னுடைய விவசாய நிலங்களில் வேலை செய்கின்ற அந்த மனிதர்களைப் பார்த்து நிறைய வரைய ஆரம்பித்தேன். அப்படி வரைய ஆரம்பித்த நிலையிலே ஒரு படைப்பாக்கத்தை படைக்கவேண்டும். என்று நான் முடிவு செய்தபோது அந்த உடற்கட்டுக்களை அவ்ஓவியத்தில் கொண்டு வந்தேன். அப்பொழுது அந்த உடற்கட்டுகள் நம் மண்சார்ந்த ஒன்றாக இருந்தது. நிறையப் பேர் இன்று சொல்வார்கள் உலக அளவில் இவ் ஓவியம் காட்சிப்படுத்தப்படுகின்ற போது பல்வேறு தரப்பு மக்களும் அதைப் பார்த்து விட்டு இந்த விவசாயம் சார்ந்த தன்மை இருப்பதாக அவர்கள் உணர்கிறார்கள். அந்தளவிற்கு அவ் உடற்கூறுகள் பேசுகிறது.

பலரும் அதை உள்வாங்கிக் கொள்கிறார்கள் பேசுகிறார்கள், ஆனால் அவ் ஓவியங்களை நான் படைக்கின்றபொழுது இந்த தன்மையோடுதான் தொடங்கினேன் பிறகுதான், அது மண் சார்ந்த விடயம் என நான் நினைத்தேன் அவற்றை வளர்த்துக் கொண்டேன். அதேபோல் நிறங்களைப் பயன்படுத்துக் கொண்டேன். அதேபோல் நிறங்கனைப் பயன்படுத்தும் போது பழுப்பு நிற வர்ணங்களை நான் பயன்படுத்துகின்றேன். அதுவும் நம்முடைய நிறம் அந்நிய நிறம் அல்ல பார்வையாளர்களும் கருத்துப் பதிவு செய்திருக்கிறார்கள். பத்திரிகைகளிலே வருகின்ற கட்டுரைகளில் கூட அதைப்பற்றி எழுதி இருக்கின்றார்கள். ஒவ்வொரு முறையும் இவ்ஓவியங்களை நான் படைக்கின்ற பொழுது இதில் கவனமாக இருப்பேன். இந்த உடற்கட்டு நிறங்கள் போன்றவற்றிலே கவனம் செலுத்துவேன். அதிக கவனம் செலுத்தி அது நவீன ஓவியமாக இருந்தாலும் சரி அதன் வெளிப்படையாக இருந்தாலும் சரி நம்முடைய தமிழ் அடையாளத்தோடு அந்த ஓவியம் இருக்க வேண்டும் என்று நான் தொடர்ந்தும் விரும்புகிறேன்.

கேள்வி: உங்களுடைய ஓவியங்களில் அல்லது உங்களுடைய இரசனையில் யாருடைய பாதிப்பாவது இருக்கின்றதா?

பதில்: எனக்கு அந்த நவீன ஓவியத்தைச் செய்யத் தொடங்கிய காலத்திலே எனக்கு யாருடைய பாதிப்பும் இல்லை, பாதிப்பு என்று சொன்னால் என்னுடைய மக்கள்தான் என்னுடைய நிலத்திலே வேலை செய்து கொண்டிருந்த ஒரு தொழிலாளிதான் எனக்கு பாதிப்பு. ஏன் என்றால் அதுதான் எனக்கு மிகப்பெரிய உள் உணர்வைத் தோற்றுவித்தது. அவர்களிடம் அந்த உடற் கூறுகளைப் பெற்று அதை அப்படியே வெளிப்படுத்த வேண்டும். என்று நினைக்கத் தோன்றியது அவர்களையேதான் சில நேரங்களில் மாதிரிகளாக வைத்து நான் ஓவியங்களாக வரைந்து அதை அப்படியே என் ஓவியங்களிலே பயன்படுத்தி இருக்கிறேன். அதன் பிறகுதான் நான் பிக்காசோவை அதிகமாகப் பார்க்க ஆரம்பித்த பொழுது இந்த உருவச்சிதைப்பு என்கின்ற நிலையிலே சில ஓவியங்களை என்னை அறியாமலே என்னுடைய ஓவியங்களில் பயன்படுத்தி வந்துள்ளேன் என்பது தெரிந்தது. அதைப்பார்த்த சிலர் பிக்காசோவைப் போன்று சில வெளிப்பாடுகள் இருப்பதாக சொன்னதின் அடிப்படையில் நான் நிறைய ஓவியங்களைப் பார்க்க ஆரம்பித்தேன். அப்படித்தான் அந்த பிக்காசோவினுடைய தன்மைகள் எனக்கு அவருடைய ஓவியங்களிலே பார்க்காத நிலையிலுமே என்னை அத்தன்மையோடு செய்திருக்கிறேன் என்று எனக்குப்புரிந்தது. பிறகு அவரது ஓவியங்களைப் பார்த்த பிறகும் முறையாக இன்னும் சில செழுமைகளைச் செய்வதற்கு எனக்கு அது பயன்பட்டது.

கேள்வி: ஓவியம் தொடர்பாக தமிழ் சார்ந்த ஓவியம் தொடர்பாக இளைய தலைமுறையினருக்கு ஈழத்தமிழர்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

பதில்: ஓவியம் நம்முடைய வாழ்க்கையோடு தொடர்புடையது. இலக்கியம் எப்படி நம்மோடு நம்முடைய வாழ்க்கையோடு தொடர்புடையதோ போராட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உங்களை அழுத்திச் செல்ல உதவியது, நீங்கள் அங்கீகாரம் என்று எதைக் கருதுகிறீர்கள்?

பதில்: அங்கீகாரம் என்பதை நாம் இரண்டு வகையாக எடுத்துக் கொள்ளலாம் அல்லது புரிந்து கொள்ளலாம். என்னுடைய ஆரம்ப காலத்திலே (எனது 19ஆவது வயதிலே) எனக்கு தேசிய விருது கிடைத்தது. அதோடு தமிழ்நாடு மாநில விருதும் கிடைத்தது. அதே ஆண்டில் தேசிய அளவில் இன்னொரு விருதும் எனக்குக் கிடைத்தது. அதை பெரிய அங்கீகாரமாக நான் நினைத்தேன். அடுத்த சில நாட்களிலேயே அந்த ஓவியங்கள் செய்தித்தாள்களில் இந்திய அளவில் பிரசுரமாயின அதைப்பற்றி கட்டுரைகள் வெளிவந்தன அதைப்பற்றிக் கடிதங்கள் நூற்றுக்கணக்கில் எனக்கு வந்தது.

நான் விருதிற்காக பெற்ற தொகையை விட அந்தக் கடிதங்களை அதிகமாக மதித்தேன். அந்தக்கடிதங்களை எழுதியவர்கள் சாதாரண நிலையில் இருக்கக்கூடிய மனிதர்கள் முதல் மாணவர்கள் பெண்கள் முதல் தொழிலதிபர்களாக இருக்கக் கூடியவர்கள் வரை அக்கடிதங்களை எழுதினார்கள். உண்மையிலேயே நான் விருது கிடைத்த பொழுது அடைந்த மகிழ்ச்சியை விட இவ்ஓவியத்தை பத்திரிகைகளிலும் இதழ்களிலும் பார்த்த பிறகு கிடைத்த ஒரு பாராட்டு அல்லது வரவேற்பு என்பதை இட்டுத்தான் நான் பன்மடங்கு மகிழ்ந்தேன். ஏன் என்றால் சரியாக அந்த ஓவியத்தை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். விருது கிடைத்த ஆண்டிற்கு அடுத்த ஆண்டு ஈழத்து நிகழ்வுகளை வைத்து படைத்த ஓவியத்தை அனுப்பினேன் அனுப்பிய பிறகு முதல் ஆண்டில் எந்த இடத்தில் எனக்கு மாநில விருது வழங்கினார்களோ, அதே இடத்தில் அவ்ஓவியத்தைப் புறக்கணித்தார்கள். காரணம் அந்த நடுவர் குழுவில் இருந்த மூன்று பேரில் இருவர் இந்த சிந்தனைக்கு எதிரானவர்கள். ஒருவர் இந்த சிந்தனையை ஏற்றுக்கொள்பவர் அவர் இவ்ஓவியத்திற்கும் இந்த ஆண்டு விருது தரலாம் என்று கூறியிருக்கிறார். ஆனால் அவர்கள் இது மிகவும் ஆக்ரோசமாக இருக்கிறது என்று தடுத்திருக்கிறார்கள். அதன் பிறகு சென்ற ஆண்டு விருது பெற்ற ஓவியர் இவர் இவருடைய ஓவியத்தைப் புறக்கணிக்கமுடியாது இவ் ஓவியத்தை காட்சிக்காவது வைக்க வேண்டுமென கேட்டிருக்கிறார். அதற்கும் அவர்கள் மறுத்துவிட்டனர். ஏனென்றால் அவ்ஓவியத்தைக் காட்சிப்படுத்தினால் விருது பெற்ற ஓவியத்தோடு ஒப்பிட்டுப் பேசப்படும் என்ற பயம் என்று நான் பல வருடங்கள் கழித்து அந்த நடுவர் மூலம் அறிந்து கொண்டேன்.

இதனுடைய சிந்தனைகளை சில செய்திகளை அடுத்த ஆண்டே நான் நுகர்ந்து கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. நூற்றிற்கு மேற்பட்ட தனிநபர் கண்காட்சிகளை நடத்தி இருக்கிறோம். ஆயிரக்கணக்கான மக்கள் இக் கண்காட்சிகளைப் பார்த்திருக்கின்றார்கள். மிகப் பெரிய அளவிலே மக்கள் அவ் ஓவியங்களைப் பார்த்தார்கள். தமது கருத்துக்களை பதிவாக்கியுள்ளனர். மக்கள் அவ்ஓவியங்களைப் புரிந்து கொள்கிறார்கள். ஏற்றுக்கொள்கிறார்கள். என்கின்றபொழுது இன்றைக்கு நான் ஒரு தெரிந்த முடிவிற்கு வந்துள்ளேன். இன்றைக்கு அல்ல பலவருடங்களுக்கு முன்பு நான் அந்த முடிவுக்கு வந்துவிட்டேன். அதாவது 1990ஆம் ஆண்டே நான் அந்த முடிவிற்கு வந்து மக்கள் மயப்படுத்த வேண்டும் என்று முடிவுசெய்து பலரும் கூடுகின்ற அந்த இடங்களிலே காட்சிப்படுத்துகின்றோம். அப்படிக்காட்சிப்படுத்துகின்ற பொழுது மக்களிடம் இருந்து அங்கீகாரம் கிடைக்கின்றது.

போராட்டத்தோடு தொடர்புடையதோ அதேபோல் ஓவியமும் தொடர்புடையதாக கருத வேண்டும். இன்னும் சொல்லப்போனால் ஒருகவிதை ஒரு சிறுகதை அல்லது நாவல் ஒரு மொழியைக் கற்று அறிந்த பிறகுதான் வெளிப்படும் ஆனால் ஓவியம் என்பது குழந்தையாக இருக்கும் பொழுதே வெளிப்படும் ஒரு வடிவம். குழந்தை பேசுகின்ற மொழியே இவ்ஓவிய மொழிதான்.

அது வெளிப்படுத்துகின்ற மொழி சுதந்திரமாக எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் வெளிப்படுத்துகின்ற ஒன்றாக ஓவியம் தான் இருக்கின்றது. காலப்போக்கில் வளர்ந்து வெவ்வேறு துறைக்குப் போகின்ற போது அதை மறந்து விடுகிறார்கள். அல்லது அதைத் தடுத்து விடுகிறார்கள். ஆனால் ஒரு குழந்தைக்கு முதல் மொழியாக ஓவியம் இருக்கிறது. தமிழ் என்றால் அது அனைத்து இன மொழி மக்களுக்கும் அப்படித்தான். ஆக வாழ்க்கையினுடைய ஆரம்ப தொடக்க காலத்திலேயே இவ்ஓவியம் எமக்கு வாய்க்கப் பெற்றிருக்கிறது. அப்படி இருக்கின்ற அந்த ஓவியத்தை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக ஈழத்தமிழர்கள் இந்த ஓவியம் சார்ந்து நிறையச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நிறையப் படைப்பாளர்கள் உருவாக்கக்கூடிய ஒரு மண்ணாக ஈழம் இருக்கிறது. முறையான ஒரு பயிற்சியும் முறையான வழிகாட்டுதலும் இம் மண்ணிற்கு வழங்கப்பட்டால் நிறையப் படைப்பாளர்களை உருவாக்கமுடியும் என நான் நம்புகிறேன். அந்த ஒரு தன்மையை நான் உணர முடிகிறது. இந்த மண்ணிலே யாரும் வழிகாட்டுவதற்கு இல்லை என்ற ஏக்கம் இந்த மாணவர்களிடம் இருக்கிறது மக்களிடம் இருக்கிறது. இவ்ஓவியங்களை அவர்கள் பார்த்தபின்பு எங்களிலேயே யாருமே இல்லையே என்கிற ஒரு ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் நிச்சயமாக இதைவிட வலிமையாக வெளிப்படுத்தக்கூடியவர்கள் இம் மண்ணிலே தோன்றமுடியும் காரணம் மிகப் பெரிய வலியைச் சுமப்பவர்கள் இம்மண்ணிலேதான் இருக்கிறார்கள். ஆக அந்த ஒரு வழிகாட்டுதலை கொடுப்பதற்கு நாம் இன்று ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம்.

கேள்வி : ஓவியம் உட்பட படைப்பாளிகளின் படைப்புகளிற்கான அங்கீகாரம் என்பது ஒரு முக்கிய சிக்கலாக இருக்கிறது. அங்கீகாரம் இல்லாமல் போகின்றபோது படைப்பாளி சோர்ந்து போகின்ற அதாவது அடுத்தகட்ட படைப்பை நோக்கி நகர்வது என்பது சிக்கலான விடயமாக இருக்கின்றது இந்த வகையில் அங்கீகாரம் என்பது எந்த வகையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


'பல வெடித் துப்பாக்கிச் சூடுகள்'

# கோயாவின் ஆழ் மனச்சித்திரங்கள்

ஸ்பானிஷ் நாட்டைச் சேர்ந்த ஓவியர் பிரான்சிஸ்கோ கோயா அவர்களால்தான் 18ம் நூற்றாண்டில் ஸ்பானிஷ் நாட்டின் கொலு மண்டபத்தின் விடயங்களைக் கண்டுகொள் கிறோம். முகச்சாயலாய் படத்தைச் சித்திர மாய் வரைவதிலும், கேலிச்சித்திரம் வரைவதி லும் திறமை கொண்ட இவர் தன்னுடைய துன் பங்களையும், கெட்டகனவுகளையும், சந்தே கங்களையும், நோயின் இரையாய் அகப்பட் டுப் போரினாலும் இடிந்த ஓவியங்களையும் வரைகிறார்.

இவரின் ஓவியங்கள் மிகுந்த எளிமை யும்,அழகும்,இயற்கை அழகைக்கொண்டவை யாகவும் இருந்ததினால் மக்களின் மனங் களைக் கவர்ந்தன.

ஸ்பெயின் நாட்டின் அருங்காட்சியங்களில் இவர் செய்த பல பிரதான ஓவியங்கள் வைக் கப்பட்டுள்ளன.

பிரான்சின் அருங்காட்சியத்திலும் கோயா வின் பிரசித்திபெற்ற ஏழு ஓவியங்கள் வைக்கப் பட்டிருந்தன. பின்னர் அவை அகற்றப்பட்டு விட்டன.

ஓவியனின் இருண்ட வாழ்க்கையின் ஒரு பகுதி அவனது படைப்பை பிரகாசிக்க வைக் கிறது.

கறுப்பு ஆண்டுகள் என வர்ணிக்கப்பட்ட தான காலம், பிரான்ஸ் - ஸ்பெயின் நாட்டை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தபோது, இவற்றி னுடைய நிழலை தன்னுடைய அதிகார பூர்வ மான வேலையின் மீது காட்டினார்.

இந்த அடிக்குப் பின்பு ஓவியன் சமூகத் தில் வைத்திருக்கும் பார்வையை ஆழமாகக் கோடிட்டுக் காட்டுகிறார்.

இதே அவர் கொலுமண்டபத்தின் ஓவிய னாக, செல்வந்தர்களினதும், அரசு பலமிக்க வர்களினதும் முகச்சாயல்களை முழுமையாக பொறுப்பெடுத்து வரையும் பணியைப் புரிந்து வந்திருந்தாலும், இவர் அரசியலிலும் சரி, உள வியலிலும் சரி அவர்களுக்கிடையில் இடை வெளியைப் பேணி வைத்திருந்தார்.

1774ம் ஆண்டு இவர் மாட்ரிட் எனும் தலைநகரத்தில் அரச வேலையொன்றை செய் வதற்கு வருகின்றார். பன்னிரெண்டு வருடங் களுக்குப் பின்பு கொலுமண்டபத்தின் முதல் ஓவியனாக வருகின்றார்.

இந்த ஆண்டுகளில் அவர் வரைந்த ஓவி யம் ஒன்று பலத்த விமர்சனத்தையும், கோபத் தையும் தூண்டச்செய்தது. இலட்சணமாக வும், நுட்பமாகவும் பெண்ணின் அழகை தோற் றுவிப்பதற்கு டியுசெஷ் (Duchesse) ஒசுனா அவர்களை வரைகின்றார். அந்த ஓவியத் தின் பெயர் 'La Maja nue' 'நிர்வாணமான மாயா' வெட்கமில்லாத ஓர் பெண்ணின் பார்வை, பார்வையாளனோடு எதிர்த்துப் போராடும் சாயலை தோற்றுவிக்கிறார்.

இந்த ஓவியத்தை கண்ணுற்ற இமானு வல் கோடொய் என அழைக்கப்படும் பல மான மந்திரி இந்த ஓவியத்தை அகற்றும்படி கட்டளையிடுகிறார். பின்பு ராணி அதை பாதுகாத்து வைத்திருந்தார். அடுத்து அவர் 'La Maja vêtue' 'ஆடையணிந்த மாயா' இதே விளைவை ஏற்படுத்துகிறது.

## சஞ்சலப்படுத்துகிற கருமை

இவர் வரைந்த பெண்கள் புன்னகைக் காமல், கண்களை கீழே பார்க்காமல் வரைந் தாலும், சூக்குமமான உருவங்களோடும் மிகவும் சஞ்சலப்படுத்துகிற அதாவது முதிர்ந்த சாயலுடைய அல்லது அலைந்து திரியும் மரணத்தை பயமுறுத்தும் தோற் றங்களோடுதான் வரைவார். கோயா ஒரு பொழுதும் மகிழ்ச்சியாக இருந்ததில்லை. அதற்குக் காரணம் இருக்கிறது. இவருடைய வாழ்க்கையில் இரண்டு விபத்துக்களைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சந்தித்திருக்கிறார். அவை அவரது ஓவியங்களில் பரவி ஒரு கருமையின் ஆழுமையைத் தூண்டி விடுகிறது. இவரின் படைப்புகள் பல விதமானவை. வன்முறையாகவும், மிருகத்தனமாகவும் கூடுதலாக சமூகத்தைக் கண்டிப்பதாக இருப்பன. 2 மே, 3 மே 1808, 1810 -1814 போரின் அழிவுகள் என தலைப்பிட்ட ஓவியங்கள் அவற்றை பறை சாற்றி நிற்கின்றன.

1792ம் ஆண்டு ஸ்பெயின் நாட்டின் தெற்கு பகுதியில் இருந்தபொழுத மிகவும் மனதாலும், உடலாலும் வருத்தமுற்றவராக இருந்தார். கடிக்ஸ் (Cadix) எனும் இடத்திற்கு பயணம் செய்த போது கோயா நீண்ட மாதங்களாக வருத்தமாகியிருக்கிறார். பின்பு, அவர் தான் அந்த நோயினாலேயே இறந்துவிடுவேன் என நம்பி இன்னும் வருத்தமுற்றவராகிறார். அவரது காதுகள் செயற்திறனை இழந்தன.

அவருடைய குழப்பமும், வன்முறையான நோய்க்குள் அகப்பட்டு இருக்கும் துன்பங்களும்தான் கோயா படைத்த ஓவியங்கள். பைத்தியமும், பயங்கர மிருகங்களும், கெட்ட கனவுகளும் சஞ்சரிக்கும் இப்பார்வைகளைத்தான் அவர் வரைகிறார்.

1796 - 1797 ஆம் ஆண்டுகளில் La série d'eaux - fortes பலமான நீர் எனும் தொடரை Caprices அதாவது 'மாறும் குணம்' என்ற தலையங்கத்தில் வரைகின்றார். ஒரு கேலிப்பார்வையைக் கொண்டதான மற்றும் ஒரு நரக உலகத்தைச் சுற்றி ஆய்வு செய்கின்ற ஓவியங்களை வரைந்தார். கெடுதி எங்கும் இருக்கிறது, சமூகத்திலும், மனங்களிலும் கூட.

இரண்டாவது விபத்து: வரலாறு ரீதியாக அதாவது நாடு முழுவதும் சேர்ந்தது 1807 ஆம் ஆண்டு நெப்போலியனுடையப் படைகள் ஸ்பெயினை ஆண்டு வந்தது. 1808 இல் மட்ரிட்டை அடைகிறார்கள். 2 மே நாட்டுப் பற்றாளர்கள் குழப்பத்தை விளைவிக்கிறார்கள். முரா என அழைக்கப்படும் நெப்போலியனுடைய மைத்துனன் பழிவாங்குதலை அறிவிக்கின்றார்.

'டோஸ் டே மாயோ' 2 மே 1808 ம் ஆம் ஆண்டு மாட்ரிட் இல் நெப்போலியனுடைய சகோதரன் யோசப்பையும் அவருடன் நின்று போராடும் பிரெஞ்சுப் படைகளையும், கொதித்தெழும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மக்கள் எதிர்த்து நின்று போராடுவதையும் வரைந்துள்ளார்

இதில் என்ன குறிப்பிடவேண்டும் என்றால் கோயா இந்தச் சம்பவம் நடந்த அன்று வரையவில்லை. பலவிதமான சாட்சிகளின் வாக்கு மூலங்களைக் கேட்டறிந்த பின்புதான் இதை வரைந்தார்.

3 மே அன்று, 400 மேற்பட்ட மக்களைக் கடத்திச் சென்று சுட்டுக்கொல்கின்றனர். இந்த படுகொலை மக்களைப் போராடச் செய்கிறது. இதில் காணப்படும் ஓவியம் 3 மே 1814 நடந்த 'பல வெடித்துப்பாக்கிச் சூடுகள்' ஆனால் இந்த ஓவியம் சம்பவத்திற்கு முன்பே வரையப்பட்டிருந்தது.

அதுவே அவர் ஆழ் உணர்வுகளின் ஆழங்களில் மூழ்கி ஓவியங்களை வரைந்தாரா எனும் கேள்வியை எழுப்புகிறது.

கோயா பிரான்ஸ் நாட்டினுடைய ஆக்கிரமிப்பால் துன்பப்பட்டு இருந்திருக்கிறார். நெப்போலியனுடைய சகோதரன் யோசப்பை ஸ்பெயினின் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க, கோயா மாட்ரிட்டுக்கு திரும்பி வந்து சபதம் செய்து நெப்போலியனினுடைய அதிகார பூர்வமான கட்டளைகளை ஏற்றுக் கொள்கிறார்.

அதே வேளையில் மிகமோசமான படங்களைச் வரைகிறார். பின்பு அவற்றை தன்னுடைய குறிப்புப் புத்தகத்தில் வன்முறையான செயல்களையும் வரைந்து சேர்த்துக் கொள்கிறார். பலவகையான கொலைச் சம்பவங்களை தொகுத்து 'போராட்டத்தின் அழிவுகள்' எனும் ஓவியத் தொகுப்பை உருவாக்கினார்.

கோயாவின் ஆன்மா அதிருகின்றது, அவரின் மனசாட்சி மக்களின் மீது வெட்டி சாய்க்கப்படும் துன்பங்களுக்கு முன்பு பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் விரிவாக கதையைச் சொல்லும் ஓவியம் தான் 3 மே அன்று நடந்த 'பல வெடித் துப்பாக்கிச் சூடுகள்' அந்த ஓவியத்தில் இராணுவ அணியின் உடம்புகள் ஒரே மாதிரி அடுக்கப்படிருக்கிறது அவர்களினுடைய கொடிய முகம் தெரியவில்லை. ஆனால் அவர்களுக்கு முன்பு சாதாரண மனிதர்களின் அவலமும், அவநம்பிக்கையும் அவர்களின் முகங்களில் காணலாம். விவசாயிகள் ஆயுதம் இன்றி நிற்கிறார்கள். தவிர்க்க முடியாத கேடுக்கு முன் நிலத்தில் குருதி சிந்திக் கிடக்கும் உடம்புகள். வெள்ளை ஆடையை அணிந்துகொண்டிருக்கும் மனிதன், சிலுவை போல கைகளை வீ (V) அளவில் விரித்தபடி முடியாத வெற்றி (Vitoire Impossible) என்றபடி வெறுமைக்கு முன்பு இருண்ட பார்வையுடன் வரையப்பட்டிருக்கிறது கோயாவின் ஓவியம்.

கோயா வரைந்த பாத்திரங்களினுடைய பார்வைகள் வெறுமனே இருளை நோக்கிச் செல்லும் ஓவியமாகப் படிகின்றன ஆயினும் அவை தீராத வலியை ஆழமாக எம்முள் எழுப்புகின்றன.

**மீரா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலத்திபழுத்த சுனாமி



முல்லைத்தீவு பட்டுமணலில் கால் புதைய தலைவிரி கோலமாய் நின்ற தாயவள் இருகைகளையும் நீட்டியபடி கடல் தாயை வெறித்துப் பார்த்துக் குழறியழுதபடி கேட்டாள் "அம்மா எங்கள் உயிர்க் கடலம்மா எங்களை ஏன் அழித்தாய்? உன் மடியில் தவழ்ந்த மக்களை ஏன் பறித்தாய் எங்களை ஏன் பொங்கியெழுந்து விழுங்கினாய்? இன்றோடு எங்கள் வாழ்வு முடிந்ததா இல்லை, இனிமேல்தான் எங்கள் வாழ்க்கைப் போராட்டம் ஆரம்பமாகின்றதா?." உயிர் மூச்செடுத்து ஈழத்துக் கடல் வெளியெங்கும் எதிரொலிக்கக் கத்தினாள். கடல் அலைகளின் தாளம் ஒரு முறைக்குப் பல முறை ஸ்தம்பித்துப் போனது....2004 மார்கழி 26 ம் நாள் ஆழியின் பேரழிவு விதைத்த தாக்கத்தில். முல்லைத்தீவில் மிகப்பெரும் செல்வந்தக் குடும்பத்துச் சங்கதியை நாட்டுப் பாடலில் இழையோட விடுகிறேன்... தாயானவள் சுனாமியில் தன் கணவனையும்..இளைய மகனையும்... இரண்டு பெண் குழந்தைகளையும்...சொத்துக்களையும் இழந்த நிலையில் பத்து வருடங்களுக்கு முன் பிரான்சுக்கு போன தனது மூத்தமகனோடு தொலைபேசியில் உரையாடப் பலமுறை முயன்று கிடைத்த ஒரு நாளில்...

ஓடிவரும் தண்ணீரிலே
துடித்தெழும் மீனதுபோல்
பதறிவந்தேன் என் மகனே தங்கராசா- உன்
சுகத்தைக் கேக்கவேண்டி
பாசத்துக்குரிய தங்கராசா
ரோசத்துக்குரிய தவபால
புத்திரா மகனே தங்கராசா

கலமேறிப் போனதந்தை
கடலாடி கரைவந்ததும்
கலகலக்கும் வளவுச்சனமடா
முற்றமுமில்லை சுற்றமுமில்லை
சுனாமியால் சுறுண்டு போனமடா
ஒடுங்கும்குடிலும் யேசுகுடிலானதடா
தண்ணீருக்கும் பஞ்சமடா

"அம்மா....அம்மா" என்று மதுவெறியில் பசப்புகிறான் (மறுபடியும் மறுபடியும் பொய் பேசிக்கொண்டும். போலி நாடகம் ஆடிக்கொண்டும் நிற்கிறான். தாயவள் மறுபடி மறுபடி சகித்துக்கொள்வது சுனாமி அனர்த்தத்தில் தனிமரமாய் துயரேறி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துணையிழந்து வம்சமிழந்து வாழ்வே பாலையாகிப்போன தாயிடம் ஆடும் பொய் வேடத்தை இந்திரனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை)

"அம்மா அழாதேயம்மா ரெலிபோன்
வழி உந்தனது வெள்ளைமுகம்
கறுத்துத் தெரியுதம்மா....என் நெஞ்சு
பதறுதம்மா பட்சமிருக்கு பறந்துவர
ஏரோபிளேன் இருக்கம்மா- எண்ணமும்
இருக்கம்மா பொன்னான நேரம்தான்
மண்ணாகும்

என்ர கண்ணான கண்கள் நீயம்மா
கடற்கரையில் பிறந்த கதைகளெல்லாம்
சுனாமி அடியோடு கனக்க இருக்கம்மா
அலைகள் இருந்தால்தான் அம்மா
படகு ஆடித் தவழ்ந்து வருமம்மா

துயரம் இருந்தால்தான் அம்மா
சுகங்கள் இணைந்து வருமம்மா
ஐயா தம்பி தங்கை விதிமுடிந்ததம்மா
என்விதிதான் இப்படிக் கிடக்கம்மா
இங்கு நான் படும்பாடு தெரியுதாம்மா?"

(தாயவள் மேலும் குளறியழுதபடி நிற்கிறாள். வைன்கோஸ்டி தங்கராசாவின் நடிப்பைப் பார்த்து இந்திரன் கொதித்தெழுகிறான்! நாடக மேடையில் எத்தனை கோடிப் பாவங்கள் இத்தனையில் எத்தனையைத் தாயவள் அறிவாள்.) அறியாதவள் அக்கினி மிதி கதியில் பாடுகிறாள்...

ஒரு நாள் ஒரு பொழுது உன்னை
நினையாவிட்டால்
எந்தன் உசிர் மெழுகாய் உருகுதடா
மாலையிட மாமா மகளிருந்தாள் -
மகராணியையும்
சுனாமி அள்ளிக்கொண்டு போனதடா
அவளோ பொரியரிசி நிறத்தானவள் -
அவளையும்
சுனாமி கொண்டிழுத்துப் போனதடா -
என் மகனே
தங்கராசா உன்னைநம்பி
வாழ்வாடுதடா

(தாயவள் குரலை தொலைபேசி வழிகேட்டுக் கவலையால் மனம் கனத்த இந்திரன் தங்கராசாவின் றிசிவரைப் பறித்து பேசுகிறான்)தாயவள் புலம்புகிறாள்..

நேற்றிருந்த எங்களது
மணிமாட மாளிகைகள்
சொல்லாமல் வந்த சுனாமி
அள்ளிக்கொண்டு போனதாலே
அல்லலுறும் விதியாச்சு
சின்னவனும் மாண்டான்
மார்பணைத்த பிள்ளைகளும்
மார்கழி ஆழியில் மாண்டனர்
மணவறை காணவளர்ந்த
உன்னவளும் மாண்டாள்

(தாய் அழுவதைக் கேட்டு மனம் துடித்த இந்திரன்)

அம்மா நீங்கபட்டபாடுகள் போதுமம்மா
புலம்பெயர்ந்த வாழ்வைவிட
தாய்நிலத்து வாழ்வு மேலம்மா- புலத்தில்
சுனாமி தினம் தினம் அடிக்குதம்மா
சுறுக்காய் பணம் வந்து சேருமம்மா
சொல்வதைக் கேட்டு
அமைதி கொள்ளுங்க தாயே !!

ஆருக்காக்கும் பணம் அலட்சியமாக சிரித்தாள். (தாயின் தொனியில் சற்று மாறுதல்) அவள் தன் நினைவலையில் கிடந்தவற்றை அள்ளிக் கொடுக்கிறாள். தங்கராசாதான் கேட்டு நிற்கிறான் எனும் போக்கின் ஆவல் மிகுதியில் கனவில்கண்ட கல்யாணக் கோலத்தை பாடுகிறாள்.

தங்கக் கிளியானவள்- என்
அண்ணன் பெற்ற பெண்ணானவள்
தாமரைப்பூ அழகானவள்- என்
அண்ணன் பெற்றபெண்ணானவள்

கட்டுத் திருக்கையெல்லாம்
கல்யாணம் பேசி வருமடா
ஆடாத்திருக்கையெல்லாம்
ஆள் சேர்த்து வருமடா
மணல் திருக்கையெல்லாம்
மண மேடை கட்டிவருமடா
புளியந் திருக்கையெல்லாம்
புல்லாங்குழல் ஊதிவருமடா
பூவாத் திருக்யெல்லாம்
பூமாலை கோத்துவருமடா
கனாக் கண்டேனடா மகனே!

(இதைக் கேட்ட இந்திரன் நெஞ்சம் பிளந்த துயரத்தில் றிஸீவரைத் தூக்கி எறிந்துவிட்டு வைன் போத்தலைக் கொஞ்சிக்கொண்டு தங்கராசா வாழ்ந்து - வளர்ந்த நிலையையும் - இப்போது உவன் கையில் அகப்படாமல் சுனாமி அள்ளிக்கொண்டு போன அந்த மங்கை மாதவப் பெண்ணையும் நினைந்துருகி இந்திரன் பாடுகிறான்....)

தவபாலனும் ரோகினியும் - உன்னைத்
தவமிருந்து பெத்தாங்க
தாளம்பாய் நோகுமென - உன்னை
தூளியிலே ஆடவைத்தாங்க

ஏலக்காய் வாசனைபோல் - கோட்டை
நல்லெண்ணய் தேய்த்தாங்க
சா்முக்கும் ஈழத்தேக்குமாய் - உன்னை
உருவாக்கி வைச்சாங்க

முல்லைத்தீவு கடற்கரையில்- உன்னை
விளையாட விட்டாங்க
தாளையடிக் கரையோரம்- உந்தன்
தாய்மாமன் பெண்வளர

கேட்டதெல்லாம் அள்ளித்தரும் - அந்த
கிளிமொழியும் கண்வளர்ந்தாள்
புண்ணியங்கள் செய்தமகராசி - உந்தக்
கெட்டழிவான் கைசிக்காமல் போனாளே

சுனாமியில் போனவளே- உந்தச்
சீரழிவான் வசம்வராமல் போனாயே
பாட்டெடுத்துப் பாடினால்- பரலோக
பூலோக ராசாவுக்கே வெளிச்சம்

மண்ணாடும் கடலோடு நீகலக்க - மா
தவங்கள் செய்த மகளே
உவன் கைபட்டுக் கசங்காமல் - உந்தன்
ஆயுள் சுனாமியில் போனதும் நன்றே

சம்மாட்டி உன் தகப்பன் - அங்கு
குத்தகைக்காரன் உன்மாமன்
செல்வப் புகழ்படைத்தமகன்- ராசா
பாரிசில் தீண்டத்தகாதவன்!

இலட்சமாய் வைத்திருந்த- இவன்
குடும்பம் சுனாமியால் ஏழையானார்
அண்டை அயல் அடுத்தவர்- தினம்
ஆச்சரியப்பட்ட குடும்பமது

குலக்கொழுந்து பாரிசில் 'சீதூ'- உவனை
அதிசயமாய் பார்ப்பவரே
இதிகாசம் இனிப்பாடுவது - புலத்து
இழிவான குடிவாழ்வைத்தான்

கடல் அள்ளிக்கொடுத்ததை- அந்தக்
கடல் அள்ளிப்போன காலம்
ஆழிப்பேரலை அழிவினாலே — உந்த
அவலவாழ்வும் நேர்ந்ததே

(தங்கராசாவைப் பார்த்துப் பாடிய இந்திரனை நெஞ்சில் இடிச்சுத் தள்ளிய தங்கராசா தாளம் தப்பிப் பாடுகிறான்...இந்திரன் நின்று நோக்குகிறான்!)

குப்பையில்தான் ஆமணக்கு
சேத்திலதான் செந்தாமரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாத்துக்காது படியளக்கிறான்
பாரிஸ்மகன் 'ஆர்.எம்.மி' தான்
மாதக்காசு வரும் வரைக்கும்
ஊரென்ன உறவென்னடா
குடிகார இராச்சியம்தான்
வைன்போத்தல் கும்மாளம்தான்
அட அடா தங்கராசா
எட எடா லாச்சப்பல் மெற்றோ
போறாண்டா... போறாண்டா...

தங்கராசா கேட்டும் - கேட்காதவனாக
தள்ளாடி நடந்து படிகள் இறங்கினான்...

செல்லடிச்சான் குண்டு போட்டான்
ஆனசனத்தைக் கொன்றுவிட்டான்
நஞ்சுவிட்டான் கொளுத்திவிட்டான்

தப்பிவந்தான் பிழைக்கவந்தான்
கிருசகெட்ட வாழ்வுகண்டான்
பந்தமெல்லாம் செத்தழிஞ்சு
கடல்மிதத்தல் கண்டான்
கெட்டழிஞ்சு போவானே
தங்கராசா குடிகார ராசாவே
இன்னுமேன்ரா உசிரோடு நிற்கிறாய்?

இந்திரன் பாடியது தங்கராசாவின் காதில்
விழுந்ததோ தெரியவில்லை அவன்
வெளியேறிவிட்டான்... நாட்கள்
உறுண்டன

ஒரு நாள் இரவு நடுச்சாம வேளை
இந்திரன் வீட்டுக்கதவு பெலத்துத் தட்டும்
சத்தம் கேட்டு துடித்துப்
பதைத்தெழும்பினான்.
கதவைத் திறந்தான்.

பிரெஞ்சுப் பொலிஸ்காரர் இருவர்...
அவர்கள் சொன்ன செய்தியில்
இடிவிழுந்தவனாய் செற்றியில் ஆடாது
அசையாது சடலமாய்
சாய்ந்திருந்தான்....! நேரம் கடந்திட
தொலைபேசி மணிச் சத்தம் இந்திரனைத்
தட்டி எழுப்பியது மாதாவின்
மணிக்குரல்தான் இதயத்தில் தைத்தது!
உடலையே உலுப்பியது!!

என்வாயால் எப்படிச் சொல்வேனடா
உன்தயவில் வாழும் காலம் வந்ததடா
ஓரா மீனடா ஒடியல் புட்டடா
வாளை மீனடா சம்பாச் சோறடா
என்னென்ன வகைவகையாக ஆக்கி
உண்டோமடா

உள்ளதை விற்று உல்லனை
வாங்கினோம்
பலதையும் விற்று பாரையை
வாங்கினோம்

சீலையை விற்று சீலாவை வாங்கினோம்
சிறந்ததைத் திண்டு உயர்ந்தவர்
நாங்களடா
சுனாமியின் பின்னர் கடல்மக்கள் நாங்கள்
பிணத்தினை எண்ணிச் சவமாய்ப்
போனமடா

ஆறாத் துயரம் ஆறுபோல் வருகுதடா
தீராத துயரம் திரண்டோடி வருகுதடா
எம்மைப் போல் செல்வரும் இல்லையடா
சுனாமியின் பின் கண்ணீரும்
இல்லையடா

எங்களைப் போல் ஏழையும் இல்லையடா
எங்காச்சும் காணவும் முடியாதடா –
மகனே
எங்களுக்காய் அழுதாராம்
உலகமெல்லாம்
அள்ளிக் கொடுத்தாராம் சீமாட்டி
சந்திரிக்காவிடம்
பதுக்கிக் கொண்டதையும்
வாய்விட்டழுவாடா

கண்ணுக்கு இனியவனே கற்கண்டுச்
சொல்லழகா
எங்கள் குடிவாழ நீயிருக்காய் தங்கராசா
எங்களுக்கு அள்ளிப்பணம் கொடுப்பாய்
தங்கராசா
என் மவனே எங்கே உன் குரலைக்
காணோம்?

(இப்படித் தாயவள் கேட்டபோது
இந்திரனின் இதயம் இரண்டாகப்
பிளந்தது! எப்படிச்
சொல்வான் பொலிஸ்காரன் வந்து
சொன்ன பேரிடியை? தங்கராசா திறந்த
வெளிச் சத்தைச் குப்பைத் தொட்டிக்குப்
பக்கத்தில் இறந்து கிடக்கக் கண்ட
புலத்துச் சுனாமி அதிர்ச்சியை.)

"அம்மா கதைப்பது யாரெனக்
கேளுங்கோவன்
அம்மா நான்தானம்மா பெர்ணபேத்தின்
பேரன் பேசிறன்.

தங்கராசா சிங்கநடையோடு
வெளியபோனான்
தங்கமகன் தங்கராசா இனிமேல்....

இந்திரனால் பேரிடிச் செய்தியைத்
தாய்க்குச் சொல்ல முடியவில்லை
நிசிவரைப்பொத்திப்
பிடிச்சபடி மயிர்கால்கள் சிலிர்த்திட -
கண்களில் மாரி பெருகிட- சர்வாங்கம்
நடுங்கக் குளறிக் குளறியழுதான்....
யாருக்காக அழுதான்? சுனாமியில் சகல
செல்வத்தையும் இழந்த மாதாவிற்காக

அழுதான்! ரெலிபோனை அடித்து
வைத்துவிட்டு தங்கராசாவைப்
பாடுகிறான்....

சட்டைமேல் சட்டை போட்ட உங்கமகன்
கயிறளவு சங்கிலி போட்ட உங்கமகன்
மேகவண்ணத் தொட்டிலில்
வளர்த்தமகன்
ஊர்ச்சனம் அறியாமல் உற்றாரும்
இல்லாமல்
உடன் மரணம் வந்ததென்றா
சொல்லத்தாயே

சுனாமி பேரிடியில் நிற்கும்தாயிடம்
சொல்ல
தங்கராசா சாவினை எப்படிச்
சொல்வேன்
தலையில் எழுதியதை தாயவள்
அறிவாளா
சுனாமி விதைத்ததில் விம்மியழும்
மாதாவிடம்
மண்டையில் எழுதியபடி மாண்டான்
என ....
மதுவில் மூழ்கி குப்பையில் கிடந்தான்
என
தங்கராசா சரித்திரம் தரித்திரம் ஆனதே
அம்மா! தாயே! மாதாவே!
புண்ணியவதி.

(ரெலிபோன் வழி குரல் கேட்காத
கணத்தில்? தாயவள் புலம்புகிறாள்!
இந்திரன் அனலிடைப் புழுப்போல்
துடிக்கிறான் ... திரும்பவும்
தொலைபேசி வழியாக...)

பெர்ணபேத் பேரா அயல்வீட்டு ராசா
எந்தன் செல்வத் திருவிளக்கு எங்கே
எந்தன் செம்பொன் சுடரொளி எங்கே
எந்தன் மாணிக்கத் தூணோன் எங்கே

தனிய நின்று புலம்புறேனே பேரா
பொழுதுபட இங்கிருப்பானா பேரா?
வாய்விட்டுச் சொல்லடா எந்தனது
நோய்விட்டுப் போக பெர்ணபெத் பேரா!

மௌனத்தில் புதையாத
மனசாட்சியின் குரல் நீண்ட
பிரசங்கமாகத் தொனித்தது.
புலத்திலடிச்ச சுனாமியில்
மீண்டு தாயவள் தனித்து நின்று
இரு கைகளையும் விரித்துப்
புலம்பினாள்.

மா.கி.கிறிஸ்ரியன்
(பிரான்ஸ்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கண்ணில் தெரியுதொரு தோற்றம்

■ செ. யோகநாதன்

வானத்திலே நட்சத்திரங்கள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கையில் மாணிக்கவாசகர் இருளை வெறித்துப்பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். பனங்கூடலும் இருளுக்குள்ளே முற்றாகவே மூடிக்கிடந்தது. சுவர்க் கோழியின் சத்தம் அந்த விரிந்த மௌனத்துக்கிடையே காதுகளை ஓங்கி அறைந்து எரிச்சலூட்டிற்று. அது எதிரே தெரிந்தால் பெருவிரலால் நசிக்க வேண்டும் போல மனதினுள்ளே மூர்க்கம் கொதித்தது. பிறகு தன்னை அமைதிக்குக் கொண்டுவர முயன்றான். பத்மாவின் முகமும் குரலும் மனவெளியில் தோன்றி ஒலித்தன. கனிவான முகம், நேசம் இழைந்த குரல், பத்மா அடிக்கடி சொல்லுவாள்: "எதுக்கும் அடிக்கடி கடுமையாகக் கோபப்படாதேங்க".

அவளை நினைத்தபோது கோபம் மெல்லவே மங்கிப்போய் வேதனையும் மனதிலே பரவிற்று. அந்தக் கம்பீரமான உருவம் எதிரே நடந்து வருவதுபோலத் தோன்றிற்று. அணிவகுப்பில் ஒத்திசைவாக நடப்பது போல ஆளுமைசெறிந்த நடை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாணிக்கவாசகரும் அவளும் ஒன்றாகவே படித்தனர். ஒன்றிரண்டு புள்ளிகள் வித்தியாசத்தில் தான் அவர்கள்? ஒருவரை ஒருவர் முந்தி முதலாமிடத்துக்கு வருவர். அவள் முதலாமிடத்துக்கு வந்தால் அவனால் தாங்கிக்கொள்ள முடியாது. இரண்டு நாட்களுக்கு அவளோடு எதுவுமே கதைக்கமாட்டான். வேண்டுமென்று ஒதுங்கிகொள்ளுவான். அவள் இயல்பாகக் கதைக்க வரும்போதெல்லாம் வெடுக்கென்று எரிந்து விழுவான். அப்போதும் பத்மா அவனைச் சினக்கவே மாட்டாள். பரிவோடு அவனைப் பார்ப்பாள். கண்களில் மலர்ந்த புன்னகை இருக்கும். மறுநாள், அதற்கு மறுநாள் அவனைப் பார்க்கிறபோது அதே பரிவோடும் புன்னகையோடும் எதிர்கொள்வாள். முன்னர் எதுவுமே நடக்காததுபோல நடக்கும் அவளைப் பார்க்கிறபோது தன்னையிட்டு அவன் அவமானமடைவான். ஏதாவது அதைப்பற்றி சொல்ல வாயெடுத்தால் "சரி சரி இப்ப அந்தக் கதையை விட்டிடுங்க" என்று குறிக்கிட்டுக் கூறி, அவன் வார்த்தைகளைத் தொடரவிடாமல் வேறெங்கோ கவனத்தை இழுத்து செல்வாள். அந்த வளரிளம் பருவத்திலேயே அவனுக்கு அவள் சொல்லுதற்கரிய அற்புதமாகப்பட்டாள்.

தற்செயலாக ஒருநாள் பத்மாவின் வீட்டிற்கு அவன் சென்றான். வீடு ஒரே பரபரப்பாக இருந்தது. உள்ளே போகலாமா, திரும்பலாமா என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தபோது அவளது குரல் தான் அவனை உள்ளே அழைத்தது. "வீட்டுக்கு வந்திட்டு ஏன் திரும்பிப்போறியள்? உள்ளே வாருங்க?" பதில் பேசாமல் அவன் உள்ளே சென்றபோது பத்மாவின் அக்கா சரோஜினி தடுமாறிய குரலிலே, "தம்பி, பத்மாவினுடைய வேலையைப் பாருங்க, ஒரு நாகபாம்பைக் கையாலை பிடிச்சு நிலத்தில தூக்கி அடிச்சுக் கொன்று இருக்கிறா?.. அங்கை பாரும்?.." என்றாள்.

மணிக்கவாசகர் திகைத்து தடுமாறிப்போனான். சுவர் ஓரமாக தலைசிந்து உடல் சிதைந்து சிதறிப் போய்க் கிடக்கும் பெரிய நாகபம்பு, அதைப் பார்த்தபோதே உடம்பு புல்லரித்துச் சிலிர்த்தது. சட்டென்று பார்வையை அந்த இடத்திலிருந்து தூக்கிய போதிலும், மனத்திற்குள் தலைநசிந்து உடல்சிதைந்து சிதறிபோய்க் கிடக்கின்ற அந்தக் கோரம் மட்டும் அழுத்தமாகப் பதிந்துபோய்விட்டது.

"என்ன கடுமையான யோசனை?"

பத்மாவின் குரல் அவனைச் சுயத்திற்குக் கொண்டு வர எதிரே நின்ற அவளைப் பார்த்தான்.

"என்ன வேலை செய்திருக்கிறியள்?"

அச்சம் படிந்திருந்த அவனது வார்த்தைகளைக் கேட்டு அவளது முகத்தில் புன்னகை. அவனே தொடர்ந்தான்:

"சரியான விஷப்பாம்புபோல இருக்குது கடிச்சிருந்தால் என்ன செய்திருப்பியள், இப்படிச் செய்யப் பயமே இல்லையோ?

"அதுதானே, அதைக்கேளும் தம்பி".

குறுக்கிட்டாள் சரோஜினி.
நீண்டிருந் ஒற்றைப் பின்னலை, தோளிலிருந்து பின்னே தள்ளிவிட்டவாறு அவர்களைப் பார்த்தாள் பத்மா.

"பாருங்க, நான் வீட்டுக்குள்ள வந்தபோது தடுக்குப் பாயிலை குழந்தை சந்தோஷமாக விளையாடிக்கொண்டிருந்தது. அதுக்குப் பக்கத்திலை இந்தப் பாம்பு படம் விரிச்சு ஆடிக்கொண்டிருந்தது. கொஞ்சநேரம் விட்டிருந்தாலும் அது குழந்தையைக் கொத்தியிருக்கும். எனக்கு அப்போ குழந்தையைக் காப்பாத்துறதுதான் முக்கியமாகத் தெரிஞ்சுது. பாம்பை ஆபத்தில்லாமல் பிடிக்கவேணுமென்டால் கழுத்திலை பிடிச்சு தூக்கி எறிய வேணும், இல்லையென்றால் வாலைப் பிடிச்சுத்தூக்கி நல்லா இறுக்கிச் சுற்றிவிட்டு தூரமாய் எறிய வேணுமென்ற எங்கேயோ படிச்சது நினைவிலை வந்தது, உடனே பாம்பை வால் நுனியிலை பிடிச்சுத் தூக்கி எறிஞ்சிட்டன், அவ்வளவுதான் எனக்குத் தெரியும்"...

அவள் சொன்னதிற்கு என்ன கூறுவெதென்றே மாணிக்கவாசகருக்குத் தோன்றவில்லை. பத்மா ஒவ்வொரு விஷயத்தையும் தீர்க்கமாக யோசனை செய்தபிறகே செய்கிறாளென அவன் எண்ணினான். பல சந்தர்ப்பங்களில் இதை அவன் வெகு நுணுக்கமாகவே கவனித்து வந்திருக்கிறான். அவளைப் பற்றிய அபிப்பிராயம் மேலும் மேலும் அவனது மனதிலே அதிகரித்து வந்தது. மழை சோனாவாரியாகப் பெய்துகொண்டிருந்த ஐப்பசி வெள்ளியொன்றின்போது அந்தச் செய்தியை அவன் கேள்விப்பட்டு மனம் உடைந்து போனான். பத்மா, தான் இயக்கத்தில் சேரப்போவதாக் கடிதம் எழுதி வைத்துவிட்டுக் காணமற்போய்விட்டாள்.

ஒரு மாதத்தின் முன் அவளின் உறவுப் பெண் ஒருத்தி வெறிபிடித்த சிப்பாய்களால் மூர்க்கதனமாகப் பாலியால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு பின் குப்பைக் குழியொன்றினுள் தூக்கி வீசப்பட்டிருந்தாள். கழுத்துச் சிதைந்த நிலையிலே அவளின் சடலம் கண்டெடுக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டாள். பத்மா அந்தப் பெண்ணின் பிறந்தநாளுக்கு வழங்கிய பாதசரங்களை வைத்தே அவள் அடையாளத்தினைத் தெரிந்துகொள்ள முடிந்தது. அதன் பிறகு ஒரு வாரமாக அவள் கல்லூரிக்கு வரவில்லை. பின்னர் வந்தவளின் முகத்தில் மலர்ச்சி முற்றாகவே கருகிப்போயிருந்தது. பார்வை எங்கோ வெறிச்சோடிற்று. இரண்டொரு வார்த்தைகளைப் பேசுவதே அபூர்வமாயிருந்தது. இப்படியான நிலையின் தொடர்ச்சியில் அவள் காணமற்பேன செய்தி வந்தது. அவனுக்கு என்ன செய்வதென்றே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"காற்று கரும்பனைகளை
அசைந்து உயிர்ப்பித்தபடி
சூரியனும் முகஞ்சிவந்து
சீற்றத்தோடு

வேலிக் கதியாலிருந்த
துயர் உரைக்கும் ஒற்றைக் காகம்

அண்ணனின் சைக்கிள்
ஈச்சமரத்துப் பற்றைக்குள்
முட்கள் நெருடியபடி
இறுதிக் கணத்திலும்
ஓங்கியெழும் எண்ணங் கொண்டு அவன்
கைகள் தாய் மண்ணை இறுகப் பற்றியபடி

காற்றில் மந்தமாக ஒலித்த
துப்பாக்கி சுடு குரல்
வீட்டின் சாளரங்களையும் உதைத்தது.

விசாரணைக்கென
அழைத்துச் செல்லப்பட்ட
அப்பாவின் சாய்மனைக் கதிரை
வீட்டுத் திண்ணையில்
தனித்துக் கிடந்தது.

முகரித்தழும்
திண்ணை முற்றத்தில்
ஏற்றிவைத்த விளக்கின் சுடர்காத்து
தூங்காத இரவுகளுடன் அம்மா......... இன்னும்
நம்பிக்கையோடு காத்திருக்கிறாள்."

போர்க்கால தமிழீழ நிலவரத்தை அப்படியே நம் கண்முன் கொண்டுவருகிறது இக்கவிதை. எத்தனையோ பக்கங்களில் விபரிக்கப்படும் சிறுகதையால் கூட சொல்லமுடியாத விஷயத்தை, இச்சிறுகவிதை மிகத் தத்தரூபமாக எடுத்தியம்பிச் செல்கிறது.

இவ்வாறு தான் விட்டுவந்த மண்ணின் துயர உதைப்புகளை, அங்கொன்றாய் இங்கொன்றாய் மீட்டுவரும். இத்தொகுப்பில் உள்ள 37 கவிதைகளும், வித்தியாசமான முறையில் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக, ஒன்று காட்ட முயன்றதை அடுத்து வரும் கவிதை இன்னோர் கோணத்தில் புதுமைப்படுத்துவதும் அதற்கடுத்து வரும் கவிதை வேறோரு பரிமாணத்தில் முன்வந்தவற்றை விளக்கிச் செல்வதுமாக, ஒரு குறு நாடக முகந்தரித்து நிற்கின்றன. அதாவது புலம்பெயர்ந்து வந்த ஈழத்து மனிதனொருவன் மேற்குலகின் யந்திர வாழ்க்கையில் சிக்கியவாறே, அதிலிருந்து விடு பட முடியாத நிலையில் தன் தாய்நாட்டையும் தன் கிராமத்தையும் சிறு வயதில் அங்கு வாழ்ந்தனுபவித்த இன்பங்களையும் மீட்டுப்பார்த்து அதை ஒரு தங்குமிடமாக்கி ஒதுங்கியவாறே, இன்றுள்ள துயரங்கெளுக்கெல்லாம் காரணத்தைத் தேடுகிறான். அங்கே அவனுக்கு இனம், மதம், நிறம், சாதி, அந்தஸ்து என்னும் வர்ணப்பிரிவுகளே இத்தனைக்கும் காரணமாகப் படுகிறது.

ஆகவே இந்த வர்ணப்பிரிவுகளை உடைத்து தெறிந்து வர்ணங்கள் கரைந்த வெளியில் சஞ்சரிக்க அவாவுகிறான். அதே வேளை ஒவ்வோர் மக்கள் குழுக்களுக்கும் உரித்தான மானிட நேயத்தை வலுப்படுத்தும் உயர்ந்த மனித விழுமியங்களை, கலை, பண்பாடுகள் என்னும் வர்ணங்களின் முற்போக்கு அம்சத்தையும் பேணவிரும்புகிறான். இங்கே 'வர்ணங்கள்' என்ற வார்த்தை, பிற்போக்கு - முற்போக்கு ஆகிய இரட்டைத் தன்மைகளை வெளிப்படுத்துவனவாகப் பாவிக்கப்படுவது அழகு தருகிறது.

இதோ அவரின் முதல் கவிதையான 'யந்திரன்' எடுத்த எடுப்பிலேயே புலம் பெயர் மக்களைச் சூழ்ந்துள்ள யந்திர 'கலாசாரத்தை' மிக அழகாக வெளிப்படுத்துகிறது.

வாழ்வின் நற்கனித் தோட்டத்திலிருந்து
துரத்தின நச்சுச் சர்ப்பங்கள்
நாம் யந்திரராகப் பிறந்தோம்.

மேற்குலகின் பண்பாட்டு விழுமியங்களைத் தழுவிய சொற்களைக் கொண்டே புலம் பெயர்ந்த ஈழத்தமிழரின் அவல நிலையை விளக்கிச் செல்கிறார் கவிஞர். சொந்த தாயகத்தை நற்கனித் தோட்டமாக உருவகித்த கவிஞர், அவர்களை அங்கிருந்து விரட்டிய இனவாதத்தை, நச்சு சர்ப்பமாகவே மிகுந்த பொருத்தப்பாட்டுடன் உருவகிக்கிறார். இன்னும் மேலே சென்று.

"இரும்பின் துண்டொன்றாலா
என்னை இறைவன் படைத்திருக்கக் கூடும்
என் விலா எலும்புருவியா
'இயந்திரனி' பிறந்திருக்கக் கூடும்
ஏதும் அறிகிலேன் பராபரமே" என்று
அங்கலாய்கிறார்.

இங்கே, மேற்குலகிற்கு புலம்பெயர்ந்தவன் யந்திர வாழ்க்கைக்குள் சிக்கப்படவில்லை, யந்திரமாகவே மாறிவிட்டான் என்பதே சுட்டப்படுகிறது. அதனால்தான் 'இரும்பின் துண்டொன்றாலா எனை இறைவன் படைத்திருக்கக் கூடும்' என்றும் 'என் விலா எலும்புருவியா இயந்திரனி பிறந்திருக்கக் கூடும்'. என்றும் கவிஞர் கேட்கிறார். யந்திர வாழ்க்கை இவனையே இரும்பு கொண்டு செய்த யந்திரமாக மாற்றிவிட்டது. இவன் யந்திரமென்றால் இவனது துணை - இவனது விலா எழும்புருவிச் செய்யப்பட்ட துணை - யந்திரனியும் யந்திரந்தானே உண்மை. ஆனால் கவிஞர் இத்துடன் நிற்கவில்லை.

"பாம்பின் வாய்த்தவளை போலும்
இயந்திரப் பற்களிடை இருக்குண்டோம் பார்"

என்று அடுத்தவரிகள் இதன் காட்சிப் பரிமாணத்தை இன்னும் அதிகரிக்கிறது. இப்போ மேற்குலகமே தனது யந்திரமயப்பட்ட நாகரிகத்துள் வீழ்ந்து கிடக்கும் அவலத்தை.

"இதென்னயிது?
யந்திரப் பிறப்பெடுத்த
இந்த மனிதனையும்
சர்ப்பமா மோசம் செய்தது, சர்வேசா"

என்று கூறி யந்திரமயமாகிப்போன இந்த மனித உருவாக்கத்துக்கும் பழைய இதிகாச சர்ப்பந்தானா காரணம் என ஓர் எள்ளலோடு கேட்கிறார் கவிஞர். மொத்தத்தில் புலம் பெயர்ந்த அகதியாக இருந்தாலும் சரி இந்த அகதிகளை யெல்லாம் மேய்க்கும் மேற்குலக எஜமான்களாய் இருந்தாலும் சரி, யந்திர வாழ்க்கை என்னும் சர்ப்பத்தின் வாய்ப்பட்ட தவளையின் அவலத்துக்குள்ளே விழ்கின்றனர்.

'நிலச் சுரங்க ஓவியங்கள்' என்னும் கவிதை, மேற்குலக நகரையும் அங்கு மனித வாழ்க்கையை உறைய வைக்கும் யந்திரத்தன்மையும் மிக நேர்த்தியாக விபரிக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சூரியனைச் சாப்பிட்டு விட்டு
தினவெடுக்கிறது
அடங்கித் துயிலாப் பேய் நகர்.

அசுரப்பசி எடுத்து நிற்கும்
இருளின் திடலென
எரியும் சுரங்கத் தீவாய்
பகல், இரவு உணவு விடுதிகள் ஒவ்வொன்றும்.

பந்தயக் குதிரைகள் போல்
அடிமைச் சுரங்கத் திடலில்
மனிதர்கள் எனப்படுவோர் ஓடுவர்.
இருளின் திட்டிறங்கிச் சென்று
எல்லைக் கயிறு பிடிக்கப்
போவாரைக் காணவில்லை

இரவின் மீட்டற் சுதியுமறியாது
நாற்பதையுங் கூட நாமிழந்து போகலாம்.
உயிர்களை இழந்த ஓவிய நிழல்கள்
கற்குகைப் படிவென உறைந்து போகலாம்."

இது 'சூரியனைச் சாப்பிட்டு விட்டு தினவெடுக்கிற' மேற்குலகப் பேய் நகர் ஒன்றின் காட்சி. ஒவ்வொரு காட்சி விபரிப்பிலும் அதன் பிசாசுத் தன்மை வெளிவருகிறது.

"அசுரப்பசி எடுத்து நிற்கும்
இருளின் திடலென
எரியும் சுரங்கத் தீவாய்
பகல், இரவு உணவு விடுதிகள்"

என்று கூறிச் செல்லும் கவிஞர், அடுத்த காட்சியில்

"பந்தயக் குதிரைகள் போல்
அடிமைச் சுரங்கத் திடலில்
மனிதர் எனப்படுவோர் ஓடுவர்"

என்று இன்றைய மேற்குலக நாகரிகச் சுழலில் அமுங்குண்டு 'பந்தயக் குதிரைகள் போல்' யந்திரமாக இயங்கும் மனிதர் பற்றிச் சொல்கிறார். எவ்வாறு மேட்டுக் குடிகளினதும், சூதாடிகளினதும் வேட்கையின் பரிதாபத்துக்குரிய குறியீடுகளாய் பந்தயக் குதிரைகள் நிற்கின்றனவோ, அவ்வாறே வேலைப்பழுவில் சிக்குண்ட மக்கள், யந்திரங்களாய் 'நான் முந்தி, நீ முந்தி' என வேலைகளுக்காக ஓடுகின்றனர். என்பதை இது மிக அழகுற எடுத்துக்காட்டுகிறது.

ரி. எஸ். எலியட் தனது 'தரிசு நிலத்தில்' காட்டும் மேற்குலக நகரின் வெற்றுப்படாபடோபம் இங்கே நம் தமிழ்க்கவிதையிலும் மிக லாகவத்தோடு வந்துவிழுகிறது.

இந்நிலைப்பட்ட புலம் பெயர்ந்த, அகதி வாழ்க்கை மேற்கொள்ளும் மனிதனுக்கு ஓய்வெங்கே, நிம்மதி எங்கே ஏற்படப் போகிறது. அவன் ஆசையுடன் அணைக்கும் பிள்ளைகள் கூட அவனை யந்திரமாகக் காணும் போது அவனுக்கு எங்கே நிம்மதி ஏற்படப் போகிறது. இதோ 'அப்பாவின் ஓவியம்' அதைத்தான் நமக்கு அறிவுறுத்துகிறது.

"வர்ணச் சோக்கட்டிகளால்
குழந்தை ஓவியமொன்று வரைந்திருந்தான்
அவனது தந்தையின் பிறந்த நாளின் பரிசாக.

ஒடுக்கப்பட்டவனுக்கான ஆடையை
வர்ணங்களினால் செய்த அந்தச் சின்னக்கையை
தாய் முத்தமிட்டாள்.

அவ்வோவியத்தில் மூன்று கால்களும்
இரண்டு இதயமும் இருந்தன .....
முகமற்றவனாகவும்
இயந்திரமானவனாகவும் அவன்
வரைந்திருந்தான்
ஓவியத்தின் அடியின் எனது அப்பா
எனத்தலைப்பிட்டிருந்தான்."

இந்நிலையில் அவனுக்கு எங்கே நிம்மதி வரப்போகிறது? அதனால் அவன் மீண்டும் மீண்டும் பழைய ஊர்நினைவுகளில் தொங்கியவாறு சஞ்சரிக்கிறான் 'அகதியின் கடிதம்' கவிதை நமக்கு அதைத்தான் சொல்கிறது.

"எத்தனை நாளைக்கு தானம்மா
சவாரி மாடென நிற்பது
நுகத்தடி கண்டிய காயங்கள்
கழுத்தில் மாலைபோல்"

மேலே 'பந்தயக் குதிரைகள்' எனக் குறிக்கப்பட்ட அவனது வாழ்க்கை இங்கே 'சவாரி மாடாக' காட்டப்படுகிறது. ஊரின் நினைவு அவனுக்கு ஊருக்கேற்ற ஒப்புவமைகளையே கொண்டுவந்து அவன் சொல்லவந்தவற்றுக்கு வலுவேற்றுகிறது.

வீட்டு நினைவு அவனுக்கு தன்னோடு அகதி வாழ்கைவாழும் தன் குழந்தைகளைப்பற்றி எண்ணவைக்கிறது. அவன் தன் குழந்தைகளுக்கு ஊரில் உதிக்கும் சூரியனைக் காட்டுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறான். ஆனால் காட்டமுடிகிறதில்ல. ஊரில் அவன் பார்த்த சூரியனைக் காட்ட முடியுமா? அந்த அழகை அவர்களுக்கு அவனால் அள்ளிக் கொடுக்க முடியுமா?

"சேற்றுக்குளத்திலே கிடந்து
கும்மிருட்டு கலைய
மலரும் பொற்றாமரை போலும்
மகிழ்வினை எப்படி பிள்ளைகளுக்கு
பூத்துக்காட்டுவது?

வானுக்கும் பூமிக்கும் நடுவே
வலியகருங்கோடாய் நிற்கும்
பனையின் உச்சியில் செந்தணலாய் சிரிக்கும்
சூரியனைப் பிரிந்தகதையை
பிள்ளைகளுக்கு எந்த
முகத்தோடு சொல்லுவேன்..." என்று
அவன் மனம் அலைபாய்கிறது.

குளத்தில் கும்மிருட்டுக் கலைய மலரும் பொற்றாமரையையும் பனையின் உச்சியில் செந்தணலாய் சிரிக்கும் சூரியனையும் அவன் 'பூத்துக் காட்ட முடியுமா? அவன் மனம் துயரில் வீழ்கிறது.

ஏன் இந்த கொடுமை?
அவர்களை அகதியாய் திரிகவென யார் சபித்தார்?
யார் செய்த பாவம் இது?

எல்லாவற்றுக்கும் காரணம் மனிதனே தான் நாகரிகத்தின் உச்சத்தைத் தொட்டு விட்டதாகப் பீற்றிக்கொள்ளும் மனிதன் இனவாதம், நிறவாதம், மதவெறி, சாதியம், சுரண்டல், பதவி மோகம் என்று தனக்குள் இருந்து வெளிக் கிளம்பும் சாத்தானின் பிடியிலிருந்து தன்னை மீட்டெடுக்காத வரை இதுதான் தொடரப்போகிறது. நிம்மதி எவருக்கும் கிட்டப்போவதில்லை. இங்கே தான் கவிஞர் வர்ணங்கள் கரைந்த வெளியை கூவியழைக்கிறார். தான் இழந்த கிராம வாழ்க்கைக்காக ஏங்கியவர், தன் தாயகம் அடிமைப்பட்டுக் கிடப்பதையிட்டும் துன்பத்தில் வீழ்ந்தவர், தன் புலம் பெயர்ந்த வாழ்க்கை

தொடர்ச்சி.....41ம் பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மௌனப் புதைகுழிக்குள் 2



## மகிழடித்தீவுப் படுகொலை

**1991**, ஆனித் திங்கள். 12ம் நாள் மகிழடித்தீவுக் கிராமம் நினைவழியாத இரண்டாவது துயரத்ததைச் சந்தித்தது. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் அடுத்த பெரும்படுகொலை நடந்துமுடிந்தது 132 பேரை கொன்றழித்து, 400 வீடுகளை எரித்து நாசமாக்கி சொத்துக்களைச் சூறையாடிச் சென்ற இராணுவத்தினரை யாரும் தட்டிக் கேட்கவில்லை. விரும்பிய பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தலாம். விரும்பிய வீடுகளை கொழுத்தி எக்காளமிடலாம். என்ற சுதந்திரத்தை சிங்கள இராணுவத்துக்கு சிங்கள அரசு வழங்கியிருந்தது. சிங்கள இராணுவத்தினரது இன அழிப்பு சுதந்திரத்தின் இரண்டாவது அரங்கேற்றம் மகிழடித்தீவில் நடந்து முடிந்துபோனதை அறியவிரும்பினேன். கொலைகார கும்பலுக்குள் அகப்பட்டு தப்பிக்கொண்ட கணபதிப்பிள்ளை மோட்சமலர், முத்துலிங்கம் விமலாதேவி, வல்லிபுரம் காரிகாதேவி, கறுவல்தம்பி ஆயில்ப் போடி ஆகியோர் இக்கொடூரக்கொலை பற்றி மாறி மாறி சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

"எல்லா இடமும் வெடிசுட்டுக் கேட்குது. அப்ப நான் என்னுடைய இரண்டு மகனுக்கும் சொன்னன், வெடிசுட்டுக்கொண்டு வாறான், வாருங்கோ சனங்கள் எல்லோரும் போறபக்கம் போய் சேந்திருப்பமெண்டு. சொல்லிக்கொண்டு வெளிக்கிட்டேக்க பாத்தா குளக்கட்டால சுட்டுச் சுட்டு வந்திட்டான். பிடிச்சுக்கொண்டுவாற ஆம்பிளையள் பொம்பிளையள் எல்லாருக்கும் அடியெண்டால் கண்ணால பாக்கேலாது. அடிச்சுக்கொண்டு வாறபொழுதே வீடுகளைக் கொழுத்திப்போட்டு உயிரோடு அதுக்க ரெண்டொருபேராய் தள்ளிவிட்டான். கையெடுத்துக் கும்பிட்டும் அவனுக்கு இரக்கமே வரல்ல. படுபாவி வீட்டுக்க தள்ளின உடன அதுக்க நிறைய நெல்லுமூடைகள் அடுக்கியிருந்தது. அதில ஏறி, தம்பி குலசேகரம் சுவருக்குமேலா பின்பக்கமாய் குதிச்சான். இனி நான் என்னசெய்யிறது, எரிஞ்சு சாகிறதைவிட கால்முறிஞ்சாலும் பறவாயில்லையெண்டு ஏறி குதிச்சான். குதிச்சவுடன் ரெண்டுபேருமா அடுத்தவீட்டுப் பக்கமாய் ஓடி பின்பக்கம் கிடந்த தகரங்களால மூடிக்கொண்டு பேசாமல் கிடந்ததும் தம்பி சொன்னான் "இனி எங்கேயும் ஓடேலாது. சாகிறதெண்டால் இதுக்குள்ளேயே கிடந்து சாகுவம். வெளியில சுடுறசத்தமும் அழுற சத்தமும் கேட்க, கண்ண இறுக்கி மூடிக்கொண்டே கிடந்தம்" என கறுவல்த்தம்பி ஆயில்ப்போடி என்ற முதியவர் சொல்லும்போது நாக்குத்தடுமாறியது. எண்பத்தியொரு வயது நிரம்பிய அந்த முதியவரைக்கூட எரியும் நெருப்பில் தள்ளிவிட்ட கொடுமை மறக்கமுடியாது.

"வெடிச்சத்தம் சுத்திக் கேட்டுக்கொண்டிருந்தது. நம்மட அக்காவுக்கு குழந்தை பிறந்து பன்ரெண்டாம் நாள். மற்றவர்களுக்கும் சின்னக் குழந்தை. அக்கா சொன்னா, "தங்கச்சி நாங்களெல்லாரும் கதவைப் பூட்டிட்டு உள்ள இருப்பம். இல்லக்கா குழந்தையையும் தூக்கிட்டு மில்லுக்குபோவம். எல்லாரும் அங்கேதான் போறாங்கள். எண்டு சொல்லீட்டு பிள்ளையையும் தூக்கீட்டு போனம். மில்லுக்கு முன்துண்டு, நடுத்துண்டு, உள்துண்டு எல்லாம் நிறையப்பேர் இருந்தாங்கள். குழந்தப் பிள்ளையள் எல்லாம் அழுதாப்போல பிள்ளையளின்ர அழுகையை நிப்பாட்ட எல்லாரும் பால்கொடுத் திட்டிருந்தாங்க. வெடிச்சத்தம் பக்கத்தில கேட்குது. உடன எல்லோரும் அரோகரா அரோகரா என கடவுள் கும்பிடத் தொடங்கினாங்க. உள்ளுக்கு வந்தவன் படபடடெண்டு சுடத்துவங்கினான். வகித்தால தலையால கழுத்தாலயெல்லாம் வெடிப்பறியுது. நானும் வெடிப்பட்ட மாதிரி குப்பறவிழுந்து கிடந்த ரத்தமெல்லாம் அள்ளி மேல்ல பூசிக்கொண்டு அசையாமல்க் கிடந்தன் மில்லுக்க இருந்த எல்லாரையும் சுட்டிட்டான். என்னோட அக்காவும் சேர்ந்து அஞ்சுபேர் மட்டும் தப்பினனாங்க. எல்லாரும் செத்தாப்போல் ரத்தத்தை அப்பீட்டு கிடந்ததால தப்பீட்டம். சூட்டுச் சத்தம் நிண்டு கொஞ்சநேரத்தில பிள்ளை.... பிள்ள..... என அம்மா கூப்பிடுற சத்தம் கேட்குது. எழும்பிப் பார்த்திட்டு அக்காட குழந்தையும் தூக்கிட்டு குழந்தையையும் தூக்கிட்டு பக்கத்து வீட்டு குந்தில வந்திருந்தன் அங்க பார்த்தா கையில்லாமலும் கண்தோண்டினாப்போலும் தலைவெட்டினால் போலும் கிடந்தாங்க. பிள்ளைக்கு பால்கொடுத்தாப்போல அப்படியே சவமாய் கிடந்தாங்க. கைக்குழந்தை ஒன்று சிதறி சுவரில் ஒட்டினாப்போலகிடந்தது. மில் வச்சிருந்த குமாரநாயகமும் அவரோட பொஞ்சாதி புவனேஸ்வரி, அவங்கட நாலுபிள்ளையள் எல்லாரையுமே சுட்டிட்டாங்க" என முத்துலிங்கம் விமலாதேவி என்ற இளம்பெண் அக்கொலையின் கொடூரம்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

முதலொரு 'பாட்டி'வந்து சுட்டிட்டு போக மறுகா அடுத்த 'பாட்டி'வந்து சுட்டிட்டாங்கள். அவங்கள் சுட்டிட்டுப்போக மூண்டாவது 'பாட்டி'யொண்டு திரும்பவந்து சுட்டாங்கள். மூண்டாவதா வந்த 'பாட்டி' மில்லுக்க கிடந்த எல்லாச் சவத்தையும் ஒண்டா இழுத்துப்போட்டிட்டு ஓலையள், ரயர்கள் எல்லாம் மேலே போட்டு கருக்கினாங்கள். அக்கம் பக்கம் பிடிச்சிட்டு வந்த ஆம்பிளைங்க எல்லாரையும் கிடங்குக்குள்ள சுட்டுச்சுட்டு போட்டான். கிடங்க ஒரு தரம் சுத்திவரச்சொல்வாங்கள் சுத்தி வந்த உடன ஒரு சூடு சுட்டு கிடங்கில போட்டவுடன் அடுத்தாளச் சுத்தச் சொல்வாங்கள். சுத்திவந்த உடன சூடுவிழும். இப்பிடியா முப்பத்தியேழுபேர குழிக்குள்ள சுட்டுச் சுட்டுப்போட்டான். அரோகரா அரோகரா எண்டு கண்ணீர்விட்டு கதறி அழுதது எல்லாரும் கிடங்க சுத்திவருங்கள். அந்த கொடியகாட்சியப் பார்த்திட்டு இருக்கவே உயிர் போனாப்போல இருந்தது. வெட்டினதும் சுட்டதும் ஒரு 'பாட்டி'.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மணலாறு விஜயன்





இன்னொரு ‘பாட்டி’ வடிவான பிள்ளையளாப் பாத்துபிடிச்சு மாறிமாறிக் கெடுத்திட்டாங்கள். அதை எப்படிச் சொல்லுறதெண்டே தெரியல்ல” வல்லிபுரம் காரிகாதேவியென்ற பெண் சொல்லவந்ததை நிறுத்திக் கொண்டாள். அவளது கண்கள் குளமாகியிருந்தது. வாய் திறந்துசொல்ல முடியாத துயரக்கதைகள் அவளது நெஞ்சை முட்டிக்கொண்டது. நெஞ்சை மெதுவாக அமத்திப்பிடித்துக் கொண்டு மறுகையால் கண்களை துடைத்துக்கொண்டாள். அவளது நிலையை உணர்ந்த கணபதிப்பிள்ளை மோட்சமலர் (முன்பள்ளி ஆசிரியர்) அந்தக் கொடுமையை மளமளவென சொல்லத்தொடங்கினார்.

“நான் மாவடி முன்மாதிரி பிள்ளையளுக்கு (முன்பள்ளி) பாடம் சொல்லிக் கொடுத்திட்டு சைக்கிளில வீட்ட வந்துகொண்டிருந்தனான். வரேக்க பாத்தன் கண்ணிவெடியில ரைக்ரர் மேல போய் கீழ வந்து விழுந்தது. நேர்றோட்டில அப்படியே வடிவா தெரிஞ்சுது. பார்த்தவுடன சைக்கிளோட விழுந்திட்டன். விழுந்தெழும்பிப் பாத்தன் ஆமி சுட்டிட்டு வாறான். எழும்பி ஓடினன். என்னைக் கலைச்சு வாறன். குளத்துக்கால ஓடினன். பின்புறமா பெரியம்மா வீட்ட போயிடலாமெண்டு ஓடினன். றோட்டு சைற்றெல்லாம் ஆமி படுத்துக்கிடந்து சுடுறான். சிவப்பு சட்டையோட ஓடினதால என்ன வடிவா கண்டிட்டான். அதால பின்னாலேயே வந்து எனக்கு சுட்டிட்டான். எனக்கு ரெண்டுவெடி. ஒண்டு முழங்கல்சில்ல உடச்சிட்டு. மற்றவெடியும் அடுத்த கால் எலும்ப உடச்சிட்டுது. அப்படியே குப்பறவிழுந்துகிடந்தன. நான் செத்திட்டாதா ஆமியும் நினைச்சான். சுத்தியிருந்த சனங்களும் நினைச்சாங்க. இரவு வரையும் ஒருதரும் தூக்கவரல்ல. நான் தண்ணி..... தண்ணி என அணுங்கின சத்தம் என்ன தேடிவந்த பெரியப்பாவுக்கு கேட்டிட்டுது. அவங்கதான் வண்டில்ல என்ன ஏத்திட்டுப் போனாங்க. பொழுதுபடும் வரையும் ஒருத்தரும் வரேல்ல. எல்லாரும் பயத்தில அங்கங்கு ஓடிட்டாங்கள். ஓடேக்க பட்டவங்கள பிடிச்சு சுட்டான். உயிரோட வீட்டுகளுக்க புகுத்தீட்டு நெருப்பு வச்சான். நாநூறு வீடுகள் கொழுத்துப்பட்டுது. எல்லா வீட்டிலேயும் நிறைய நெல்லுமூடைகள் கிடந்தது. நெல்லுமூடைகள் மட்டுமல்ல, ஆக்களும் சேத்து எரிஞ்சிட்டாங்கள். கன குமர்பிள்ளைகளும் பள்ளி ரீச்சர்மாரும் புண்ணியமூர்த்தி G.S வீட்ட( கிராமசேவகர்) ஓடிப்போய் ஒண்டாய் இருந்தாங்கள். அங்கேயையும் வந்து சேந்திட்டான். வந்தவன் அங்க நிண்ட பிள்ளையள அடிச்சுமிரிச்சு சட்டையெல்லாம் கிழிச்சு செய்யக் கூடாத வேலையெல்லாம் செய்தான். புண்ணிய மூர்த்தி சேரிண்ட ஒருமகளை (விஜிதா ரேணுகா) சட்டையெல்லாம் பிச்சு கெடுத்திட்டான். பிள்ள தனிய அம்பிட்டு. கொடுமை தாங்கேலாமல் பிள்ள மகிழடித்தீவ விட்டே ஓடீடுது. ரீச்சர்மார் பலர் இழுபறிப்பட்டு சட்டை சாறியெல்லாம் பிச்சிட்டான். ரேணுகா ரீச்சர் பாவம். எங்கேயோ தனிய மாட்டீட்டுது. அவங்கள படாதபாடு படுத்திப் போட்டாங்கள். இண்டைக்கும் அந்தப்பிள்ளையள் வாழா வெட்டியாக இருக்கிறாங்கள்.

அவங்களக்கேட்டா எதுவும் சொல்லமாட்டாங்கள். மயங்கி விழுந்திடுவாங்கள். இவங்களமாதிரித்தான் பேரின்பநாயகி எண்டொருபிள்ள. நல்ல வடிவானபிள்ள. அந்தப்பிள்ளபோல அழகான பிள்ளையை இஞ்ச காணேலாது. அந்தப்பிள்ளையைப் பிடிச்சு மாறிமாறி கெடுத்தாங்கள். பெத்ததாயின்ர கண்ணுக்கு முன்னால வச்சு படுபாவியள் செய்த கொடுமையை கடவுள் தான் என்னண்டு பொறுத்ததோ தெரியாது. தாய் சங்கிலியக் கழட்டி கொடுத்து “என்ர பிள்ளைய ஒண்டும் செய்யாதிங்கோ விட்டிடுங்கோ” என கும்பிட்டுக் கேட்டா. கையில கிடந்த காப்பைக் கழட்டிக் கொடுத்து தாலி, மோதிரம் எல்லாமே கழட்டிக் கொடுத்து என்ர பிள்ளையை ஒன்றும் செய்யாதீங்கோ என அழுது கெஞ்சி மண்டாடிக் கேட்டும் அவங்கள் விடல்ல. மறைப்பில கடிகாயம் இல்லாத இடமே இல்ல. ரத்தத் துவாலையோட பிள்ள மயங்கினாப் போலதான் விட்டிட்டுப் போனாங்கள் பாவியள். அந்தப் பிள்ள இப்பவும் இருக்கு. ஆனால் கலியாணம் கட்டி குழந்தைகள் பெத்து புருசனோட சந்தோசமாய் இருக்கிறாள். ஆனா மகிழடித்தீவ விட்டு அண்டைக்கு ஓடிப்போனதுதான். இண்டைக்கும் இந்தப்பக்கம் வரல்ல. ஆமி வாறானெண்டு சும்மா சொன்னாப்போதும். அறிவு மயங்கி விழுந்திடும். இந்தப் பக்கத்தால ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'பாட்டி' இப்பிடி செய்ய, இன்னொரு பாட்டி முதலைக்குடாப்பக்கம் போய் பள்ளிக்கூடத்துக்குள்ள சேந்திருந்த ஆக்களில் ஒருமட்டான ஆம்பிளப்பிள்ளயளப் பிடிச்சுவந்து மில்லுக்கவச்சு சுட்டான். பொஞ்சாதிக்கு முன்னால புருசனையும், தாய்க்கு முன்னால பிள்ளைகளையும் எரியிற வீட்டுக்குள்ள உயிரோட புகுத்தினான். மில்லுக்க கிடந்த132 பேரை ஓலைகளைப்போட்டு அங்கு கிடந்த டீசலை ஊத்தி எரிச்சி கருக்கிப்போட்டு பொழுதுபட ஆறுமணிக்குத்தான் ஊரைவிட்டு கிளம்பினான். குண்டுவெடிச்ச கிடங்கில சுட்டுச்சுட்டுப் போட்டதில கிடங்கு நிரம்பிவிட்டது. இல்லையெண்டால் இன்னும் சுட்டிருப்பான்" என மோட்சமலரும், காரிகாதேவியும் மாறிமாறி இந்தக் கொலையின் கொடூரத்தை சொல்லிமுடித்தனர்.

"காயப்பட்டு கிடந்தவர்களை சிகிச்சை செய்யிற வசதியோ வைத்தியசாலையோ இஞ்ச இல்ல மகன்.

நம்மட மகள பொலனறுவை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக, தமிழனெண்டு சொல்லி வைத்தியம் செய்ய மறுத்திட்டான். பிள்ள ஆபத்தான நிலைக்கு வந்திட்டாள். திரும்ப அங்க இருந்து கொழும்புக்கு கொண்டுபோனன். ஆறு மாதத்திற்கு பின்னர்தான் சுகப்பட்டு கூட்டிட்டு வந்தன். நாசமாய் போவானுகள் அண்டைக்கு செய்த கொடுமைகளை சொல்லேலாது. மகன். மில்லுக்குள்ள அவங்கள் கருக்கிட்டுப்போன சவங்கள பாக்க ஏலாது, தாயில பால் குடிச்சபடி நாலஞ்சு குழந்தையள் கருக்கிக்கிடந்தார்கள். என்ர பிள்ள எங்க.... என்ரபுருசன் எங்க...எண்டு இனங்கண்டு கொள்ளமுடியாமல் புரட்டிப் பார்த்து அழுதிட்டு நிண்டதை யாருட்ட சொல்லுறது" என மோட்சமலரின் அம்மா திருமதி. கணபதிப்பிள்ளை சொல்லிக் கண் கலங்கி நின்றாள்.

அருட்தந்தை யோசப் மேரியினதும், யோசப் பரராசிங்க எம்.பியினதும் முயற்சியில் குமார் பொன்னம்பலம், ஏ.எம். எம்.சகாத்தீபன் ஆகியோர் அடங்கிய விசாரணைக்குழு இப்படுகொலை பற்றி விசாரணை செய்து வெளியுலகுக்கு கொண்டுவர முற்பட்டபோதும் சிங்கள பேரினவாதம் அதை விழுங்கி மறைத்துவிட்டது. கேட்பாரற்று அநாதைகள்போல் அழிக்கப்பட்ட தமிழ் மக்களின் துயரக்கதை பட்டுநகர் மண்ணில் தொடர்ந்தது. மகிழடித்தீவிலும் இறால்பண்ணையிலும், மில்கட்டிடத்தினுள்ளும் முடிந்துபோன தமிழர்வாழ்வு கொக்கட்டிச்சோலைப் படுகொலை என்ற பெயரோடு பத்திரிகைகளில் அவ்வப்போது பெட்டிச் செய்தியாகவந்து மறைந்து போயின. ■

# பிந்துனுவெவ படுகொலையின் ஒரு பார்வை

பே.சுகந்தன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் தலைவர் எம். எக்ஸ் கருணாரட்டனம் அடிகளார் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் பிந்துனு வெவவில் சிறிலங்கா அரசால் அமைக்கப்பட்ட புனர்வாழ்வு நிலையத்தில் தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். 7ஆண்டுகளாக இம் முகாம் இயங்கி வந்தது. இக்கிராம மக்களுக்கும் கைதிகளும் இடையே நல்லுறவே நீடித்து வந்தது.

இச்சூழலில் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 25ம் திகதி இருபத்தி நான்கு மணிநேரத்தில் தூண்டிவிடப்பட்ட பகமை உணர்வு காரணமாக இக் கிராம மக்களோடு சேர்ந்து ஒரு காடையர் கும்பல் இம் முகாமைத் தீயிட்டுக் கொழுத்தியதோடு அங்கிருந்த கைதிகளில் 26பேரை கொடூர மாகக் கொலை செய்து 14பேரை படுகாயங்களுக்குட்படுத்தினர்.

இத் தாக்குதல் நடந்தேறிய நேரம். இந்நிலையத்தைச் சுற்றி 60ற்கு மேற்பட்ட காவற்துறையினர் இருந்தும் எவரும் இவர்களைப் பாதுகாக்க முன் வரவில்லை. அதன் பின்பும் இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. தொடர்ந்து வந்த தமிழ் மக்களின் வலியுறுத்தல் களின் பின்னரே சிறிலங்கா ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்தார்.

இக்குழு தமது சொந்த விசாரணைகளின் அடிப்படையிலே 19 சிறிலங்காப் பொலிசார் உட்பட 41பேரை குற்றவாளிகள் என அடை யாளம் காட்டி 2000ம் ஆண்டு நவம்பர் மாதம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

இவ்விசாரணை முடிவடைந்து 2003ம் ஆண்டு 2 காவற்துறை உறுப்பினர்கள உள்ளிட்ட 5 பேரிற்கு மரணதண்டனை நிறைவேற்றி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மிகுதிப் பேரை குற்றமற்றவர்கள் என விடுதலை செய்தது. இந்நாடகம் முடிந்த பின்பு அடுத்தகட்டமாக இத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்ட தால். மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 2005 மே மாதம் 27ம் திகதி இவர்கள் குற்றவாளிகள் அல்ல எனத் தீர்ப்பளித்து ஐவரையும் விடுதலை செய்தது. இதைவிட 1977ஆம் ஆண்டு சன்சொனி ஆணையம் 1996ஆம் ஆண்டு கிரிசாந்தி பாலியல்கொலை வழக்கு, 1996ஆம் ஆண்டு காணாமல் போன ஆயிரக் கணக்கானோர் செம்மணியில் புதைக்கப்பட்ட புதைகுழி விவகாரம் என்பனவற்றையும் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

எனவே இப்படுகொலைகளை நாம் நோக்குகின்றபோது கடந்த 'மே' 27ம் திகதி சிறிலங்கா நீதித்துறை மீண்டும் ஒருமுறை எல்லோர் முகத்திலும் விபூதி ஊதி வேப்பிலை அடித்துள்ளது. உலக நாடுகளினதும் பல மனித உரிமை அமைப்புக்களினுடனும் அழுத்தத் தினால் இவ்வழக்கை ஆராய்வதற்கு ஒரு ஆணைக்குழுவை நியமித்தது அதன் மூலம் 5பேரிற்கு மரணதண்டனை விதித்து நீதி தேவதையின் கீரிடத்தை தொட்டுவிட்ட நீதித்துறை மேன் முறையீடு என்ற போர்வையில் அதன் முலாங்களைச் சுரண்டி விட்டிருக்கின்றது.

ஏற்கனவே இவ்வழக்கு விசாரணையில் ஒரு பகுதியினர் விடு தலை செய்யப்பட்டு விட்டனர். மிகுதிப் பேர் தற்போது விடுதலை யாகினர். கால இழுத்தடிப்பின் மூலம் இப்படுகொலைகளை சாதா ரண நிகழ்வுகளாக்கி சிறிலங்கா மேன்நீதி மன்றம் ஒரு பாகுபாடான தீர்ப்பை அளித்துள்ளது. அப்படினால் இக் கொலையின் சூத்திர தாரிகள் யார்? கொலைகாரர்கள் யார்? வேற்றுக்கிரகத்தவர்களா? இதற்கு முடிவு யார் கூறுவது? நீதிமன்றத்துக்கு இனி ஒரு ஆணைக் குழு நியமிக்கப்படுமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யந்திரப்பட்டுப் போனதையிட்டு துயருற்றவர், இவற்றுக்கெல்லாம் அடியோடிய காரணமாக நிற்கும், சமதர்மத்துக்கெதிரான மனிதனுக்குள்ளே இருந்து கிளம்பும் 'வாதங்களை' கண்டு கொண்டு அவற்றின் களைதலிலேயே

"பூமிக்கனியின் சாறருந்திப்
பிழைக்க வழி ஏற்படும்" என்று

அவர் நினைக்கும் போது அவர் சர்வதேசியாக விரிகிறார். இதோ வர்ணங்கள் கரைந்த வெளியில் அவர் இப்படிச்சொல்கிறார்:

"வன்முறைப் பேய்தாங்கி
கீழே விழுந்து கிடக்கிற மனிதனின்
தீரா அழுகையையும்
தீரா சோகத்தையும்"

ஓவியன் தன் கலைவர்ணக் குழையலிட்டுக் காட்டுகிறான். ஏன் இவற்றைக் காட்டுகிறான்? நிச்சயமாக இந்தவர்ணப்பிரிவு களைக் கடப்பதற்கே. அதனால்தான்

"தீர்ந்த வெற்றுக்கலமாய்
நிற்கும் ஓவிய மனதுள்
தீரா வெளியின் பாய்ச்சல் நிகழும்"

என்று கவிஞர், வர்ணங்கள் தீர்ந்த, ஏற்றத் தாழ்வுகள் இல்லாத வெளியை அவாவி நிற்கிறார். அடுத்து வரும் "இருள் வெளி" என்னும் கவிதை இதை மேலும் தெளிவுபடுத்தும்

"ஏன் அம்மா பூமி மௌனமாய் இருக்கிறது.
சதா அவனின் கேள்வி
என்னைத் தொளையிடும்
வர்ணங்கள் கரைந்த வெளியின்
வசந்த காலத்தை
வரவேற்கத்தான் பூமி
நீண்ட நாளாய்
பெருமனதோடு காத்திருக்கிறது என்று
சொல்லி வைத்தேன்" என்று தன்பிள்ளை

களுக்கு சொல்லும் அவன் "ஏன் அப்பா எல்லோரும் சண்டை செய் கிறார்கள்?" என்ற தன் பிள்ளைகளின் கேள்விக்கு

"மனிதர்களுள் வர்ணாச்சிரமப் பிசாசுகளை
யாரோ ஏவி விடுகிறார்கள்
என்ற பேய்களின் கதையைச் சொல்ல
நினைத்தேன் மதம் பிடித்த யானையின்
பிளிறல் போன்ற படிமக் கதை
குழந்தைகளின் தூக்கத்தைக் கெடுத்து
விடுமோ என்ற பயத்தில் அதையா, சும்மா
என்றேன்." என்று சொல்லிவரும் கவிஞர்

தனக்குள் பின்வருமாறு சொல்லி முடிக்கிறார்.

"மனிதர்கள் எனப்படுவோர் இன்னும்
தங்களது சொர்க்கம் பற்றிய கனவில்
பூமியை நரகமாகவே ஆக்கி விட்டார்கள்
அவர்கள் குரூரமாய் எழுந்து
வர்ணங்களால் வாழ்க்கைக்கு சமாதி
கட்டுகிறார்கள்
பூமி குருதியில் தெப்பமாய் நனைய
வர்ணங்களால் கோடுகள் கிழிக்கிறார்கள்"

இவ்வாறு வர்ணங்களை வெவ்வேறு கோணங்களில் உருமாற்றிக் காட்டிப் போகும் கவிஞர் 'இசைச் சுழல்' என்னும் கவிதையில்

"குழந்தையின் மகிழ்ச்சியைக் கொட்டித்
துளிர்க்கிறது பூமி
மெல்லிய வர்ணப் பட்டாடை சூடி
மழலை பொழிகிறது" என்று சொல்லும்

போது கலையின் உன்னத நிலையை வர்ணங்களில் காட்டும் அவர் இறுதியில் அக்கவிதையை முடிக்கும் போது,

"காலமும் வெளியும்
ஒரு புல்லாங் குழலாய் இசைக்கிறது
பின்
எல்லா வர்ணங்களும் சிந்திக் கரையும்
மரங்களின் கீழ்
பயணம் ஒன்றிற்காக
காத்திருக்கின்ற முதியவரின் இடுப்பில்
போய்ச் செருகி
இளைப்பாறுகிறது
இன்னுமொரு கால இசைப்பிற்காக" என்று

எல்லா வர்ணங்களும் சிந்திக் கரையும் நிலையில் பயணம் ஒன்றிற்காக காத்திருக்கிறார். அந்தப் பயணம் எப்படிப்பட்டதாக அமையும் என்பதை நாம் யூகிக்கலாம். அந்தப் பயணம் அவர் அவாவி நிற்கும் வர்ணங்கள் கரைந்த அடுத்த இசைப்பை நோக்கியதாக அமையாதா? இதோ அவர் 'ரயில் பயணம்' கவிதை அதை நோக்கித் தான் ஓடுகிறது.

"கட கட கட கட கட கட
இருண்ட கரும் கோட்டையை
தகர்த்துக் கொண்டு
தாவியே ஓடுது" என்று தொடங்கும் இக்

கவிதை மனிதனால் உண்டாக்கப் பட்ட அத்தனை சுயநலக் கோட்டைகளையும் தகர்த்துக் கொண்டு ஓடத்தான் போகிறது.

* * *

தா.பாலகணேசனின் 'வர்ணங்கள் கரைந்த வெளி' தனித்துவமான கவிதைத் தொகுப்பென்பதில் ஐயமில்லை. இயல், இசை, நாடகம் என்னும் தமிழின் முப்பிரிவுகளையும் தன் கவிதைகள் மூலம் மீட்டியும் கோடி காட்டியும் செல்வதன் மூலம் இத் தொகுப்பிற்கு ஆழத்தையும் தனித்துவத்தையும் ஏற்படுத்து கிறார். பல கவிதைகள் நாடகத் தன்மை கொண்டு நிற்கின்றன. வண்ணத்துப் பூச்சிகளின் நடனப் பாடல், நாடகன், கும்மிப்பாட்டு, அகதிக் குழந்தைகளும் சூரியனும், ரயில் பயணம் போன்ற கவிதைகள் இதற்குதாரணம். பாலகணேசன் கவிஞன் மட்டுமல்ல நாடகாசிரியனும், நாவலாசிரியனும் கூட இவர் முதன் முதலில் நாவலாசிரியனாகவே அறியப்பட்டவர். இவரது இருபது வருடங்களுக்கு முன் வெளிவந்த 'விடியலுக்கு முந்திய மரணங்கள்' என்னும் நாவல், களத்தில் நின்ற ஒருவனின் போர் அனுபவங்களின் வார்ப்பாக வந்த கலைத்துவமான படைப்பு என்று பலராலும் பாராட்டப்பட்டதாகும். எழுதியவரின் பெயர் இன்றி வெளிவந்த அந் நாவல் இன்று எழுதியவர் யாரென்று அறியப்படும் போது அதன் கலைக் கனதிக்குரிய காரணம் உணரப் படுகிறது போர்க் காலச் சூழலில் எழுதப்பட்ட முதல் நாவல் இதுவே. அவ்வாறே இப்போது வெளிவரும் 'வர்ணங்கள் கரைந்த வெளி' போர்க் காலச் சூழலையும், புலம் பெயர்தலை யும், அங்குள்ள மனிதநேயம் வரண்ட யந்திர வாழ்க்கையையும் இவற்றுக்கெல்லாம் காரணமான மனிதருள் குடிகொண்டிருக்கும் பல்வகைப்பட்ட ஆதிக்க வெறியையும் இணைத்துக் காட்டும் முதல் கவிதை நூலாக இது நிற்கிறது. கவிதை நூலைத் தந்த கவிஞருக்கு எமது வாழ்த்துக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## எளியவன் இரைவுகள்

மனுசர்கள் வாழும் குகைகளில்
உள்முகத்தை
நம்பிக்கையாய் சாய்த்து
இளைப்பாற மடி தேடி
தோற்றுப் போனவன்.
காலாற நடந்த வெளிகளில்
புல்லுகள் நசிந்து போனதை
காணாது போனேன்.

மிருகத்தின் தோலில் பாதணியணிந்த
எனது ஒவ்வொரு அடியிலும்
இரத்தக் கசிவுகள்.

மனம் குறுகி
புல்லுகளின் கால்களில் வீழ்ந்தேன்.

ஓ- எனது நடப்பில்
நசிந்த புல்லுகளே
என்னை மன்னிப்பீர்களாக.....
... அதோ காத்துக்கிடக்கும்
எனது சவக்குழியில் - நீங்கள்
மறுபடியும் உயிர்க்க
உயில் எழுதிவைக்கிறேன்

சிவப்பு இரத்தம் சிந்தப்படும் மண்ணில்
பச்சை இரத்தத்தை பார்க்கத்தவறியவன்
சிறுமை கொண்டேன்.
இதோ-
பட்டுப் பூச்சிகளைக் கொன்று
நான் நெய்த ஆடைகளை கிழித்துக்கொண்டு
நிர்வாணியாகின்றேன்...

என் இதயத்தையும் - அதனுள்
இருப்பவளையும் - உங்கள்
கொத்தடிமைகள் ஆக்குகின்றேன்.

வேறொன்றும் தேவையில்லை புல்லுகளே
பனித்துளிகளையும் உடையாது குடையும்
உத்தியை சொல்லித்தாருங்கள் - ஏனெனில்
நான் இன்னமும்
மனுசர்களுக்குள் வாழ
நிர்பந்திக்கப்பட்டுள்ளேன்.

**மெலிஞ்சிமுத்தன்**
**கவிதைகள்**

## இலவசம் இந்த வாழ்க்கை

நெட்ட நெடுநாளாய்
என் முன்னோருக்கு முன்னோரையும்
ஏற்றிப் போன தொடரூந்தில்
பொன்னாங்காணியும்,
முருங்கைக்காயும் கொண்டு
பயணச் சிட்டையின்றிப் புறப்பட்ட
புதிய கள்வன் நான்.

பழைய கள்வர்கட்கு
பழகிப்போன பயணமிது
புதிய கள்வன் நான் ஒவ்வொரு தரிப்பிடத்திலும்
உயிர் பிதுங்க.
இறங்கும் இடம் வரை
இறந்திறந்து பயணிக்கின்றேன்.

என் முன்னோர்
எப்படி இந்தத் தூரத்தைக் கடந்தனர்!
எண்ணிப் பார்க்க முடியவில்லை.

எதிர்பாரா நேரமொன்றில்
ஏறிக் கொள்ளலாம்
எனைப் பிடிப்பவர்கள்.

சிட்டையின்றி வந்த தூரத்தின் கூலியிலும்
இரட்டிப்பாகலாம் தண்டனைக் கூலி.

கையிருப்புகள் முழுவதையும்
கொடுத்துவிட்டு
இன்னொரு நாளிலும்
ஏறிக் கொள்வேனோ
பழைய கள்வனுக்குரிய
பக்குவத்தோடு?
- கள்வர்களுக்குள்ளும்
கள்வன் போல
கருதத்தோன்றிய
ஒருவன் கேட்டான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுதந்திரகாலத்தின்
விடுமுறை நாளில்
அழகிய உலகை ஏன்
அச்சத்தோடு பார்க்கின்றாய் என.

ஏங்கிப் போனேன்!

எனது பாதையெங்கும்
எத்தனை அழகுகளை
ரசிக்கத் தவறினேன்!

எந்த மரத்திலிருந்து
எந்தக்குயில்
எனைப் பார்த்துக் கூவியதோ!

அருகில் அமைந்த
தண்ட வாளங்களின் நடுவில்
அரங்காமல் முகம் கறுத்த
கற்களையெல்லாம் அள்ளி
சமுத்திரங்களில் வீசியெறியத் தோன்றிற்று.
ஆயினும் அவைகள் கற்கள்
இன்னொரு இடத்திலும்
இப்படித்தான் கிடப்பன.

இனிவரும் தரிப்பிடத்துக்காய்
காத்திருக்கின்றேன்
அச்சத்தின் எச்சங்கள்
இன்னமும் ஒட்டிக் கொண்டு
அழகின் இன்னொரு பரிமாணத்தை
எனக்குச் சொல்லலாம்.



## எனது கரையை எண்ணி

'சிப்பத்தா' என்றழைக்கிறான்
சின்னவன்- அவன்
அண்ணன் மகன்

இப்படித்தான் நானும்
'அவ்வா' என்றழைத்தேனாம் - என்
அப்பாவைச் சிறுவயதில்.

பிழையான தமிழிலும் அழகிருக்கும்
பிஞ்சுகளின் வாயுதிர்த்தால்.

அந்தப் பருவத்தில்
அம்மாவின் சேலை
போர்த்துப் படுக்கையில்,
கூரையில் மழை
கொட்டும் ஓசையில்
எத்தனை பேரின்பம்!

மடிச்சேலைக்குள் பலகாரங்களை
மறைத்து வைத்துத் தீத்துவாளே 'ஆச்சி'
அந்த உணவில்தான்
எத்தனை ஊட்டம்!

கள்ளுக்குடிலில் அப்புவாங்கிய
நண்டுகளை - காய்ந்த
புல்லுகளுக்குள் போட்டுச்சுடுவோம்.
கணைச்சூட்டுக்கு நல்லமென்று
கள்ளுக்பருகையிலே - நண்டுக்
காலுடைத்துத் தின்போம்.

எந்தத் தீனிக்கு
அந்தச் சுவையிருக்கு?
வெல்வேற் சேலைகள்
விரித்து வளத்தி - என்தலையை
விரல்களால் உணாவுவாள் ஆச்சி.

ஆச்சி உறங்கியதும்
நான் துயின்ற மெத்தை
அப்புவின் மார்புதானே
அந்த உடலின் வியர்வை வாடையில்தான்
எத்தனை ஈர்ப்பு!

இவையெல்லாம் அறிவானோ
இந்தச் சிறுவன்?
இந்நாளை எனைப்போல
இனி வரும் நாளில் நினைப்பானோ?

என் தமிழில் சந்திப்பானோ?
என் தமிழை சிந்திப்பானோ?

ஓ நான் வேர்விட்ட என் கிராமமே
நீ போர்த்திருக்கும் பூவரசமரங்களில்
இலை பிடுங்கி குழல் சுருட்டி
பீப்பீ என்று நான் ஊதவேண்டும்
உன்னுள் புதைந்த - என்
உறவுகளின் கல்லறைகளில் இருந்து
கதறி நான் அழவேண்டும்

அந்த நிமிடங்களை
அந்த நிமிடங்களை
எந்த வரிகளால்
என்னால் பூரணப்படுத்தமுடியும்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீர்ப்பு



## ஃப்ரன்ஸ் காஃப்கா

(1883 - 1924)

இருபதாம் நூற்றாண்டு உரைநடையில் ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்திய படைப்பாளி காஃப்கா. பகட்டுகளற்ற. ஆனால் புதிர்கள் நிறைந்த மொழி இவருடையது.

1883ஆம் ஆண்டு ஜூலை 3ஆம் தேதி செக்கோஸ்லோவி வாகியா நாட்டின் தலைநகரான ப்ராகில் பிறந்து அங்கேயே வளர்ந்தவர். யூதர் தாய்மொழி ஜெர்மன். அவருடைய மொழி செக் நாட்டவரிடமிருந்து அவரைத் தனிமைப்படுத்தியது. அவரின் இனமும் ஜெர்மானியர்களிடமிருந்து அவரைத் தனிமைப்படுத்தின. 'தனிமை' அவருடைய படைப்புலக ஆதாரங்களில் ஒன்று.

ரகசியம், பயம், குழப்பம், அதிகாரம், குற்றம், தோல்வி, தனிமை, காதல் என அவர் தன் வாழ்வில் அனுபவித்த பிரத்யேக நிலைகளினூடாகவே தம் படைப்புலகை உருவாக்குகிறார். அதன்மூலம் தம் கால மனித வாழ்வில் அதிகமும் உணரப்படாதிருக்கிற பிரச்சனைகளின் முகங்களைப் படைப்பில் உறைய வைக்கிறார். இந்த முகங்களில் தெரியும் தன்னுடைய சாயல்களை, அவருடைய படைப்புலகோடு உறவு கொள்ளும் ஒவ்வொரு வாசகனும் ரகசியமாய் உணர்கிறான்.

1917ஆம் ஆண்டில் அவரைப் பீடித்த எலும்புருக்கி நோய் காரணமாக 1924ஜூன் 3இல் இறந்தார். அவருடைய வாழ்நாளில் சில சிறிய படைப்புகள் மட்டுமே வெளிவந்திருந்தன. முற்றுப் பெறாத மூன்று நாவல்களும் அவரின் மரணத்திற்குப் பின்னரே வெளிவந்தன.

'தீர்ப்பு' காஃப்காவின் முழுமையான முதல் படைப்பு. இக்கதையை 1912ஆம் வருடம் செப்டம்பர் 22ஆம் தேதி இரவு 10மணிக்குத் தொடங்கி மறுநாள் காலை 6மணிவரை ஒரே மூச்சில் எழுதி முடித்தார். இது அவருடைய படைப்புலகின் அடிப்படை அம்சங்களனைத்தும் ஒன்று திரண்டு அடர்த்தியாக உருக்கொண்ட கதை. மேலும் இக்கதையில் அவரின் படைப்புலகப் பிரச்சினைகளில் ஒன்றான 'தந்தை மகன் போராட்டம்' அதன் ஆழத்தைத் தொட்டிருக்கிறது. காஃப்காவுக்கும் அவரின் தந்தைக்கும் இடையேயான நிஜ உலக உறவின் தன்மைகள் இப்புனைவில் இலக்கிய முகம் கொண்டிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக காஃப்காவுக்கு மிகவும் பிடித்த கதை இது.

அது, வசந்த காலம் உச்சத்திலிருந்த ஒரு ஞாயிறு காலை. இளம் வியாபாரியான ஜார்ஜ்பெந்தெமன், ஆற்றின் அருகே பரந்து விரிந்திருந்த, பராமரிப்பின்றிப் பழுதடைந்திருந்த, நீண்ட வரிசையிலான சிறிய வீடுகளொன்றின் முதல் மாடியில் தன் அறையில் உட்கார்ந்திருந்தான். உயரத்தாலும் வண்ணத்தாலும் மட்டுமே வித்தியாசப்பட்டு, மற்றபடி ஒன்றுக்கொன்று துளி வேறுபாடுமின்றி அந்த வீடுகள் அமைந்திருந்தன. தற்சமயம் வெளிநாட்டில் வசித்துக் கொண்டிருக்கும் தன் பழைய நண்பனுக்கு அவன் அப்போதுதான் கடிதமொன்றை எழுதி முடித்துவிட்டு, கனவுப் பாங்கான பாணியில், மிக மெதுவாக, அதற்கான உறையில் அதைப் போட்டுவிட்டு, எழுது மேஜை மீது முழங்கைகளை ஊன்றியபடி, ஜன்னல்களின் வழியாக ஆற்றையும் பாலத்தையும் தொலைதூரக் கரையில் இளம்பசுமையோடு காணப்பட்ட குன்றுகளையும் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

சொந்த நாட்டில் தனக்கு இருக்கக்கூடிய எதிர்கால வாய்ப்புகள் குறித்த அதிருப்தி காரணமாக, சில வருடங்களுக்கு முன்பு, ரஷ்யாவுக்கு ஓடிப் போய்விட்ட தன் நண்பனைப்பற்றி அவன் நினைத்துக் கொண்டிருந்தான். அவன் இப்போது செயின்ட் பீட்டர்ஸ்பர்கில்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரிந்துவரும் தொழிலானது, ஆரம்பத்தில் செழித்திருந்தபோதிலும் பல காலமாக இறங்குமுகத்தில்தான் இருக்கிறதென்று, அவன் வருகையின் இடைவெளி அதிகரித்து அவன் வருவதே அபூர்வமாகி விட்ட தருணங்களில் குறைபட்டுக் கொண்டான். ஆக, ஒரு அந்நிய நாட்டில் அவன் தன்னைப் பொருத்திக் கொண்டது விரயமாகி விட்டது. குழந்தைப் பருவத்திலிருந்து ஜார்ஜ் நன்கு அறிந்திருந்த அவன் முகம், புதிதாய் வளர்த்திருந்த முழுமையான தாடியில் புதைந்து போகவில்லை என்றாலும் வித்தியாசமான தோற்றமளித்தது. உள்ளுறைந்திருக்கும் ஒரு நோயின் தடயமாக, அவனின் தோல் நிறம் மிகவும் மஞ்சளாக மாறிவிட்டிருந்தது. தனக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட பிரம்மச்சாரி வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு வாழ்வதற்கென்றே தன் சகநாட்டவர் வசிக்கும் காலனியுடன் சீரான தொடர்பு வைத்துக் கொள்ளாததோடு, ரஷ்யக் குடும்பங்களோடும் நெருங்கிய உறவேதும் கொள்ளாமல் தனித்திருப்பதாக அவன் கூறியிருந்தான்.

பக்கத்துணைகளின்றிப் பரிதவிக்கும் அத்தகையதோர் மனிதனுக்கு ஒருவன் என்னதான் எழுத முடியும்? அத்தகைய மனிதனிடம் அனுதாபம் காட்டலாமே தவிர அவனுக்கு உதவி செய்ய முடியாது. சொந்த நாட்டுக்குத் திருப்பி வந்து வேரூன்றிக் கொள்வதோடு, மீண்டும் பழைய நட்புகளைப் புதுப்பித்துக் கொண்டு - அவ்வாறு அவனைச் செய்ய விடாமல் தடுக்கக் கூடியதாக எதுவுமில்லை — நண்பர்களின் உதவியைச் சார்ந்திருக்கும்படி அவனுக்கு ஒருவன் ஆலோசனை கூற முடியுமா? ஆனால் அப்படிச் சொல்வதானது, அவன் இதுவரை மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் திசை தப்பிவிட்டதால், அவன் அதை ஒருவழியாகக் கைகழுவி விட்டு வீடு திரும்புவதோடு, வழி தவறிச் சென்று மனம் திருந்தித் திரும்பி வந்தவனாக அவனை எல்லோரும் வியந்து பார்ப்பதை ஏற்றுக்கொண்டு, சொந்த நாட்டிலேயே வெற்றிகரமானவர்களாகவும் குடும்ப வாழ்வைச் செம்மையாக நடத்துபவர்களாகவும் இருக்கும் தராதரம் அறிந்தே அவனுடைய நண்பர்களின் வழிகாட்டுதலின்படி, வளர்ந்துவிட்ட பெரியதோர் குழந்தையாகத் தன்னைப் பாவித்துக்கொண்டு நடந்துகொள்ள வேண்டுமெனச் சொல்வதாக ஆகிவிடும். இதை மிகக் கனிவாகச் சொன்னாலும் கடுமையாகவே தெரியும். இதெல்லாம் ஒரு புறமிருக்க, அந்த அளவுக்குச் சிரமமெடுத்து அவனை வற்புறுத்தினாலும் அந்த நோக்கம் நிறைவேறும் என்பது என்ன நிச்சயம்? அவனைத் தன் சொந்த நாட்டுக்கு வர வைப்பதே கூட சாத்தியமில்லாமல் போகலாம்? தன் சொந்த நாட்டின் வணிகப் போக்கோடு தற்சமயம் தான் தொடர்பிழந்துவிட்டதாக அவனே சொல்லியிருக்கிறான். அதன்பிறகு, அவன் வெளிநாட்டில் ஒரு அந்நியனாகவே தனித்து விடப்படுவதோடு மட்டுமல்லாமல், நண்பர்களின் ஆலோசனைகளினால் மனம் நொந்துபோய், நட்பு பாராட்டிய அவர்களிடமிருந்து முன்னை விடவும் ஒதுங்கும் படியாக வேறு ஆகிவிடும். ஆனால், அவர்களின் ஆலோசனையை அவன் ஏற்றுக்கொண்டு விட்ட பின்பு, ஒருவேளை அவனால் சொந்த நாட்டில் முரண்டு காரணமாகத் என்றில்லை, சந்தர்ப்பங்களின் ஆற்றல் காரணமாகத் தன்னைப் பொருத்திக் கொள்ள முடியாமல் அவர்களிடமிருந்து ஒதுங்கவும் முடியாமல் அவமானத்துக்கு ஆளாகி விடுவானென்றால், இனி ஒருபோதும் தனக்கென்று நாடோ நண்பர்களோ இல்லையென்று உணரும்படி ஆகிவிடுமென்றால், அவன் இப்போது இருக்கிற படியே வெளி நாட்டில் இருந்துவிடுவது அவனுக்கு உகந்ததாகாதா? இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டால் சொந்த நாட்டில் அவன் வெற்றிகரமானதோர் வாழ்க்கையை நடத்துவான் என ஒருவனால் எப்படி நிச்சயமாகக் கருத முடியும்?

இத்தகைய காரணங்களினாலேயே, அவனோடு தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பும் ஒருவனால், மிக லேசாகத் தெரிந்த ஒருவரிடம் சொல்ல முடிவது போலக்கூட எத்தகைய உண்மையான






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீர்ப்பு



செய்திகளையும் அவனுக்குத் தெரியப்படுத்தமுடியாது. அவன் கடைசியாக வந்து மூன்று வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அதற்கு அவன், ரஷ்யாவின் அரசியல் நிலமை மிகவும் ஸ்திரமற்றிருக்கிறது என்றும் லட்சக்கணக்கான ரஷ்யர்களை வெளிநாடுகளுக்கு அமைதியாகப் பயணம் செய்ய அனுமதிக்கும் அதே சமயம் ஒரு மிகச் சிறிய வியாபாரியை சில நாட்களுக்கு வெளியில் செல்லக்கூட அனுமதிக்கவில்லை என்றும் நொண்டிச் சமாதானம் சொன்னான். ஆனால் இந்த மூன்று வருடங்களில் ஜார்ஜின் வாழ்நிலையில் பல மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. இரண்டு வருடங்களுக்கு முன்பு அவனுடைய அம்மா இறந்துவிட்டாள்; அதிலிருந்து அவனும் அவன் தந்தையும் வீட்டைச் சேர்ந்து பகிர்ந்துகொண்டார்கள். இவ்விஷயம் அவனுடைய நண்பனுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவனும் தன் அனுதாபத்தை வறட்டுத்தனமான வார்த்தைகளால் அமைந்த ஒரு கடிதம் மூலம் தெரிவித்திருந்தான். அப்படியான ஒரு சம்பவம் தரக்கூடிய வேதனையைத் தூரதேசத்திலிருந்து உணர முடியாது என்ற முடிவுக்கே இதிலிருந்து வர முடிகிறது. அந்தச் சமயத்திலிருந்து, எது எப்படியிருந்தபோதிலும், வியாபாரத்திலும் சரி, மற்ற எல்லா விஷயங்களிலும் சரி, ஜார்ஜ் மிகுந்த முனைப்போடு தன்னை ஈடுபடுத்திக்கொண்டான்.

ஒருவேளை, அம்மா உயிரோடிருந்த வரை தொழில் ரீதியான ஒவ்வொரு விஷயத்திலும் தனதான வழிமுறைகளைத் தந்தை வலியுறுத்திக் கொண்டிருந்ததால், சுயமாய் முயற்சிகளெடுத்துக் தன்னை வளர்த்துக் கொள்ள அவனுக்கு முடியாமல் போயிருக்கலாம். அம்மா இறந்ததற்குப் பிறகு, தந்தை தொழிலில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தாலும், ஒருவேளை அது, பெரும்பாலும், தற்செயலாகக் கூடிவந்த நல்ல காலத்தின் பாற்பட்டதாக இருக்கலாம். அநேகமாக இதுதான் அதிகப் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. எதுவாக இருந்தாலும், இந்த இரண்டு வருடங்களில் தொழில் சற்றும் எதிர்பாராத வகையில் வளர்ச்சி அடைந்தது பணியாளர் எண்ணிக்கை இருமடங்காகியது விற்பனை ஐந்து மடங்காகப் பெருகியது மேலும் அபிவிருத்தி அடைவதற்கான சாத்தியங்கள் அண்மையில் இருக்கின்றன - சந்தேகமே இல்லை.

ஆனால், இந்த வளர்ச்சி பற்றிய எவ்வித முகாந்திரத்தையும் ஜார்ஜின் நண்பன் அறிந்திருக்கவில்லை. முந்தைய வருடங்களில், கடைசி முறையாக அது அவனின் அனுதாபக் கடிதத்திலாக இருக்கலாம் — ஜார்ஜை ரஷ்யாவுக்கு வந்து விடும்படி அவன் வற்புறுத்திக் கொண்டிருந்தான். குறிப்பாக, ஜார்ஜின் தொழிற் கிளை அங்கு வெற்றிகரமாக அமைவதற்கான வாய்ப்புகள் குறித்து விரிவாக முன்வைத்திருந்தான். ஜார்ஜ் தற்சமயம் எட்டியிருக்கும் எல்லையோடு ஒப்பிடும்போது, அவன் எடுத்துகாட்டியிருந்த நண்பனுக்குத் தெரியப்படுத்த அவன் தயங்கினான். நடந்து முடிந்தவற்றை இப்போது தெரியப்படுத்தினால் அது நிச்சயம் விசித்திரமாகவே படும்.

ஆக, அமைதியான ஞாயிற்றுக்கிழமையன்று ஒருவன் எதையாவது சும்மா யோசித்துக் கொண்டிருக்கிருக்கும்போது, மேலெழுந்த வாரியாக எழும் நினைவுகளான, முக்கியத்துவமற்ற வம்பு விவகாரங்களையே தன் நண்பனுக்குத் தெரிவிப்பதென்று அவன் வரையறுத்துக் கொண்டிருந்தான். தன் நண்பன், தனது சொந்த ஊர்பற்றி, இந்த நீண்ட இடைவெளியில், தன் விருப்பத்திற்கேற்ப எப்படியெல்லாம் கற்பனைக் கோட்டை எழுப்பியிருப்பானோ அதற்குத் குந்தகம் நேராமல் பார்த்துக் கொள்வதையே அவன் விரும்பினான். அதற்கேற்ப அவன், தன் நண்பனுக்கு, சற்றே விரிவாக எழுதிய மூன்று வெவ்வேறு கடிதங்களில் எவ்வித முக்கியத்துவமற்ற ஒருவனுக்கும், அது போன்றதொரு பெண்ணுக்கும் ஏற்பாடாகியிருந்த நிச்சயதார்த்தம் குறித்து மூன்று முறையும் எழுதினான். இதுவரையான அவனது தீர்மானங்களுக்கு முற்றிலும் மாறாக, அவனுடைய நண்பன் இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சி குறித்துக் கொஞ்சம் ஆர்வம் காட்ட ஆரம்பித்தான்.

எனினும், ஜார்ஜ் இப்படியான விஷயங்களை எழுத முன் வந்தானே தவிர, ஃப்ராவ்லீன் ஃப்ரிதா பிராண்டென் ஃபெல்டு என்ற வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணோடு தனக்கு ஒரு மாதத்துக்கு முன்பு நிச்சயதார்த்தம் நடந்து விட்டதைத் தெரிவிக்க முன்வரவில்லை. அவன், தன் மணப்பெண்ணிடம், இந்த நண்பனைப் பற்றியும், பரிமாற்றங்களின் மூலம் அவர்களுக்கிடையே உருவாகியிருந்த விசித்திரமான உறவு பற்றியும் அவ்வப்போது பகிர்ந்து கொண்டான். "ஆக, அவர் நம்முடைய திருமணத்துக்கு வரமாட்டார்" என்றாள் அவள்.. "எனினும், உங்கள் நண்பர்கள் அனைவரையும் பற்றித் தெரிந்துகொள்ள எனக்கு உரிமை இருக்கிறது". "என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம்." ஜார்ஜ் பதில் சொன்னான். "நான் அவனுக்குத் தொந்தரவு தர விரும்பவில்ல. ஒருவேளை அவன் வரக்கூடும், குறைந்தபட்சம் நான் அப்படி நினைக்கவாவது செய்கிறேன். ஆனால் தன்னைப் பிடித்து இழுத்து வந்துவிட்டதாகத்தான் அவன் நினைப்பான்.மேலும், அவன் அதற்காக வருத்தப்படுவான். ஒரு வேளை அவன் என்மீது பொறமை கொள்ளவும் கூடும் நிச்சயம் அவன் அதிருப்தி கொள்வான். தன் அதிருப்பதி குறித்து எதுவும் செய்ய இயலாத நிலையில் அவன் தனியானாகவே திரும்பிப் போக வேண்டியிருக்கும். தனியன் - அதற்கு என்ன அர்த்தமென்று உனக்கு தெரியுமா?" "அதுசரி, ஆனால் நம் திருமணம் பற்றி வேறு எந்த வகையிலாவது அவர் கேள்விப்படமாட்டாரா?" "என்னால் அதைத் தடுக்க முடியாது என்பதென்னவோ உண்மைதான்? ஆனால் அவன் வாழும் விதத்தைப் பார்க்கும்போது அநேகமாக அப்படியேதும் நடப்பதற்கு வாய்ப் பில்லை." "உங்கள் நண்பர்கள் அப்படியிருக்கும் பட்சத்தில், ஜார்ஜ், நீங்கள் ஒருபோதும் நிச்சயதார்த்தம் செய்து கொண்டிருக்கக்கூடாது." "அது சரி, ஆனால் அதற்கு நம் இருவரையும் தானே குறை சொல்ல வேண்டும். இப்போது என்னால் வேறொன்றும் செய்ய முடியாது." அதன் பிறகு, அவனின் முத்தங்களால் வேகமாக மூச்சுவாங்கிய அவள், "எல்லாமே ஒன்றுதான் நானும்கூட மனம் குலைந்துதான் இருக்கிறேன்". ஒருவேளை, தானே தன் நண்பனுக்குத் தகவல் தெரிவித்தாலும் அதனால் தனக்கொன்றும் தொந்தரவு வந்துவிடாது என்று அவன் நினைத்தான். "என் சுபாவம் அப்படி, நான் எப்படி இருக்கிறேனோ அப்படியேதான் அவன் என்னை ஏற்றுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளவேண்டும்." என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். "அவனுக்கு ஏற்றபடி என்னை நான் வேறுவிதமாக மாற்றி அமைத்துக் கொள்ள முடியாது."

ஆனால், உண்மை என்னவென்றால், அந்த ஞாயிற்றுக்கிழமை காலை, அவன் எழுதிய நீண்டதோர் கடிதத்தில் தன் நிச்சயதார்த்தம் பற்றித் தன் நண்பனுக்கு இத்தகைய வார்த்தைகளில் தெரியப்படுத்தி இருந்தான். "ஒரு நல்ல செய்தியை கடைசியாக எழுதலாமென்று இருந்தேன். ஃப்ராவ்லீன் ஃப்ரிதா பிரண்டென்ஃபெல்டு என்ற வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணோடு எனக்கு நிச்சயதார்த்தம் நடந்திருக்கிறது. நீ ஊரை விட்டுப் போய் வெகுகாலத்துக்கு பின் இங்கு வசிக்க வந்தவள் அவள். எனவே, அவளைப்பற்றி உனக்கு எதுவுமே தெரிந்திருக்காது. அவளைப்பற்றி மேலும் பல விஷயங்களைச் சொல்ல பின்னர் அவகாசமிருக்கும். நான் சந்தோஷமாக இருக்கிறேன் என்பதை மட்டும் இன்று சொல்கிறேன். உன்னையும் என்னையும் பொறுத்தவரை நம் உறவில் ஏற்பட்டிருக்கும் ஒரே மாறுதல், மிகச் சாதாரண நண்பனாக இன்று நான் மணக்கவிருக்கும் பெண், தன் உளம் கனிந்த வாழ்த்துகளை உனக்குத் தெரிவிக்கிறாள். மேலும், அவளே உனக்கு வெகு விரைவில் கடிதம் எழுத இருக்கிறாள். இதன் மூலம் நீ ஒரு உண்மையான தோழியைப் பெறுகிறாய். ஒரு பிரம்மச்சாரிக்கு உண்மையான தோழியைப் பெறுகிறாய். ஒரு பிரம்மச்சாரிக்கு இதைவிட வேறென்ன வேண்டும். எங்களைப் பார்ப்பதற்கு உன்னால் வரமுடியாது என்பதற்கான பல்வேறு காரணங்களையும் நான் அறிவேன். ஆனால் எல்லாத் தடைகளையும் தகர்த்தெறிந்து விட்டு நீ இங்கு வருவதற்கு இது ஒரு சரியான தருணமாக அமையாதா? எனினும், என்னவாகவும் இருக்கட்டும், உன்னுடைய சொந்த நலன்களைத் தவிர வேறெதையும் பொருட்படுத்தாது, உனக்கு எது நல்லதென்று படுகிறதோ அதையே செய்".

ஜார்ஜ் இக்கடித்ததை தன் கையில் வைத்துக்கொண்டு, எழுது மேஜையின் முன் முகம் ஜன்னலைப் பார்த்துத் திரும்பியிருக்க, வெகுநேரம் உட்கார்ந்திருந்தான், தெருவில் கடந்துபோன அறிமுகமான ஒருவர் அவனைப் பார்த்துக் கையசைத்ததை அவன் வெறுமனே புன்சிரிப்பின்றி ஏற்றுக்கொண்டான்.

கடைசியாக அவன், அந்தக் கடிதத்தைத் தன் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு, அறையை விட்டு வெளியேறி, சிறிய தாழ்வாரத்தைக் கடந்து, பல மாதங்கள் அவன் நுழைந்திராத, தன் தந்தையின் அறைக்குள் சென்றான். அவன் தினமும் வியாபார ஸ்தலத்தில் தன் தந்தையைப் பார்ப்பதாலும், அவர்கள் இருவரும் ஒரு உணவு விடுதியில் ஒன்றாகவே மதிய உணவைச் சாப்பிடுவதாலும் உண்மையில் அங்கு செல்ல அவனுக்கு எந்தவித அவசியமும் இருக்கவில்லை. மாலை நேரத்தை அவர்கள் தங்கள் விருப்பப்படி கழிப்பார்கள். பெரும்பாலும், ஜார்ஜ் தன் நண்பர்களோடு வெளியில் செல்வான். சமீப நாட்களாக அவன் தன் மணப்பெண்ணைச் சந்திக்கச் சென்றான். மற்றப்படி, பொதுவாக அவர்கள், வீட்டின் பொது அறையில் அவரவரின் செய்தித்தாளோடு சிறிது நேரம் அமர்ந்திருப்பார்கள்.

சூரிய வெளிச்சம் நிறைந்த அந்தக் நேரத்தில்கூட, தந்தையின் அறைஇருட்டாக இருந்தது ஜார்ஜுக்கு வியப்பளித்தது. குறுகலான வராந்தாவுக்கு மறுபுறமிருந்த உயரமான சுவரும் சேர்ந்து அந்த அறையில் இருளை நிரப்பியிருந்தது. ஜார்ஜின் இறந்துபோன அம்மாவின் பல்வேறு ஞாபகார்த்தச் சின்னங்களைத் தாங்கிய ஜன்னலருகே ஒரு மூலையில் உட்கார்ந்தபடி அவனுடைய தந்தை பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். பார்வைக் கோளாறைச் சமாளிக்கும் வகையில் அவர் அந்தப் பத்திரிகையைத் தன் கண்களினருகே ஒரு பக்கமாகச் சாய்த்துப் பிடித்துக் கொண்டிருந்தார். மேஜையின் மீது அவரின் காலை உணவு, அதன் பெரும்பகுதி சாப்பிடாமல் மிச்சம் வைக்கப்பட்டிருந்தது.

"ஆ, ஜார்ஜ்" என்றபடி அவனுடைய தந்தை அவனைச் சந்திப்பதற்காக சட்டென எழுந்தார். அவர் நடந்து வந்தபோது, அவருடைய கனத்த அங்கி பிரிந்து அசைந்தாடியபடி அவரைச் சூழ்ந்தது. "என் தந்தை இப்போதுகூட ஒரு பிரும்மாண்டமான மனிதர்தான்" என்று ஜார்ஜ் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

"இங்கு இருள் சகிக்க முடியாதபடி இருக்கிறது" அவனுடைய தந்தை பதில் சொன்னார்.

"மேலும் நீங்கள் ஜன்னலை வேறு சாத்தியிருக்கிறீர்கள்"

"அது அப்படி இருப்பதையே நான் விரும்புகிறேன்."

ஏதோ தான் முன்னர் சொன்னதன் தொடர்ச்சியாகவே சொல்வதுபோல, "நல்லது. வெளியே மிகவும் கதகதப்பாக இருக்கிறது" என்று கூறியபடி ஜார்ஜ் உட்கார்ந்தான்.

அவனுடைய தந்தை காலை உணவுத் தட்டுக்களை அப்புறப்படுத்தி அவற்றை உரிய இடத்தில் அடுக்கி வைத்தார்.

அந்த வயதான மனிதரின் சலனங்களை வெறுமையாகத் தொடர்ந்து கவனித்தபடி ஜார்ஜ் சொல்லத் தொடங்கினான். "என் நிச்சயதார்த்தம் பற்றிய தகவலை செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிற்கு நான் இப்போது தெரியப்படுத்த இருப்பதை உங்களிடம் சொல்லி விடவே உண்மையில் நான் விரும்பினேன்." தன் பாக்கெட்டிலிருந்து கடிதத்தைச் சற்றே வெளியிலெடுத்துவிட்டு மீண்டும் அதை உள்ளே விட்டுக்கொண்டான்.

"செயின்ட் பீட்டர்ஸ் பர்கிற்கா?" தந்தை கேட்டார்.

"அங்குள்ள என் நண்பனுக்கு" தந்தையின் கண்களைச் சந்திக்க முயற்சித்தவாறு ஜார்ஜ் சொன்னான். வியாபார நேரங்களில் அவர் முற்றிலும் வேறு மாதிரி இருப்பார் என்று அவன் நினைத்தான். தன் கைகளைக் குறுக்காக மடித்துக்கொண்டு எவ்வளவு நிதானமாக அவர் இங்கு உட்கார்ந்திருக்கிறார்.

"ஓ, அப்படியா. உன் நண்பனுக்கா" என்று அவனுடைய தந்தை விநோதமான அழுத்தம் கொடுத்துக் கேட்டார்.

"ஆம், தந்தையே. என் நிச்சயதார்த்தம் குறித்து முதலில் நான் அவனுக்குச் சொல்ல விரும்பவில்லை. அவன் நிலைமையைக் கணக்கில் கொண்டதுதான் இதற்கான ஒரே காரணம். அவன் அசாதாரணமான மனிதன் என்பது உங்களுக்கே தெரியும். என் நிச்சயதார்த்தம் பற்றி வேறு யாரேனும் அவனுக்குச் சொல்லி விடுவார்கள் என்று எண்ணினேன். அது அப்படி நடக்க முடியாத அளவுக்கு அவன் அசாத்தியமான நபர் என்ற போதிலும் — அப்படி நடப்பதை என்னால் தடுக்க முடியாது - நானாக அவனிடம் சொல்லப் போவதில்லை என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்".


"நீ இப்போது உன் மனதை மாற்றிக்கொண்டு விட்டாய், இல்லையா?" என்றபடி அவனுடைய தந்தை, தனது கனத்த செய்திகளை ஜன்னல் விளிம்பில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீர்ப்பு



வைத்துவிட்டு அதன்மீது தன் கண்ணாடியை வைத்து அதை ஒரு கையால் பொத்திக்கொண்டார்.

"ஆம், அதுபற்றி நான் மறுபடியும் யோசித்துப் பார்த்தேன். அவன் என்னுடைய நல்ல நண்பனாக இருக்கும்பட்சத்தில், என் நிச்சயதார்த்தம் எனக்கு சந்தோஷம் தந்திருப்பதுபோல அவனையும் சந்தோஷப்படுத்தும் என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். எனவே, இனியும் அவனுக்குத் தெரியப்படுத்துவதை நான் தள்ளிப் போடக்கூடாது. ஆனால் அஞ்சல் செய்வதற்கு முன்னால் உங்களுக்கு அது தெரிந்திருக்க வேண்டுமென விரும்பினேன்".

"ஜார்ஜ்" தன் பொக்கை வாயை விரித்தபடி, அவனுடைய தந்தை சொன்னார். "நான் சொல்வதைக் கேள்! இந்த விஷயம் குறித்து என்னுடன் கலந்து பேச நீ வந்திருக்கிறாய். நீ வைத்திருக்கும் மதிப்பை அது உணர்த்துகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நீ என்னிடம் முழு உண்மையையும் சொல்லாத பட்சத்தில் இது ஒரு விஷயமே இல்லை. சும்மா இருப்பதை விடவும் இது மோசமானது. இங்குக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லாத விஷயங்களை எல்லாம் நான் கிண்டிக் கிளற விரும்பவில்லை. நம் அன்பான அம்மா இறந்து போனதற்குப் பிறகு, முறையற்ற பல காரியங்கள் நடந்திருக்கின்றன. அவற்றைப் பற்றி நாம் பேசவேண்டிய நேரம் வரும். நாம் எதிர்பார்ப்பதை விடவும் சீக்கிரமாகவே அது வரக்கூடும். எனக்குத் தெரியவராமல் வியாபாரத்தில் பல காரியங்கள் நடக்கின்றன என் முதுக்குக்குப் பின்னால் நடக்கின்றன என்று நான் சொல்லப் போவதில்லை. இனியும் என்னால் காரியங்களோடு போட்டி போட்டுக்கொண்டிருக்க முடியாது அதற்குக் காரணம், முதலாவதாக இயற்கையின் கதி; இரண்டாவதாக, நம் அன்பான அம்மாவின் மரணம் உன்னை அதிகமாகப் பாதித்திருக்கிறது என்பது. ஆனாலும் நாம் இதைப்பற்றி, இந்தக்கடிதத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதால் நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். ஜார்ஜ், என்னை ஏமாற்றாதே. உனக்கு அப்படியொரு நண்பன் உண்மையிலேயே செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் இருக்கிறானா?"

தர்மசங்கடத்துக்குள்ளான நிலையில் ஜார்ஜ் எழுந்தான். "என் நண்பர்களை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம் ஓராயிரம் நண்பர்கள் சேர்ந்தாலும் என்னைப் பொறுத்தவரை, அவர்கள் என் தந்தைக்கு ஈடாக மாட்டார்கள். நான் என்ன நினைக்கிறேன். என்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் உங்களைக் கவனித்துக் கொள்வதில் போதுமான அக்கறை காட்டுவதில்லை. ஆனால் முதுமையில் கண்டிப்பாகக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் இல்லாமல் என்னால் வியாபாரத்தைக் கவனிக்க முடியாது அது உங்களுக்கே நன்றாகத் தெரியும். ஆனால் அந்த வியாபாரம் உங்கள் ஆரோக்கியத்துக்கு ஊறு விளைவிக்கும் என்றால் நாளைக்கே அதை ஒரேயடியாக இழுத்து மூடிவிட நான் தயாராக இருக்கிறேன். ஆனால் அதனால் ஒரு பிரயோஜனமும் ஏற்படப் போவதில்லை. உங்களின் வாழ்க்கை முறையில் நாம் ஒரு மாறுதலை ஏற்படுத்தியாக வேண்டும். ஒரு தீவிரமான மாறுதல். நீங்கள் இங்கு இருட்டில் உட்கார்ந்திருக்கிறீர்கள். வரவேற்பறையில் இருந்தால் போதுமான வெளிச்சம் கிடைக்கும். உங்களின் வலிமையை முறையாகப் பேணுவதற்குப் பதில் காலை உணவாக ஏதோ கொஞ்சம் கொறிக்கிறீர்கள். ஜன்னலை மூடிவிட்டு உட்கார்ந்திருக்கிறீர்கள். ஆனால் காற்று உங்களுக்கு மிகவும் புத்துணர்ச்சி அளிக்கும், இல்லை அப்பா! நான் மருத்துவரை வரவழைக்கிறேன். நாம் அவர் சொல்கிறபடி கேட்போம். நாம் உங்கள் அறையை மாற்றுவோம். நீங்கள் முன்னறைக்குச் சென்று விடுங்கள்; நான் இங்கு வந்துவிடுகிறேன். உங்களுக்கு மாற்றம் தெரியாது; உங்கள் பொருள்களனைத்தும் உங்களோடு வந்துவிடும். ஆனால் அதையெல்லாம் செய்யப் பின்னர் அவகாசமிருக்கிறது. இப்போது கொஞ்சம் ஓய்வு அவசியம். வாருங்கள், உங்கள் பொருள்களை எடுத்துக்கொள்ள நான் உதவி செய்கிறேன். என்னால் அதைச் செய்ய முடிவதை நீங்கள் பார்க்கலாம். அல்லது, உடனடியாக நீங்கள் முன்னறைக்குப் போவதாக இருந்தால், இப்போதைக்கு அங்கு நீங்கள் என் படுக்கையில் படுத்துக் கொள்ளலாம். அதுதான் மிகச் சரியானதாக இருக்கும்"

குலைந்து கிடந்த நரைமுடிகளோடு தலை தாழ்த்தியிருந்த தந்தைக்கு நெருக்கமாக ஜார்ஜ் நின்று கொண்டிருந்தான்.

சற்றும் அசையாமல், மெதுவான குரலில், "ஜார்ஜ்" என்றார் தந்தை.

உடனடியாக ஜார்ஜ் தந்தைக்கருகே மண்டியிட்டான். சோர்வுற்றிருந்த அந்த வயதான மனிதரின் முகத்தை அவன் பார்த்தபோது, மிகப் பெரிய கருவிழிகள் கண்களின் ஓரங்களிலிருந்து தன்னை நிலைகுத்திப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தான்.

"உனக்கு செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் ஒரு நண்பன் இருக்கிறான். நீ எப்போதுமே காலை வாரி விடுபவன்; என் காலை வாரவும் நீ தயங்கவில்லை. உனக்கு அங்கு எப்படி ஒரு நண்பன் இருக்க முடியும்! நான் அதை நம்பவில்லை."

"பழையவற்றைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள், அப்பா" என்றான் ஜார்ஜ். நாற்காலியிலிருந்து அவரை எழும்பி நிற்கச் செய்து, அவருடைய அங்கியைக் கழற்றியபோது அவர் பலஹீனமாய் நின்று கொண்டிருந்தார். "என்னுடைய நண்பன் கடைசியாக நம்மைப் பார்க்க வந்து அநேகமாக மூன்று வருடங்களாகப் போகின்றன. உங்களுக்கு அவனை அவ்வளவாகப் பிடிக்காது என்பது எனக்கு நினைவிருக்கிறது. இரண்டு முறையாவது, உண்மையில் அவன் அப்போது என்னோடு என் அறையில்தான் இருந்தான் என்றபோதிலும், அவனைப் பார்க்க விடாது உங்களைத் தடுத்திருக்கிறேன். அவனை உங்களுக்குப் பிடிக்காது.

என்பதை நான் மிகச் சரியாகவே புரிந்து கொண்டிருந்தேன் என் நண்பனுக்கென்று சில சுபாவங்கள் இருக்கின்றன. ஆனால் அதன் பிறகு, பிந்தைய நாட்களில் நீங்கள் அவனோடு மிக நன்றாகவே பழகினீர்கள். நீங்கள் அவன் சொல்வதைக் கேட்டபடி தலையசைத்தது மட்டுமல்லாமல், அவனிடம் கேள்விகளும் கேட்டபோது நான் பெருமிதமடைந்தேன். நீங்கள் மறுபடியும் யோசித்துப் பார்த்தால் நிச்சயம் அது உங்கள் நினைவுக்கு வரும். ரஷ்யப் புரட்சி பற்றி மிகவும் ஆச்சரியம் தரக்கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதைகளை அவன் நமக்குச் சொல்வது வழக்கம். உதாரணமாக ஒருமுறை அவன் வியாபார நிமித்தமாக கீவ்வுக்குப் போனபோது அங்கு கலவரம் தொடங்கியிருந்தது. ஒரு மதகுரு பால்கனியில் நின்று கொண்டு, தன் உள்ளங்கையில் ஒரு பெரிய சிலுவையைக் கீறி, ரத்தம் தோய்ந்த கையை உயர்த்தி, ஜனத்திரளிடம் வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருந்ததை அவன் பார்த்தது. அவற்குப் பின்னர், நீங்களே கூட அந்தக் கதையை ஓரிரு முறை கூறியிருக்கிறீர்கள்.

இதற்கிடையே, ஜார்ஜ் தன் தந்தையைத் திரும்பவும் மெதுவாகத் தாழ்த்தி உட்கார வைத்துவிட்டான். மேலும், லினன் உள்ளாடைக்கு மேலாக அவர் அணிந்திருந்த கம்பளி உள்ளாடைகளையும், காலுறைகளையும் கவனமாகக் கழற்றினான். அந்த உள்ளாடைகளையும், சுத்தமாக இல்லாததற்குத் தனது உதாசீனமே காரணமென்று தன்னைத்தானே கடிந்து கொண்டான். தன் தந்தை மென்று தன்னைத்தானே கடிந்து கொண்டான். தன் தந்தை உள்ளாடைகளை மாற்றிக் கொள்ளும் வகையில் கவனம் எடுத்துக் கொள்வதைத் தன் கடமையாகக் கொண்டிருந்திருக்க வேண்டும். எதிர்காலத்தில் தன் தந்தைக்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பது பற்றி அவன் தன் மணப்பெண்ணிடம் இதுவரை வெளிப்படையாகப் பேசிக் கொள்ளவில்லை. அந்த வயதான மனிதர் அந்தப் பழைய வீட்டிலேயே தொடர்ந்து தனியாக வசிப்பார் என்று அவர்கள் தங்களுக்குள்ளாக நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் இப்போது, எதிர்காலத்தில் தான் குடிபுக இருக்கும் தன்னுடைய இடத்துக்கு அவரை அழைத்துக் கொண்டு போய்விட வேண்டுமென அவன் தீர்மானம் உடனடி முடிவொன்றை எடுத்தான். அங்கே தன் தந்தையை வெகுவாகச் சீராட்டிப் பராமரிக்க வேண்டுமென்று அவன் எடுத்த முடிவானது, மிக உன்னிப்பாக அவதானித்தபோது, காலம் கடந்து எடுக்கப்பட்டதாகவே கிட்டத்தட்ட தோன்றியது.

அவன் தன் தந்தையைப் படுக்கைக்குத் தூக்கிச் சென்றான். அந்த வயதான மனிதரைத் தன் நெஞ்சோடு தாங்கி, படுக்கையை நோக்கி சில எட்டுகள் தூக்கி சென்றபோது, அவர் தன் கடிகாரச் செயினுடன் விளையாடிக் கொண்டிருந்ததைக் கவனித்த அவன் அச்சமடைந்தான். அவரைப் படுக்கையில் கிடத்த அவனால் ஒரு கணம் முடியாமல் போகுமளவுக்கு அவர் கடிகாரச் செயினை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தார்.

ஆனால், அவர் படுக்கையில் படுத்துவிட்ட உடனே, எல்லாமே நல்லபடியாக நடந்துவிட்டதுபோல் தோன்றியது. அவர் தன்னைப் போர்த்திக் கொண்டதோடல்லாமல், போர்வையை வழக்கத்துக்கு மாறாக, தோளுக்கு மேலாக இழுத்து விட்டுக்கொண்டார். ஜார்ஜை நிமிர்ந்து கடுமையின்றிப் பார்த்தார்.

"நீங்கள் என் நண்பனை இப்போது நினைவுபடுத்திக் கொண்டிருப்பீர்கள் இல்லையா?" என்று அவரை உற்சாகமாப் படுத்தும் வகையில் தலையசைத்தவாறே ஜார்ஜ் கேட்டான்.

கால்கள் சரியாகப் போர்த்தப்பட்டிருக்கின்றனவா என்பதைத் தன்னால் பார்க்க முடியாமலிருக்கிறது என்பது போல, "இப்போது நான் நன்றாகப் போர்த்தப்பட்டிருக்கிறேனா?" என்று அவனுடைய தந்தை கேட்டார்.

"ஆக, படுக்கையின் கதகதப்பை உணரத் தொடங்கிவிட்டீர்கள்" என்றான் ஜார்ஜ். மேலும், கம்பளியை அவரைச் சுற்றி இன்னும் நெருக்கமாகப் போர்த்திவிட்டான்.

"நான் நன்றாகப் போர்த்தப்பட்டிருக்கிறேனா?" என்று அவனுடைய தந்தை ஏதோ அதற்கான பதிலில்தான் எல்லாமே அடங்கியிருக்கிறது என்பத போல மீண்டும்மொருமுறை கேட்டார்.

"கவலைப்படாதீர்கள். நீங்கள் நன்றாகப் போர்த்தப்பட்டிருக்கிறீர்கள்."

"இல்லை!" என்று கத்தியபடி அவனுடைய தந்தை, ஜார்ஜை பதில் பேசவிடாமல், ஒரு நொடியில், எல்லாவற்றையும் பறக்கடிக்கும் வகையில், கம்பளிகளைப் பலமாக உதறி எறிந்து விட்டு, குதித்தெழுந்து படுக்கையில் நிமிர்ந்து நின்றார். அவரை ஸ்திரப்படுத்துவதற்காக ஒரே ஒரு கை மட்டும் லேசாக உத்தரத்தைத் தொட்டது.

"எனக்குத் தெரியும், என் இளம் குருத்தே! நீ என்னை மூடி விட விரும்புகிறாய். ஆனால் நான் மூடப்படுவதற்கு இன்னும் வெகுகாலம் இருக்கிறது. ஒருவேளை, இதுதான் என் கடைசித் துளி பலமென்றாலும் கூட உன்னைச் சமாளிக்க இதுவே அதிகம். உன் நண்பனை எனக்குத் தெரியும் என்பது உண்மைதான். அவன் எனக்கு மகனாகப் பிறந்திருக்க வேண்டும் என்று நான் மனதார நினைக்கிறேன். அதனால்தான் நீ இவ்வளவு வருடங்களாக அவனோடு ஒரு பொய்யான விளையாட்டு விளையாடி வந்திருக்கிறாய். வேறென்னவாக இருக்கமுடியும்? அவனுக்காக நான் வருத்தப்படவில்லை என்று நீ நினைக்கிறாயா? அதன் காரணமாகத்தான் உன்னையே நீ உன் அலுவலகத்தில் பூட்டிக் கொள்ள வேண்டியதாயிற்று - தலைமையாளர் மிகவும் முக்கியமான அலுவலில் ஈடுபட்டிருக்கிறார். அவரை யாரும் தொந்தரவு செய்யக் கூடாது - அப்போதுதானே உன்னால் பொய்யான சிறு கடிதங்களை ரஷ்யாவுக்கு எழுத முடியும். ஆனால், நல்ல வேளையாக, மகனின் உள்நோக்கங்களை அறிந்து கொள்ள ஒரு அப்பாவுக்கு எவரும் சொல்லிக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. இப்போது அவனைக் கீழே தள்ளிய பிறகு, எந்த அளவுக்குத் தள்ளினால் அவன்மீது அமர்ந்து கொண்டு அவனை நகரவிடாமல் செய்ய முடியுமோ அந்த அளவுக்குத் தள்ளிவிட்ட பிறகு, என் அருமை மகன் திருமணம் செய்து கொள்ளத் தன் மனதைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறான்."

தந்தை தன் மந்திர சக்தியால் உருவாக்கிய பிசாசை ஜார்ஜ் வெறித்துப் பார்த்தான். செயின்ட் பீட்டர்ஸ்பார்கிலிருக்கும் அவனுடைய நண்பன் — திடீரென அவனை அவனுடைய தந்தைக்கு நன்கு தெரிந்திருந்தது - முன் எனப்போதும் தோன்றியிராத வகையில் இப்போது கற்பனையில் தெரிந்தான். ரஷ்யாவின் விரிந்து பரந்த பரப்பில் தோற்றுப் போனவனாகத் தெரிந்தான். சூறையாடப்பட்டுக் காலியாகக் கிடந்த கிடங்கின் வாசலில் அவனைக் கண்டான். சரக்கு அலுமாரிகளின் சேதங்களுக்கிடையே, சிதறிக் கிடந்த மிச்சமீதி சரக்குகளுக்கிடையே வாயுக்குழாய்கள் நொறுங்கி வீழ்ந்துகொண்டிருக்க அவன் அப்படியே நின்று கொண்டிருந்தான். இவ்வளவு தொலை தூரத்து அவன் ஏன் போயிருக்க வேண்டும்.!

"முதலில் நான் சொல்வதைக் கேள்!" அவனுடைய தந்தை கத்தினார். எல்லாவற்றையும் எடுத்து வைப்பதற்காகப் படுக்கையை நோக்கி ஓடிய ஜார்ஜ், கிட்டத்தட்ட தடுமாறிய நிலையில், பாதிவழியில் நிற்க வேண்டியதாயிற்று.


"அவள் தன் பாவாடையைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீர்ப்ப



தூக்கியதற்காக" அவன் தந்தை மீண்டும் தொடங்கினார். "அவள், அந்த அசிங்கமான பிறவி, தன் பாவாடையை இப்படித் தூக்கியதற்காக." அவளைப் போன்று பாவனை செய்தபடி, யுத்தத்தின்போது அவருக்குத் தொடையில் ஏற்பட்டிருந்த காயத்தை ஒருவரால் பார்க்க முடியுமளவுக்கு, தன் சட்டையை மிக உயரமாகத் தூக்கினார். "அவள் தன் பாவாடையை இப்படித் தூக்கியதும் நீ அவளிடம் மயங்கியதோடு மட்டுமல்லாமல் அவளோடு எவ்வித தொல்லையுமின்றி சுதந்திரமாக சல்லாபம் செய்வதற்காக உன் அம்மாவின் ஞாபகார்த்தத்துக்கு ஊறு விளைவித்ததோடு, உன் நண்பனுக்கும் துரோகம் இழைத்தாய்; உன் அப்பாவையும், அவரால் எழுந்து நடமாட முடியாதபடி படுக்கையில் கிடத்தினயாய், ஆனால் அவரால் நடமாட முடியும்; முடியாதா என்ன?"

எவ்வித உறுதிணையுமின்றி அவர் எழுந்து நின்று தன் கால்களை உதறிக் கொண்டார். அவரின் உள்ளொளி அவரைப் பிரகாசிக்கச் செய்தது.

ஜார்ஜ் ஒரு மூலையில், தந்தையிடமிருந்து எந்த அளவுக்கு விலகி நிற்க முடியமோ அந்த அளவுக்கு தள்ளி, ஒடுங்கி நின்றான். மறைமுகத் தாக்குதலின்போது - பின்னாலிருந்தோ, மேலிருந்தோ நிகழும் திடீர்ப் பாய்ச்சலின்போது - தான் திகைத்துப் போய்விடக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு சிறு அசைவையும் மிக உன்னிப்பாகக் கவனிக்கப் பழகிக்கொள்ள வேண்டுமென வெகு காலத்துக்கு முன்பு அவன் தீர்மானம் எடுத்துக் கொண்டிருந்தான். இந்தக் கணத்தில் அவன் ஒரு தீர்மானத்தை மீண்டும் நினைவுக்கு கொண்டு வந்து திரும்பவும் மறந்து போனான் - ஊசி முனையில் நூல் கோக்கும் ஒருவனைப் போல.

"ஆனால் அப்படியெல்லாம் உன் நண்பனுக்குத் துரோகம் இழைக்கப்பட்டு விடவில்லை" என்று கத்தியபடியே அவனுடைய தந்தை வலியுறுத்தும் வகையில் தன் ஆள்காட்டி விரலால் குத்திக் குத்திக் காட்டினார். "இங்கு இந்த இடத்தில் அவனுக்குப் பதிலாக நானிருக்கிறேன்."

"இதன்ன கோமாளித்தனம்" நறுக்கென்று பதில் சொல்வதை ஜார்ஜால் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்தக் கணமே நடந்துவிட்ட தவறை உணர்ந்து நாக்கைக் கடித்துக் கொண்டான். அவன் கண்களில் பயம் தெரிந்த வேதனையில் முழங்கால்கள் தள்ளாடின.

"ஆம், நான் கோமாளித்தனம்தான் புரிகிறேன். கோமாளித்தனம்! அது ஒரு சரியான வெளிப்பாடு! மனைவியை இழந்துவிட்ட ஒரு பாவப்பட்ட கிழவனுக்கு வேறென்ன சௌகர்யம் எஞ்சியிருக்க முடியும்? சொல் - நீ பதில் சொல்லும்போது, உயிரோடிருக்கும் என் மகனாகவே இருந்து சொல் - விசுவாசமற்ற ஊழியர்களால் பீடிக்கப்பட்டு, எலும்பும் சதையுமாக வற்றிப்போய் பின்புற அறையில் கிடக்கும் எனக்கு வேறென்னதான் மிச்சமிருக்கிறது? ஆனால் என் மகனோ இந்த உலகினூடேபகட்டாய் நடைபோட்டு, நான் அவனுக்காகத் தயாரித்துக் கொடுத்திருந்த வணிக ஒப்பந்தங்களை முடித்துவிட்டு, வெற்றிக் களிப்பில் எக்காளமிட்டபடி, ஒரு மரியாதைக்குரிய வர்த்தகப் பிரமுகரின் இறுகிய முகத்தோடு தன் தந்தையிடமிருந்து கம்பீரமாக விலகிச் செல்கிறான்! நான் உன்னை நேசிக்கவில்லை என்றா நீ நினைக்கிறாய். நானா! நீ யாரிடமிருந்து குதித்து வந்தாய்?"

இப்போது அவர் முன்பக்கமாகச்சாய்ந்து விடுவார் என்று ஜார்ஜ் நினைத்தான். அப்படியே குப்புற விழுந்து அவர் தன்னைத்தானே சிதைத்துக் கொண்டால் என்ன இந்த வார்த்தைகள்அவன் மனத்திற்குள் சீறும் சப்பதமாய் நுழைந்தன.

அவன் தந்தை முன்பக்கமாகச் சாய்ந்தபோதிலும் குப்புற விழவில்லை. அவர் எதிர்பார்த்தபடி ஜார்ஜ் கொஞ்சம்கூட அருகில் வராததால் தானாகவே தன்னை நிமிர்த்திக் கொண்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நீ இருக்குமிடத்திலேயே இரு, உன் உதவி எனக்குத் தேவவையில்லை! என்னருகே வருவதற்குரிய பலம் உனக்கிருப்பதாகவும் உன் சொந்த விருப்பத்தின் பேரிலேயே பின்னால் நின்று கெண்டிருப்பதாகவும் நீ நினைக்கிறாய். ரொம்பவும் நினைத்துக் கொள்ளாதே! நம் இருவரில் இப்பவும் நான்தான் அதிக பலசாலி. நான் மட்டும் தனியாக இருந்திருந்தால் ஒதுங்கி வழி விட்டிருப்பேன் ஆனால் உன் தாயார் அவளுடைய சக்தி முழுவதையும் எனக்குத் தந்திருப்பதால் நான் உன் நண்பனுடன் நல்ல தொடர்பு வைத்துக் கொண்டிருப்பதோடு உன் வாடிக்கையாளர்களையும் இங்கே என் பாக்கெட்டில் வைத்திருக்கிறேன்."

"அவர் தன் சட்டையில்கூட பாக்கெட்டுகள் வைத்துக் கொண்டிருக்கிறார்" என்று ஜார்ஜ் தனக்குள் சொல்லிக் கொண்டான். மேலும் இந்தக் குறிப்பின் மூலம் உலகின் முன் அவரை நம்பினான். ஆனால் எல்லாவற்றையும் அவன் உடனுக்குடன் மறந்துகொண்டிருந்ததால் ஒரு கணம்தான் அப்படி யோசித்தான்.

"நீ மட்டும் உன் மணப்பெண்ணை அழைத்துக்கொண்டு என் வழியில் குறுக்கிட முயற்சி செய், பார்க்கலாம்! உன்னிடமிருந்தே அவளை ஒதுக்கித் தள்ளிவிடுவேன். எப்படி என்பது உனக்கு தெரியாது?"

நம்பிக்கையின்றி ஜார்ஜ் முகம் சுளித்தான். தன் வார்த்தைகளின் உண்மையை உறுதிப்படுத்தும் வகையில் ஜார்ஜ் இருந்த திசையை நோக்கி அவனுடைய தந்தை தலையை மட்டும் அசைத்தார்.

"உன் நிச்சயதார்த்தம் பற்றி உன் நண்பனுக்கு தெரிவிக்கலாமா என்று என்னிடம் கேட்பதற்கு வந்தாக நீ இன்று என்னிடம் எப்படி ஒரு விளையாட்டுக் காட்டினாய். அவனுக்கு முன்பே தெரியும்; முட்டாளே,அவனுக்கு எல்லாமே தெரியும்! நான் அவனுக்கு எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன் - என்னிடமிருந்து என் எழுதுபொருள்களைதான் எடுத்துவிட நீ மறந்துவிட்டாய். ஆதனால்தான் அவன் வருடக்கணக்காக இங்கு வரவில்லை உனக்குத் தெரிந்திருப்பதை விட அவனுக்கு எல்லாமே நூறுமடங்கு நன்றாகத் தெரியும். தன் வலது கையில் என் கடிதங்களைப் படிப்பதற்காகப் பிடித்துக் கொண்டிருக்கும் அதே சமயம், தன் இடது கையால் அவன் உன் கடிதங்களைப் பிரிக்காமலேயே கசக்கி எறிவான்!"

உற்சாக மிகுதியில் தன் தலைக்கு மேலாகக் கையை அசைத்தாட்டினார்.

"அவனுக்கு எல்லாமே ஆயிரம் மடங்கு நன்றாகத் தெரியும்!" அவர் கத்தினார்.

"பத்தாயிரம் மடங்கு" என்று தந்தையைக் கேலிக்குள்ளாக்கும் நினைப்பில் ஜார்ஜ் சொன்னான். ஆனால் அந்த வார்த்தைகள் அவன் நாவிலேயே மிகவும் மனப் பூர்வமானவையாக உருமாறி விட்டன.

"இது போன்றதொரு கேள்வியோடு நீ வர வேண்டும் என்பதற்காத்தான் நான் பல வருடங்களாக் காத்துக் கொண்டிருந்தேன்! நான் வேறெதிலாவது என்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பேன் என்று நீ நினைக்கிறயா? நான் என் பத்திரிகைகளைப் படிக்கிறேன் என்றா நீ நினைக்கிறாய்? பார்!" அவர் எப்படியோ தன்னோடு படுக்கைக்கு எடுத்துக்கொண்டு வந்திருந்த ஒரு பத்திரிகைத் தாளை ஜார்ஜிடம் எறிந்தார். அதன் பெயரரைக்கூட ஜார்ஜ் கேள்விப்பட்டிராத அளவுக்கு அது ஒரு பழைய பத்திரிகை.

"நீ வளர்ந்து ஆளாவதற்குத்தான் எவ்வளவு காலம் எடுத்துக் கொண்டாய்! உன் அம்மா, சந்தோஷமான நாளைப் பார்க்காமலேயே இறக்க வேண்டியதாயிற்று. ரஷ்யாவில் உன் நண்பன் தூள் தூளாக நொறுங்கிக் கொண்டிருக்கிறான்; மூன்று வருடங்களுக்கு முன்பே தூக்கியெறியப்படும் அளவு மஞ்சளாகி விட்டிருந்தான். என்னைப் பொறுத்தவரை, நான் என்ன நிலையில் இருக்கிறேன் என்பதை நீயே பார்த்துக் கொண்டிருக்கிறாய் இதையெல்லாம் பார்க்க உனக்கு உன் தலையில் கண்கள் இருக்கின்றன!"

"ஆக படுத்தபடியே எனக்காக் காத்துக் கொண்டு இருந்திருக்கிறீர்கள!" ஜார்ஜ் கத்தினான்.

அவன் தந்தை இரக்கத்தோடு, முன்தீர்மானம் ஏதுமின்றிச் சொன்னார் "நீ இதை விரைவில் சொல்ல விரும்புகிறாய் என்றுதான் நான் நினைத்திருந்தேன். ஆனால் இப்போது அது ஒரு விசயமில்லை" பின்னர் உரத்த குரலில்: "ஆக உன்னைத் தவிரவும் உலகில் வேறென்ன எல்லாம் இருக்கின்றன என்பதை இப்போது நீ அறிந்து கொண்டிருப்பாய் இவ்வளவு காலமும் நீ உன்னைப் பற்றி மட்டுமே தெரிந்து கொண்டிருந்தாய் ஒன்றுமறியாக் குழந்தை! உண்மைதான், நீ அப்படிதான் ஆனால் அதை விடவும் பேருண்மை நீ ஒரு மனிதப் பிசாசாக இருந்திருக்கிறாய் என்பது எனவே நீ குறித்துக்கொள் நீரில் மூழ்கி நீ உயிர்விட வேண்டுமென நான் தீர்ப்பு வழங்குகிறேன்."

அறையை விட்டு உடனடியாக வெளியேறி விட அவன் மனம் பரபரத்தது. அவனுக்குப் பின்னால் அவனுடைய தந்தை பொத்தென்று படுக்கையில் விழுந்த சப்தம், அவன் வெளியேறி போது காதுகளில் விழுந்திருந்தது. படிக்கட்டுக்களில் அவன் ஏதோ அந்தப் படிக்கட்டுகளில் அவன், ஏதோ அந்தப் படிகள் சரிவான தளம் கொண்டிருப்பதைப் போல இறங்கியபோது, காலை நேர சுத்தப்படுத்தலுக்காக மாடி அறையை நோக்கி மேலேறிக் கொண்டிருந்த அவனுடைய வேலைக்காரியைக் கடந்தான். 'ஏசுவே' என்று கத்தியபடி அவள் முகப்புத் துணியுவால் தன் முகத்தை மூடிக்கொண்டான். ஆனால் அதற்குள் அவன் சென்றுவிட்டிருந்தான். முன்வாசல் வழியாக, சாலையைக் கடந்து, தண்ணீரை நோக்கி உந்தப்பட்டு அவன் விரைந்தான் ஏற்கனவே அவன் பாலத்தின் கிராதிகளை பசியால் வாடும் மனிதன் உணவை இறுகப் பற்றிக் கொண்டிருப்பதுபோல, பற்றிருந்தான் ஒரு உடற்பயிற்சி வித்தைக்காரனைப்போல — அவனே அப்படியான ஒரு ஆளாக தன் இளமையில் ஒரு சமயம், பெற்றோர்கள் பெருமிதப்படும்படி இருந்திருக்கிறான் — அவன் அதன்மீது ஊசலாடினான். பிடிமானம் தளர்ந்து, அவன் இன்னமும் பற்றிக் கொண்டிருந்த சமயத்தில், பஸ் ஒன்று வருவதை அவன் விழுவதால் ஏற்படும் சத்தத்தை அது சுலபமாக அமுக்கி விடுமென்பதை, கிராதிகளுக்கிடையே ரகசியமாக அறிந்ததும், தாழ்ந்த குரலில் "அன்புப் பெற்றோரே நான் எப்போதுமே உங்களை நேசித்திருக்கிறேன் ஒரே மாதிரியாக" என்று கூறியபடி குதித்தான்.

இந்தச் சமயத்தில் பாலத்தின்மீது முடிவுறாத போக்குவரத்து தொடர்வரிசையாக தன் போக்கில் நிகழ்ந்துகொண்டிருந்தது.

ஆங்கிலமொழிபெயர்ப்பு:
வில்லா- எட்வின்மூர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருபத்தியோராம் நூற்றாண்டு
தகவல் தொழில்நுட்ப ஆண்டாகி
உலகை வலம்வரும் வேளையில்
தமிழ்மொழிப் புலமை தந்த
பதிவுகளை மீள் பதிவுசெய்து
எமது வரலாற்றுச் செல்நெறியைச்
சீர்செய்ய வேண்டியுள்ளது.
அதற்கான பெண்மையின்
பங்களிப்பு புதியதொரு
உதவும்கரம் என்பதில்
ஐயமில்லை. போர் வெற்றி
படைத்த பெண் எழுத்திலும்
வெற்றிதரக் காத்திருக்கிறாள்.



# எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே

மனோன்மணி சண்முகதாஸ்

பண்டைத்தமிழ் இலக்கிய பதிவுகள் காலத்தைக் கடந்து நிற்பவை. செந்நாப்புலவர் பாடிய பாடல்களின் தொகுப்பு இன்று எம் கையில் கிடைத்துள்ளது. அவற்றுள் புபுறநானூறு' என்னும் 400 பாடல்களின் தொகுப்பு பண்டைத் தமிழரின் புறவாழ்வியல் பற்றிய செய்திகளை உள்ளடக்கியது. வாய் மொழியாக வழங்கிவந்த பாடல்கள் 'புறநானூறு' என்ற தொகுப்பாக அமைக்கப்பட்ட போது கடவுள் வாழ்த்துப் பாடலும் 400 எனும் எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. நூற் தொகுப்பு யாரால், யார் கேட்டதற்கு இணங்கத் தொகுக்கப்பட்டது என்ற விளக்கமும் இல்லை. எனவே வரலாறு பதிவு செய்யப்பட்டபோது உண்மையான செய்திகள் மறைக்கப்பட்ட நிலையையும் நாம் உணர முடிகிறது.

எனினும் புறநானூற்றுப் பாடல்கள் கூறும் செய்திகள் பண்டைய தமிழரின் புறவாழ்வியலைக் காட்சிப்படுத்திக் காட்டும் சிறந்த கவிதைகள். இன்றைய கவிஞர்களின் முன்னோடிகளான சங்கப்புலவரின் புலமைத்திறனுக்குச் சான்றாக நின்று நிலைத்திருக்கும் செய்யுள்கள். அவற்றைப் படிக்கும்போது எமது இலக்கிய வழியின் தடத்தை அறியலாம். இப்போதைய கவிஞர்களின் கவிதைக்குப் பாடுபொருளாக அமைய வேண்டியது என்ன என வழிகாட்டும் திசைகாட்டியாகவும் புறநானூற்றுப் பாடல்கள் தோன்றுவதை, பாடல்களை ஆழமாகக் கருத்தூன்றிக் கற்போர் உணர்ந்துகொள்வர். செந்தமிழ் நடையில் சிறந்த கருத்துக்கள் பாடல்களிலே விரவிக்கிடக்கின்றன. தமிழ்மொழியின் கவிதைப் பண்பு நலனையும் ஊடகத் தொடர்பான ஆற்றல் நிலையையும் வெளிக்கொணர ஒரு மீள் கற்கைநெறியும் இன்று இன்றியமையாதது.

அத்தகைய கற்கைநெறியிலே செல்லும் முயற்சியில் இக்கட்டுரை சில பாடல்களை வகைமாதிரியாக எடுத்துக்காட்ட முனைகிறது. குறிப்பாகப் பெண்பாற் புலவர்களின் புலமைத்திறனையும் வாழ்க்கை நோக்கையும் வெளிப்படுத்தும் தமிழர் வாழ்வியல் மரபில் பெண்மையின் பங்கை எப்படி இணைக்கலாம் என்று எண்ணியிருப் போருக்கு ஒரு கைவிளக்காகவும் இது பயன்படும்.

புறநானூற்றுத் தொகுப்பிலே பாடல்கள் பாடிய புலவர்கள் பலராவர். பல்வேறு தொழில் செய்வோரும் பல்வேறிடங்களில் வாழ்ந்தவரும் எனப் புலவர்கள் நாடெங்கும் பரந்து வாழ்ந்ததை இது காட்டுகிறது. இவர்களில் ஔவையார் என்னும் பெண்பாற் புலவர் பாடிய பாடல் பெண்மைபற்றிய குணநலன் ஒன்றைத் தனித்துவமாகக் காட்டுகிறது. பெண் ஒருத்திக்கு இவ்வளவு நெஞ்சுரம் இருந்ததா என வியக்கவைக்கும் இடம் "பெண்ணென்று பூமி தனில் பிறந்துவிட்டால் பெரும் பீழை இருக்குதடி" என்று இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் பாரதி பாடினான். பாரதிக்குப் புறநானூற்றுப் பாடல்களைப் படிக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனவே ஔவையின் புலமை வீரம் தெரியவில்லை.

ஔவையின் பாடல்கள் அவருடைய தமிழ்மொழிப் புலமையையும் யாருக்கும் அஞ்சாத வீர உணர்வையும் வெளிப்படுத்தும். மன்னன் அவையிலே சென்று நெல்ல தமிழ்ப் பாடல்களைப் பாடிப் பாராட்டும் பரிசும் பெறும் புலவர் வாழ்க்கையிலே ஆண், பெண் என்ற வேறுபாடு அந்நாளில் இருக்கவில்லை. மன்னனுடன் நட்புடையராக இருந்த புலவர்களில் ஔவையாரும் ஒருவர். 'ஔவை' என்ற பெயரில் பலர் இருந்தாகவும் கருதப்படுகிறது. ஆனால் 'அதியமான் நெடுமானஞ்சி' எனும் மன்னனிடம் பாடிப்பரிசில் பெறச் சென்ற ஔவையார் பற்றிய செய்தி அவருடைய பாடல் மூலம் பெறப்பட்டது. புலமையின் செருக்கும் பெண்மையெனப் பணிந்து போகாத பண்புநலனையும் அப்பாடல் பதிவு செய்துள்ளது. மன்னனைப் பற்றித் துணிவோடு எடுத்துரைக்கும் ஆற்றலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனவுரமும் கல்விப் புலமையால் அக்காலத்துப் பெண்மை பெற்றிருந்ததையே அப்பாடல் சான்று காட்டி நிற்கிறது. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு என்ற கருத்தை முதலில் வலியுறுத்திக் காட்டியவர் ஔவையார் எனலாம். மொழி ஆற்றலால் வாழ்க்கைக்குத் தேவையானதைப் பெறமுடியும். வயிற்றுப்பசிக்கு வேண்டிய சோறு திக்கெங்கும் உண்டு. உன் மன்னனை மட்டும் நான் நம்பியிருக்கவில்லை என்று நிறு திட்டமாகக் கூறும் அவருடைய நெஞ்சுரம் புலமை ஆற்றலால் பெற்ற பெருவீரம் என்றால் மிகையாகாது. நாட்டை ஆளும் மன்னனையே துச்சமாகக் கருதித் தூக்கியெறிந்து பேசும் பெண்மையின் கற்புநெறிமைக்கும் வேண்டும்.. ஔவையார் பாடிய பாடல் அவரது சான்றாண்மையையும் காட்டி நிற்கிறது.

"வாயிலோயே வாயிலோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி
வித்தி தாம் முன்னியது முடிக்கும் முரணுடை உள்ளத்து.

வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயிலோயே
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்அறி யலன்கொல் என்னறி யலன் - கொல்

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்ததென
வறுந்தலை உலகமும் அன்றே அதனால் காவினெம் கலனே
சுருக்கினெம் கலப்பை மரகொல் தச்சன் கைவல்
சிறாஅர் மழுவுடைக் காட்டகத்து அன்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறேபீ

(புறநானூறு:206)

மன்னன் அவையிலே சென்று தமிழால் பாடி அதற்கான பரிசினையும் பெறலாம் என்ற நோக்கோடு அதியமான் நெடுமான் அஞ்சியின் அரண்மனை சென்றார் ஔவையார். அரண்மனையின் அடையாத வாயிலிலே சென்று தான் வந்திருக்கும் செய்தியை மன்னனுக்கு வாயில் காப்போன் மூலம் அறிவித்துவிட்டு நீண்ட நேரமாகக் காத்துநின்றார். வாயில் காவலன் செய்தியை மன்னனுக்கு அனுப்பிவிட்டுத் தன்கடமையில் நிற்கிறான். நேரம் கடந்துகொண்டிருந்தது. புலவர் ஔவையாருக்கு உள்ளே செல்வதற்கான மன்னன் அழைப்பு வரவில்லை. ஔவையார் பெறுமையோடு காத்திருக்கிறார். ஆவர் உள்ளத்தில் ஒரு எண்ணம் தோன்றுகிறது. பெண் என்று கருதி மன்னன் காலம் தாழ்த்துகிறானோ? மரபான நடைமுறையை அவர் நினைவில் காண்கிறார். ஆனால் அடுத்த கணம் அந்த நினைப்பை உதறி எறிந்து விட்டுப் புலமையின் ஆற்றலைக் கவசமாக்கிப் பாடுகிறார்.

வாயிற்காவலனை விளித்து அவர் பாடிய முறமை அதனைத் தெளிவாக உணர்த்துகிறது. அவருடைய புலமை நெறிநின்று வீரமாக அவனை விளித்துக் கூறும் செய்திதான் முக்கியமானது. உன்னுடைய மன்னன் தன்னிலை அறியாதவன் போலும்! என்னுடைய தரத்தையும் அறியாதவனா? ஔவையின் வினா கூரிய வாள்வீச்சாகச் சொல்வீச்சாக வந்து விழுகிறது.

'இதுவரை பரிசிலர்க்கு அடையாத வாயிலைக் காத்து நிற்பவனே' என வாயிற்காப்போனை அவன் செய்யும் உன்னதமான பணியை நினைவூட்டுகிறார். இந்த அரண்மனை வாயிலின் சிறப்புத் தனித்தவமானது. தமிழின் சிறப்பையும் வளத்தையும் வரம்பிலா ஆற்றலையும் எங்கும் பரப்பும் புலமையாளரை வரவேற்கும் அடையாத வாயில் என்ற பெருமையை உன் மன்னன் மறந்துவிட்டான். தமிழ்ப் புலமையாளர் வாழ்வை வளப்படுத்துவதற்காகப் பரிசில் வழங்கும் மன்னன் தன்னிலை உணரவேண்டும். எமது மொழியென்னும் ஊடகத்தினூடாக அவன் நிலை எங்கும் பரப்பப்படுகிறது என்பதை அவன் உணரவில்லை. அவன் வாழ்வும், வரலாறும் எமது பாடல்களில் பேசப்பட்டு எல்லோரும் அறியும்வண்ணம் நாம் செய்யும் செம்மையான பணியை அவன் மதிக்காவிட்டால் நாம் கவலை கொள்ளமாட்டோம். அறிவும் புகழும் உடையோர் இல்லாத வறிய இடத்தில் நாம் வாழவிரும்பவில்லை. எனவே இசைக் கருவியான படைக்கலங்களைப் பையிலே கட்டி எடுத்துக்கொண்டு செல்கிறோம். ஔவையாரின் கூற்று மன்னனின் குணநலக் குறைவைப் பாடலிலே மறைமுகமாகப் பதிவு செய்துவிட்டது.

புலமையின் ஆற்றலை விளக்க ஔவையார் எடுத்துகாட்டிய உவமை இங்கு மனங்கொள்ளத்தக்கது. மரத்தைத் துணித்து தொழில் செய்யும் தச்சன் கைவல்லமையுடையவனாக இருந்தால் காட்டிற்குச் சென்றால் அந்தக் காட்டை அவன் தொழிலின் திறமையை வெளிப்படுத்துவான். அதேபோன்று மொழிப்புலமையோர் எங்கே சென்றாலும் அப்புலமையால் நலம் தரும் பணியைச்செய்வார். கல்வியாளருக்கு எத்திசையிலே சென்றாலும் சோறுகிடைக்கும் என்று ஔவை கூறுவது வெறும் வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்காக மட்டும் நாம் மன்னரைப் பாடவில்லை. மன்னர் குறையை நாடறியச் செய்யவும் பாடுகிறோம் என்பதைத்தான் காட்டுகிறது.

பெண்மைக்கக் கல்வி கவசமாக இணைந்து இருந்தால் அதன் வீரம் எப்படியிருக்கும் என்பதைப் புறநானூறு காட்டுகிறது. தன்னுடைய புலமையால் யார்க்கும் அஞ்சாமல் உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்கும் நேர்மை நாம் அறிய வேண்டியது. அதே வேளையில் பண்டைத்தமிழர் மரபில் பெண்ணின் மென்மை மட்டும் பேசப்படவில்லை. அதன் திண்மையும் பேசப்பட்டுள்ளது. அந்த மரபு மீண்டும் இன்று துளிர்ப்பதை எமது பெண் போராளிகள் கவிதையில் காணும் போது பெண்மையின் பேராற்றல் என்பது ஒரு வற்றாத வளநதியாக உலகை வலம்வருவது உணர்த்தப்படுகிறது.

எமது மண்ணில் களத்துப் போராடிய வீராங்கனைகளின் உள்ளத்து உரம் எனும் போராயுதம் ஔவையின் பாடல்வழி வந்த ஊற்று என்பதில் ஐயமில்லை. புதிய புறநானூறு தொகுக்கும் வரலாற்றுப் பாதையில் தமிழ்மொழி தரித்துநிற்கும் இந்த வேளையில் புலமையாற்றல் மிகுந்த பெண்போராளிக் கவிஞர்களின் 'புதிய புறநானூறு' தொகுக்கப்படும் பணி விரைவில் நடைபெறவேண்டும். பூவொன்று புயலாகியதை ஔவையின் பாடல் காட்சிப்படுத்தியுள்ளது. அவருடைய கல்வில் செருக்கையே பாரதி 'திமிர்ந்த ஞானச்செருக்கு' என்றான். இருபத்தியோராம் நூற்றாண்டு தகவல் தொழில்நுட்ப ஆண்டாகி உலகை வலம்வரும் வேளையில் தமிழ்மொழிப் புலமை தந்த பதிவுகளை மீள் பதிவுசெய்து எமது வரலாற்றுச் செல்நெறியைச் சீர்செய்ய வேண்டியுள்ளது. அதற்கான பெண்மையின் பங்களிப்பு புதியதொரு உதவும்கரம் என்பதில் ஐயமில்லை. போர் வெற்றி படைத்த பெண் எழுத்திலும் வெற்றிதரக் காத்திருக்கிறாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நினைவுக்குறிப்பு

**பண்டா- செல்வா ஒப்பந்தம்:**

26.07.1957 அன்று பண்டா- செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது.

**துரோகி அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொலை:**

தமிழினத் துரோகி அல்பிரட் துரையப்பா 27.07.1975 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

**பயங்கரவாதத் தடைச்சட்டம்:**

1979.07.20 அன்று ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் தமிழருக்கெதிராக, மிகக் கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது.



**மூத்த தளபதி லெப்.சீலன் வீரச்சாவு:**

ஆரம்பகாலந் தொட்டு இயக்க வளர்ச்சிக்காக தலைவருக்கு உறுதுணையாக இருந்த மூத்த தளபதி சீலன், புலிகளின் தாக்குதற் படையணியின் முதலாவது தளபதியாவார். மீசாலையில் சிங்களப் படையினரின் முற்றுகையில் காயப்பட்டு தப்ப முடியாத நிலையில் தன்னைச் சுட்டு விட்டு ஆயுதத்தோடு தப்பும்படி சக தோழனுக்கு கட்டளையிட்டு, புலிகளின் வீரமரபு ஒன்றிற்கு வித்திட்டு 15.07.1983 அன்று வீரச்சாவடைந்தார்.

**திருநெல்வேலிக் கண்ணிவெடித் தாக்குதல்:**

1983.07.23 அன்று யாழ். திருநெல்வேலியில் வைத்து சிங்களப் படையினரின் இராணுவ வண்டி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டனர். இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க தாக்குதலில் விடுதலைப் புலிகளின் தரப்பில் மூத்த தளபதி செல்லக்கிளி அவர்கள் வீரச்சாவடைந்தார்.

**கறுப்பு யூலை:**

ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்களது ஆட்சிக் காலத்தில், தமிழ் மக்களது வீடுகள், கடைகள், உடமைகள் என்பன பட்டியலிடப்பட்டு சிங்களக் காடையர்களால் எரியூட்டி அழிக்கப்பட்டன. 1983 யூலை 24ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட் இவ்வன்முறைகளால் 2000 வரையான தமிழர்கள் கொல்லப்பட்டனர். 5000 வரையான தமிழர்களது கடைகளும் 1800 வரையான வீடுகளும் அழிக்கப்பட்டன. சிறைகளில் இருந்த 53 தமிழ்க் கைதிகள் வெட்டிக் கொல்லப்பட்டனர். 600 வரையான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக் குட்படுத்தப்பட்டனர். இவை தொடர்பான சரியான புள்ளிவிபரங்களை சிங்கள அரசு மூடிமறைத்து விட்டது.



**முதல் கரும்புலித்தாக்குதல்:**

விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டத்தின் புதிய பரிமாணமாக முதன் முதலாக நெல்லியடியில் அமைந்திருந்த சிறீலங்கா படைமுகாம் மீது கரும்புலிதாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. 05.07.1987இல் கரும்புலி கப்டன் மில்லர் இவ்வீர சாதனையைப் படைத்து காவியமானார்.

**இலங்கை - இந்திய ஒப்பந்தம்:**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வேரோடு பிடுங்கி எறியும் நோக்கோடு 29.07.1987 அன்று ராஜீவ் காந்தியும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டனர். இவ்உடன்படிக்கையின் விளைவாக 8000 தமிழர்கள் வரை கொல்லப்பட்டனர்.

**முதன்முதலாக தமிழீழக் கடற்பரப்பில் கடற்கரும்புலித்தாக்குதல்:**

முதன்முதலாக தமிழீழக் கடற்பரப்பில் 10.07.1990 அன்று விடுதலைப் புலிகளால் ஓர் கடற்கரும்புலித்தாக்குதல் நடாத்தப்பட்டது. சிறீலங்காக் கடற்படையின் 'எடித்தாரா' கட்டளைக் கப்பலைத் தகர்க்கவென மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் கடற்கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகிய போராளிகள் காவியமாகினர்.

**ஆகாய கடல் வெளிச்சமர் ஆரம்பம்:**

சிறீலங்காவில் இரு தேசங்களுக்கிடையேயான யுத்தம் என உலகநாடுகளால் வர்ணிக்கப்பட்ட ஆகாய கடல் வெளிச்சமர் (ஆ.க.வெ) 1990.07.10இல் ஆரம்பமானது.

**கிண்ணியடிப் படுகொலை:**

தமது வீடுகளில் தங்கியிருந்த இளைஞர்களை சிறீலங்காவின் விசேட அதிரடிப்படையினர் கடத்திச் சென்று படுகொலை செய்தனர். ஆர். பிரேமதாசா அவர்களது ஆட்சிக்காலத்தில் 1991.07.12அன்று மேற்கொள்ளப்பட்ட இக்கொடூரச் செயலில் 12தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

**வை-8 ரக விமானம் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது:**

வெற்றிலைக்கேணியில் இருந்து ஆனையிறவு வரை ஓர் இராணுவ வேலியை அமைக்கும் நோக்கோடு 'பலவேகய-2' என்னும் படை நடவடிக்கையில் சிறீலங்காப் படையினர் ஈடுபட்ட போது 05.07.1992 அன்று சிறீலங்கா விமானப்படையின் வை-8 ரக விமானம் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

**மண்கிண்டி மலை சிங்கள இராணுவ முகாம் அழிப்பு:**

25.07.1993 அன்று இதய பூமி இராணுவ நடவடிக்கை என்று தலைவரால் பெயர் சூட்டப்பட்டு. மண்கிண்டிமலை இராணுவ முகாம்மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. இது மிகப் பெரிய வெற்றியை புலிகள் இயக்கத்திற்கு ஈட்டிக் கொடுத்தது. இம்முகாமின் வீழ்ச்சி மணலாறு மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றத்திற்கு ஒரு பலத்த அடியாக விழுந்தது.

**இராசவீதிக் குண்டுவீச்சு:**

டி.பி.விஜயதுங்கா அவர்களது ஆட்சிக்காலத்தில் 1993.07.27 அன்று வீதிவழியாகப் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த மாணவர்கள் மீது சிறீலங்காவின் விமானப்படையினர் மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் 4பள்ளிச் சிறுவர்கள் உட்பட 6பேர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர்.

**'எடித்தாரா' என்னும் கட்டளைக் கப்பல் சிதறடிக்கப்பட்டது:**

17-07-1995 அன்று விடுதலைப் புலிகளின் நீரடி நீச்சல் பிரிவுக் கரும்புலிகளால் காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் வைத்துச் சிறீலங்காக் கடற்படையின் 'எடித்தாரா' என்னும் கட்டளைக் கப்பல் சிதறடிக்கப்பட்டது.

**'ஓயாதஅலைகள்-1':**

விடுதலைப் புலிகளின் 'ஓயாதஅலைகள்-1' தாக்குதல் மூலம் முல்லை சிங்களப் படை முகாம் 18.07.1996 அன்று தாக்கி அழிக்கப்பட்டு முல்லைப் பிரதேசம் இராணுவ ஆக்கிரமிப்பற்ற பிரதேசமாக மாற்றப்பட்டது.



**கட்டுநாயக்கா தாக்குதல்:**

கட்டுநாயக்கா விமானத் தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் என்பவற்றின் மீது 24.07.2001 அன்று மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதல் சிறீலங்கா அரசை இராணுவ மற்றும் பொருளாதர ரீதியில் ஆட்டம் காணச் செய்தது. பலமான பாதுகாப்பு வேலிகளையும், அரண்களையும் ஊடறுத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் சிறீலங்கா விமானப் படையின் 22 விமானங்களும், அரசின் ஏயர்லைன்ஸ் நிறுவனத்தின் 6 விமானங்களுமாக மொத்தம் 28 விமானங்கள் அழிவையும், சேதத்தையும் சந்தித்தது. இத்துணிகரத்தாக்குதல் காரணமாக சிறீலங்கா அரசுக்கு 4000 கோடி ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டது.

www.tamilarangam.net

# மீள்பார்வை

09 மே 2005

மட்டக்களப்பு மாவட்டம் சந்திவெளிப் பகுதியில் ஸ்ரீலங்கா படையினர் புதிதாக அமைத்திருந்த தடைமுகாமை அகற்றுமாறு கோரி 09.05.2005 அன்று காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லபட்டதுடன் மேலும் எண்மர் படுகாயமடைந்து வைத்தியசா லைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

10 மே 2005

மட்டக்களப்பில் அப்பாவி மக்கள் மீது சிறீலங்கா படை மேற்கொண்ட வெறியாட்டத்தை கண்டித்து 10.05.2005 அன்று தமிழர் தாயகமெங்கும் பூரணகர்த்தால் அனுஸ்டிக்கப்பட்டது.

10 மே 2005

ஐநாவின் மனித உரிமைகள் மற்றும் மத சுதந்திரத்திற்கான மத அமைப்புக்களின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு வருகை தந்து விடு தலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு சு.ப தமிழ்ச் செல்வனுடன் கலந்துரையாடிய பின்னர் வடக்கு கிழக்கு சமாதானச் செயலகத்திற்கும் விஜயம் செய்தனர்.

10 மே 2005

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவம் அறிவுக் கூடத்தின் கட்டடத்தை தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் 10.05.2005 அன்று திறந்து வைத்துள்ளார்.

12 மே 2005

மட்டக்களப்பு சந்திவெளியில் இடம்பெற்ற மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மீதான இராணுவத்தினரின் கண்மூடித்தனமான துப்பாக் கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து 12.05.2005 அன்று காலை பத்து மணியளவில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கண்டனப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

13 மே 2005

இலங்கை அரசினதும் இராணுவத்தினரதும் அண்மைக்கால நடவடிக் கைகளான படுகொலைகள் கொலை அச்சுறுத்தல்கள் என்பன போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையிலும் நடை பெற்றுள்ளதால் தமிழ் மக்கள் சமாதானம் மீதான முழு நம்பிக்கை யையும் இழந்துள்ளனர் என 13.05.2005 அன்று கிளி - சமாதானச் செயலகத்தில் இடம்பெற்ற இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கருடனான சந்திப்பின்போது தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

14 மே 2005

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் ஜப்பானிய விசேட தூதுவர் யகூசி அகாசிக்குமிடையே கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை செயல கத்தில் 14.05.2005 அன்று சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

15 மே 2005

1985ம் ஆண்டு 15ம் திகதி மே மாதம் சிறீலங்கா இராணுவத்தினரின் காடைத்தனத்தால் மிருகத்தனமான முறையில் வெட்டியும் குத்தியும் கொல்லப்பட்ட மக்களுக்கான நினைவு நிகழ்வுகள் நெடுந்தீவு கிழக்கில் இடம்பெற்றன.

19 மே 2005

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சிக் கல்லூரியில் சிறப்பு பயிற்சியினை நிறைவு செய்யும் போர்ப் பயிற்சி ஆசிரியர்களுக்கான கௌரவப் பரிசில்களை தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபா கரன் அவர்கள் வழங்கிக் கௌரவித்துள்ளார்.

21 மே 2005

மட்டக்களப்பு மாவட்டம் கல்லாறுப் பகுதியில் அமைந்திருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியற்பணிமனை மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் அங்கு வந்திருந்த வயோதி பப் பெண்ணொருவர் பலியாகியுள்ளார்.

23 மே 2005

20.05.2005 அன்று கொழும்பில் காலமான ஈழத்தின் புகழ்பூத்த நாவலா சிரியரான செம்பியன் செல்வன் என்று அழைக்கப்படும் அமரர் ஆறுமுகம் ராஜகோபாலுக்கு தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரன் நாட்டுப்பற்றாளர் விருது வழங்கி கௌரவித்துள்ளார். செம்பியன் செல்வன் தனது எழுத்தாலும் செயலாலும் தமிழீழ தேசிய விடுத லைப்போராட்டத்திற்கு ஆற்றிவந்த பணிகளுக்கு மதிப்பளிக்கும் வித மாகவே நாட்டுப்பற்றாளர் விருது தேசியத் தலைவர் அவர்களால் வழங் கப்பட்டுள்ளது.

24 மே 2005

மாலதி படையணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு ஒன்று கூடல் நிகழ்வு 24.05.2005 அன்று சிறப்புற நடைபெற்றது. இதில் தமிழீழத் தேசி யத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

25 மே 2005

ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் வூட்ரோ வில்சன், நெதர்லாந்து தூதுவர் சுசான் பிளங்கட் அம்மையார் ஆகியோர் 25.05.2005 அன்று கிளி நொச்சிக்கு வருகை தந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இச்சந்திப்பு விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்றது.

25 மே 2005

ஐ.நாவின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் ஆலயத்தின் புதிய பிரதிநிதியாக கடமையேற்றுள்ள திரு. ரஜீ கபூர் 25.05.2005 அன்று கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப. தமிழ்ச்செல்வன் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு.பா. நடேசன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

26 மே 2005

பிந்துனுவெல படுகொலை வழங்கில் மரண தண்டனை வழங்கிய 4பேர் உயர் நிதீ மன்றத்தால் விடுதலை. பிந்துனுவெவ படுகொலை வழக்கில் மரண தண்டனை விதித்த 4 பேரை உயர் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

28 மே 2005

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. கே.பி.ரெஜி அவர்கள் அமெரிக்க முன்னாள் அரசு தலைவர் திரு.பில் கிளின்டன் அவர்களை ஸ்ரீலங்கா தலைநகர் கொழும்பில் 28.05.2005 அன்று மாலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

31 மே 2005

கிழக்கில் நீண்ட காலமாக செயற்பட்டு பல தமிழ்த் தேசிய ஆதர வாளர்களின் கொலைகளில் சம்பந்தப்பட்டவரும், மாமனிதர் சிவராம் அவர்களின் படுகொலையுடன் தொடர்புபட்டவர் எனக் கருத்தப்படு பவருமான மேஜர் நிசாம் முத்தாலிப் என்ற புலனாய்வுத்துறை உயர் அதிகாரி 31.05.2005 அன்று காலை கொழும்பு கொழும்பு நாரஹேன் பிட்டிய பொல்ஹேன் கொடவில் விஜயகுமாரதுங்க மாவத்தையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிகழ்வும் பதிவும்

சுவிற்சலாந்து | அக்கினி தாண்டவம் - ஆடல் நிகழ்வு





சுவிற்சலாந்து | மாணவர் எழுச்சி விழா






சுவிற்சலாந்து | அன்னை பூபதி நினைவு சுமந்த விளையாட்டுப்போட்டி





www.tamilarangam.net



## நெதர்லாந்து

மாவீரர் வெற்றிக் கிண்ண உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி





## இத்தாலி

மாணவர் எழுச்சி நாள் நிகழ்வு






## ஜேர்மனி

மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு
இளையோர் அமைப்பால் நடாத்தப்பட்ட உண்ணாவிரத நிகழ்வு





www.tamilarangam.net



யாழில் நடைபெற்ற மாணவர்கள் எழுச்சி நாள் நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்பு

02 யூன் 2005

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை ஒட்டி 02.06.05 அன்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் கூட்டமும் ஊர்வலமும் மாணவர்களினால் நடத்தப்பட்டுள்ளது. யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் பல்வேறு மாணவர் உரிமை சம்பந்தமான கோசங்களையும் ஒலித்த வண்ணம் அரசடி வீதி கஸ்தூரியார் வீதி வழியாக, யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தை சென்றடைந்தன. ஊர்வலத்தில் மாணவர்கள் தேசியத் தலைவரின் உருவப்படத்தை தாங்கிச் செல்ல பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணியினர் அணிவகுத்து முன்னே சென்றனர். இந்துக்கல்லூரி மைதானத்தை ஊர்வலம் சென்றடைந்ததும் தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவர் க.குலேந்திர ராஜா அவர்களின் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சுவிஸ் தூதுவர் பேனாடினோறெகான் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனுடன் சந்திப்பு

03 யூன் 2005

இலங்கைக்கான சுவிஸ் நாட்டு தூதுவர் பேனாடினோ றெகான் கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ் செல்வனைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். கலந்துரையாடல் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது.
இச்சந்திப்பின் போது அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ் செல்வனுடன், காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலக திட்டமிடல் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கிளிநொச்சியில் நடைபெற்ற மாணவர் எழுச்சிநாள் பேரணியில் பங்கேற்பு

02 யூன் 2005

கிளிநொச்சியில் மாணவர் எழுச்சி தினத்தை முன்னிட்டு மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி 02.06.05 அன்று கிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது. கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகிய பேரணி கிளிநொச்சி லெப்.கேணல் சந்திரன் பூங்காவைக் சென்றடைந்தது. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஒன்று கூடி அரசிற்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறு இப்பேரணியில் பங்கு பற்றினர்.

ஹர்த்தால் காரணமாக தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை பாதிப்பு

03 யூன் 2005

திருமலை சட்டவிரோத புத்தர் சிலை விவகாரத்தையடுத்து அங்கு குவிக்கப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினரை வெளியேற்றக் கோரி 03.06.05 அன்று கடைப்பிடிக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாக தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும இயல்பு நிலை முற்றாகப் பாதிப்படைந்தது.

பருத்தித்துறை, மீசாலைப் பகுதிகளிலுள்ள இராணுவக் காவலரண்கள் மக்களால் எரிப்பு

03 யூன் 2005

திருமலையில் புத்தர்சிலை அமைக்கப்பட்ட விவகாரத்தினைத் தொடர்ந்து இங்கு குவிக்கப்பட்ட படையினரை உடனடியாக விலகக் கோரி நடத்தப்பட்ட ஹர்த்தாலின் போது பருத்தித்துறையிலும், மீசாலையிலும், இராணுவக் காவலரண்கள் 03.06.05 அன்று பொது மக்களால் தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளன. பருத்தித்துறை முனைப் பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினரது காவலரண் ஒன்று 03.06.05 அன்று அப்பகுதி பொது மக்களால் தீயிட்டு கொழுத்தப்பட்டது.

கொழும்பில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொலை

05 யூன் 2005

ஸ்ரீலங்கா தலைநகர் கொழும்பின் கொட்டாஞ்சேனைப் பகுதியில் வைத்து 05.06.05 அன்று அதிகாலை இரு தமிழ் இளைஞர்கள் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பேரூந்து ஒன்றில் பயணம் செய்த வேளையே இவர்கள் சுட்டுக் கொல்லப் பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிப்படைந்த தாயகச்சிறார்களுக்காக கனடாவில் நடைபவனி

04 யூன் 2005

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது தாயகச் சிறார்களுக்கு உதவுமுகமாக 04.06.05 அன்று கனேடிய தமிழர் உதவும் கரங்கள் அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்ட நடைபவனியும், கலை நிகழ்ச்சிகளும் ஸ்காபரோ நகரில் உள்ள சிவிக் சென்ரரில் நடைபெற்றுள்ளது.

தலதா மாளிகையில் ஹெல உறுமயவின் எம்.பி.கள் சாகும் வரை உண்ணாவிரதம்.

06 யூன் 2005

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் அரசு தலைவர் சந்திரிகா குமாரணதுங்கவின் திட்டத்தினை எதிர்த்து ஜாதிக ஹெல உறுமயவின் பிக்கு எம்.பிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் 06.06.05 அன்று முதல் கண்டி தலதா மாளிகையில் சாகும்வரையிலான உண்ணா விரதத்தினை ஆரம்பித்தனர்.

பாதுகாப்பான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்படாவிட்டால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கேள்விக் குறியாகும் - தமிழ்ச்செல்வன்

07யூன் 2005

போராளிகள், பொறுப்பாளர்கள், தளபதிகளுக்கு பாதுகாப்பான போக்குவரத்து ஏற்பாடுகள் சிறீலங்கா அரசினால் செய்யப்படாவிட்டால் யுத்த நிறுத்த உடன்படிக்கையே முழு அளவில் கேள்விக்குறியாக மாறி விடும். நாம் எமது கடற்படை, விமானப்படை, தரைப் படை போன்ற வற்றின் பாதுகாப்புடன் போக்குவரத்து ஏற்பாடு செய்யும் சூழ்நிலை உருவாகும் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் 07.06.05 அன்று தெரிவித்துள்ளார்.

கருணாவின் சதி முறியடிப்பில் 6 போராளிகள் வீரச்சாவு

08 யூன் 2005

கடந்த 11.04.2004 அன்று தேசத்துரோகி கருணாவின் சதி முறியடிப்புச் சமரில் மேலும் 6 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வீரவேங்கை வான்முகிலன், கேதாரம் சிவகுமார்,
துரத்தியமடு துறைநீலாவணை, மட்டக்களப்பு.

வீரவேங்கை நேசன், பூபாலப்பிள்ளை அஜந்தன்
கொற்றயாக்குலல் கன்னன்குடா.

வீரவேங்கை இளையராஜ், செல்லத்தம்பி ராமேஸ்வரன்
கரடியனாறு கொலனி, மட்டக்களப்பு.

வீரவேங்கை செஞ்சுடர், வேலாயுதம் சசிக்குமார்
விஸ்ணு ஆலய வீதி, கிரான் மட்டக்களப்பு.

வீரவேங்கை அனலேந்தி, நடேசலிங்கம் ஜெயசீலன்
மகிழவெட்டுவான், ஆயித்தியமலை.

வீரவேங்கை பரமஜீவன், முருகுப்பிள்ளை குலேந்திரன்
கடற்கரை வீதி, புதுக்குடியிருப்பு. இல.04 ஆரையம்பதி, மட்டக்களப்பு.

ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக் கொண்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கிளைமோர் தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவு

08 யூன் 2005

அம்பாறை மாவட்டம் கோமாரிப் பகுதியில் 08.06.2005 அன்று நண்பகல் 12 மணியளவில் ஸ்ரீலங்காப் படையினரும், தேச விரோதிகளும் இணைந்து மேற்கொண்ட கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர். சுகுண ரஞ்சன் மற்றும் நிவேகரன் ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்கள் ஆவார். இவர்களின் வித்துடல்கள் கஞ்சிக்குடிச்சாறில் உள்ள விடுதலைப் புலிகளின் தளத்தில் வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





### சுதந்திரபுரப் படுகொலை நினைவுநாள் நிகழ்வுகள்

10 யூன் 2005

கடந்த 10.06.1998 அன்று சிறிலங்கா வான்படைக்கு சொந்தமான அதி வேக தாக்குதல் விமானமாகிய கிபிர் நடாத்திய குண்டு வீச்சு மற்றும் சம நேரத்தில் ஆனையிறவில் இருந்தும் அம்பகாமத்தில் இருந்தும் சுதந்திரபுரம் மக்கள் குடியிருப்பு நோக்கி ஏவப்பட்ட எறிகணைத் தாக் குதலின் போதும் கொல்லப்பட்ட 25இற்கு மேற்பட்ட பொது மக்களி னதும் இத்தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிய லெப்.கேணல் அன்பு அவர்களின் 7ம் ஆண்டு நினைவு 10.06.2005 அன்று 10ம் திகதி சுதந் திரபுரம் சந்தியில் இடம் பெற்றது.

---

### ஓமல் பே சோபித தேரர் உண்ணாவிரத்தினைக் கைவிட்டுள்ளார்.

11 யூன் 2005

விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை அரசாங்கம் செய்துகொள்ளக் கூடாதென கோரி கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு முன்னால் சாகும் வரை உண்ணாவிரத்தினை மேற் கொண்டு வந்த ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல் பே சோபித தேரர் 11.06.2005 அன்று காலை 9-18 மணியளவில் தனது உண்ணாவிரத்தினை நிறைவுக்கு கொண்டு வந்தார். அன்று காலை இவரைச் சந்தித்த மகாநாயக்க தேரர்கள், 10.06.2005 அன்று ஜனாதிபதியை சந்தித்த விடயங்களையும், ஜனாதிபதியின் கடிதத் தினையும் இவரிடம் காண்பித்து கேட்டுக் கொண்டதற்கிணங்கவே இவர் தனது உண்ணாவிரத்தினை முடித்துள்ளார் என தெரிய வருகின்றது.

---

### கருணாவின் சதி முறியடிப்பில் மேலும் 8 போராளிகள் வீரச்சாவு

13 யூன் 2005

11.04.2004 அன்று தேசத்துரோகி கருணாவின் சதியை முறியடிப்பதற் காக நடந்த சமரின் போது மேலும் எட்டுப் போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வீரவேங்கை தேன்முகில், தங்கவேல் வசந்தகுமாரி-தேவி
கித்துள்வேவா, கனடியனாறு, மட்டக்களப்பு.

வீரவேங்கை தோகையொளி, இராசநாயகம் இந்துமதி
தும்மாங்கேணி, திக்கோடை, மட்டக்களப்பு.

வீரவேங்கை சிவகாசி, பாலசுந்தரம் தேவகி
9ம்வட்டாரம் கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.

வீரவேங்கை தாரணி, இராசதுரை ரதி
கரடியனாறுகொலனி உன்கிச்சைவீதி, மட்டக்களப்பு.

வீரவேங்கை செவ்விழி, பாலசிங்கம் மோகனா,
கடக்கரைவீதி, பால்சேனை அம்பாறை.

வீரவேங்கை கதிரொளி, தர்மலிங்கம் வனிதா
முனைக்காடு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.

வீரவேங்கை கதிரமுது, கதிர்தம்பி அம்பிகாவதி - அம்பிகா
பெரியபுல்லுமலை, உறுகாமம், மட்டக்களப்பு.

வீரவேங்கை கங்கை அல்லது இன்பரூபா, வீரசிங்கம் சிறிதேவி
இலுப்படிச்சேனை, கன்னங்குடா மட்டக்களப்பு.

ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

---

### சர்வதேச புகழ்பெற்ற அறிவுமதியின் 'நீலம்' குறும்படம்

13யூன் 2005

தமிழினப்பற்றாளரும் உணர்வெழுச்சிக் கவிஞருமான பாவலர் அறிவுமதி அவர்களின் இயக்கத்தில் உருவான 'நீலம்' குறும் படம் பாரிசில் இடம்பெற்ற கேன்ஸ் திரைப்படவிழாவில் மூன்று முறை திரையிடப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

### பௌத்த பேரினவாதத்தின் தமிழர் விரோதப் போக்கை கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டம்

13 யூன் 20

சிறீலங்கா அரச பௌத்த பேரினவாதத்தின் தமிழர் விரோதப் போக்
கண்டித்து ஆயிரக்கணக்கான யாழ்.பல்கலைக்கழக மாணவர்க
ஒன்று திரண்டு மாபெரும் எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தினர்
13.06.2005 அன்று காலை 10.30 மணியளவில் ஆரம்பித்த இவ்எதிர்
போராட்டத்தில் யாழ் பல்கலைக் கழகத்திற்கு முன்பாக உள்ள இர
நாதன் சிலைக்கு முன்பாக சாவீட்டு மாதிரிப்பந்தல் ஒன்று அமை
கப்பட்டு அதில் 'தமிழர் பேரினவாத எதிர்ப்புக்கொள்கை' என்ற வாசக
பொறிக்கப்பட்ட பிரேதப்பெட்டியும் பேரினவாத சக்திகளுக்குத் துணை
போகின்ற தேசவிரோத குழுவான ஈபிடிபியின் தலைவர் டக்ள
தேவானந்தாவின் கொடும்பாவியும் வைக்கப்பட்டு இந்து சமய முறை
படியிலான இறுதி கிரியை நிகழ்வுகள் நடாத்தப்பட்டது.

---

### அரசிலிருந்து வெளியேறிவிட்டோம் - ஜேவிபி தலைவர்

16 யூன் 20

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இருந்
15.06.2005 அன்று நள்ளிரவு 12 மணியுடன் விலகிக் கொண்டதா
ஜேவிபியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தா
16.06.2005 அன்று கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் இ
னைத் தெரிவித்த அவர் மாகாணசபைகளிலும் அரசாங்கத்திற்கு வழ
கிய ஆதரவையும் விலக்கிக் கொள்ளவுள்ளதாக தெரிவித்து
ளார்.

---

### தமிழ்ச்செல்வனுடன் யுனிசெவ் பிரதிநிதிகள் சந்திப்பு

18 யூன் 2

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அ
வெனமன் அம்மையார் தலைமையிலான குழுவினர் 18.06.2005 அன்
கிளிநொச்சியில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு.சு
தமிழ்ச்செல்வன அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
அன் வெனமன் அம்மையாருடன் ரெஸ்லி நிவா மற்றும் ரெட்சப
ஆகியோரும் விடுதலைப் புலிகள் சார்பில் சு.ப தமிழ்ச்செல்வன் அ
களுடன் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அரசிய
துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோரும் இச் சந்
பில் கலந்து கொண்டனர்.

---

### சிங்களக் காடையர்களினால் தமிழர் புனர்வாழ்வுக் கழக பாரவூர்தி உட்பட இரு பாரவூர்திகள் எரித்து அழிப்பு

18 யூன் 2

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு படகுகள
ஏற்றிச் சென்ற தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குச் சொந்தமான ப
வூர்தி ஒன்றும் கிடுகுகளை ஏற்றிச் சென்ற மற்றொரு பாரவூர்திய
18.06.2005 அன்று திருமலை மாவட்டம் சேருநுவர பகுதியில் வை
சிங்களக் காடையர்களால் எரித்து அழிக்கப்பட்டுள்ளது. அப்பாரவூ
களின் ஓட்டுனர்களும் காடையர்களால் கடுமையாகத் தாக்கப்பட்ட

---

### தமிழர்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ முடிவு செய்துவிட்டார்கள் - தமிழ்த் தேசியத்தின் குரல் நிகழ்வில் பிரகடனம்!

19 யூன் 20

யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் 19.06.2003 அன்
இடம்பெற்ற 'தமிழ்த் தேசியத்தின் குரல்' நிகழ்வில் தமிழ் மக்கள் ச
நிர்ணய உரிமையுடன் வாழ முடிவு செய்துள்ளார்கள் என்ற பிரகட
தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக வெளியிடப்பட்டுள்ளது.
19.06.2005 அன்று காலை 10.30.மணிக்கு சு.பரமநாதன் தலைமையி
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் தமிழ் தேசிய
தின் குரல் நிகழ்வு இடம் பெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### பொதுக்கட்டமைப்பில் இருதரப்பினரும் கைச்சாத்து!!!

24 யூன் 2005

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தின் புனரமைப்புக்காக உருவாக்கடும் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் ஸ்ரீலங்கா அரச தரப்பு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். அரச தரப்பில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலர் சுமணவீர ஜயசிங்கவும் விடுதலைப் புலிகள் தரப்பில் திட்டமிடல் செயலக பிரதிப் பணிப்பாளர் திரு. ரஞ்சன் சண்முகலிங்கம் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். 24.06.05 அன்று நண்பகல் 12.00 மணியளவில் அரச தரப்பின் சார்பில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சின் செயலர் முடியன்செலாகே சுமணவீர ஜெயசிங்க கையெழுத்திட்டார். இதயைடுத்து இதன் பிரதிகளை நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரஸ்கள் அவர்கள் வன்னிக்கு எடுத்துச் சென்றார். அங்கு விடுதலைப் புலிகள் தரப்பின் கையெழுத்தைப் பெற்றுக் கொண்டார். விடுதலைப் புலிகள் சார்பில் திட்டமிடல் செயலக பிரதிப் பணிப்பாளர் திரு. ரஞ்சன் சண்முகலிங்கம் கையெழுத்திட்டார். மொத்தம் மூன்று பிரதிகளில் கையெழுத்திடப்பட்டதாகவும், விடுதலைப் புலிகள், அரசு மற்றும் நோர்வே ஆகிய மூன்று தரப்பும் இவற்றை வைத்திருக்கும்.

### பேரினவாதத்திற்கு எதிராக சாவகச்சேரியில் மாணவர்கள் பேரணி

26 யூன் 2005

தமிழினத்தின் அபிலாசைகளுக்கு எதிராக ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய போன்ற கட்சிகள் கடைப்பிடித்துவரும் பேரினவாதப் போக்கைக் கண்டித்து யாழ்.சாவகச்சேரியில் மாணவர்களினால் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி 25.06.2005 அன்று நடத்தப்பட்டுள்ளது. பேரணியின் போது ஜே.வி.பி. ஹெல உறுமய ஆகிய கட்சிகளைச் சித்தரிக்கும் பானை ஒன்றினை மாணவர்கள் பாடை கட்டி அதில் வைத்து இறுதி ஊர்வலம் போல் எடுத்துச்சென்றனர்.

### இந்திய - ஸ்ரீலங்கா பாதுகாப்பு உடன்படிக்கையைக் கண்டித்து சென்னையில் உண்ணாநோன்பு

28 யூன் 2005

ஸ்ரீலங்கா அரசுடன் இந்திய அரசு செய்து கொள்ளவுள்ள பாதுகாப்பு உடன்படிக்கையைக் கைவிட வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் ஏற்பாட்டில் 28.06.2005 அன்று சென்னையில் உண்ணா நோன்பு போராட்டம் நடாத்தப்பட்டுள்ளது. இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 28.06.2005 அன்று காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகிய இப் போராட்டத்தை அகில இந்திய மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் மருத்துவர் சேதுராமன் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு.பழநெடுமாறன் அவர்களுக்கு பழச்சாறு வழங்கி மாலை 6.00 மணிக்கு நிறைவு செய்து வைத்தார். இதில் தமிழர் நலன்சார்ந்த அமைப்புக்கள், கட்சிகள் ஆகியவற்றின் தலைவர்கள், பிரதிநிதிகள், தொண்டர்கள், மற்றும் மக்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கு கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### மட்டக்களப்பு ஈழநாதம் பத்திரிகையின் பணியாளர் சுட்டுக்கொலை

29 யூன் 2005

மட்டக்களப்பு ஈழநாதம் பத்திரிகையின் பணியாளர் திரு. கன்னமுத்து அரசகுமார்(பபி) 29.06.2005 அன்று பத்திரிகை விநியோகப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது ஸ்ரீலங்கா படைகளுடன் சேர்ந்தியங்கும் தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அம்பாறை திருக்கோவிலை நோக்கிய விநியோகப்பணியில் ஈடுபட்டிருந்த போது அட்டாளத்திற்கும் ஒலுவிலுக்கும் இடையில் வைத்தே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மட்டக்களப்பு வெல்லாவெளியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் மட்டக்களப்பு ஈழநாதம் பத்திரிகையில் ஆரம்ப காலப் பகுதியிலிருந்து பணியாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### படுகொலை செய்யப்பட்ட ஈழநாதம் பணியாளர் நாட்டுப்பற்றாளராக கௌரவிப்பு

30 யூன் 2005

29.06.2005 அன்று அம்பாறை மாவட்டம் அட்டைப்பள்ளம் பகுதியில் தேசத்துரோகிகளின் தாக்குதலின் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஈழநாதம் பத்திரிகையின் விநியோகப் பணியாளர் கன்னமுத்து அரசகுமார்(வவி) விடுதலைப் புலிகளால் நாட்டுப்பற்றாளராக கௌரவிக்கப் பட்டுள்ளார்.

### ஊறணியில் துப்பாக்கிச் சூடு: 3 படையினர் பலி

30 யூன் 2005

மட்டக்களப்பு மாவட்டம் ஊறணிப் பகுதியில் வைத்து ஸ்ரீலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் உட்பட மூன்று இராணுவத்தினர் இனந்தெரியத நபர்களினால் 30.06.2005 அன்று காலை 10.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஊறணியில் உள்ள தண்ணீர் தாங்கியடிக்கு அண்மையில் நியூ பவுண்டரி வீதிக்கு அண்மையில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. முச்சக்கர வண்டி ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த சமயம் இராணுவத்தினர் மூவருமே சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### உலகத் தமிழினத்தின் தலைவராக மேதகு வே.பிரபாகரன் அவர்கள் விளங்குகின்றார் - திருமாவளவன்

03 யூலை 2005

தமது நாட்டு மக்களின் விடியலுக்காய் போராடிக் கொண்டிருந்தாலும், உலகத்திலுள்ள அனைத்து தமிழ் மக்கள் மீதும் அக்கறையும் கரிசனையும் கொண்டுள்ள மேதகு வே.பிரபாகரன் அவர்கள் உலகத் தமிழினத்தின் தலைவராக விளங்குகின்றார் என விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும், தமிழின உணர்வாளருமான திரு. தொல். திருமாவளவன் அவர்கள் தெரிவித்துள்ளார். கனடாவில் ஈழமுரசின் இனியமாலை 2005இன் முதல் நாள் நிகழ்வில் பங்கேற்று சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### அதிவேக உந்துருளி படையணியின் பயிற்சிப் பாசறை நிறைவு நிகழ்வில் தேசியத் தலைவர் பங்கேற்பு

03 யூலை 2005

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய படையணிகளில் ஒன்றான இம்ரான் பாண்டியன் படையணியின் அதிவேக உந்துருளி படை அணியின் இரண்டாவது அணி 03.07.2005 அன்று தனது பயிற்சிப் பாசறையை நிறைவு செய்துள்ளது. வன்னியில் பிரத்தியேகமான இடமொன்றில் நடைபெற்ற இந்த நிறைவு விழாவில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு படையணியினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

### மில்லர் வீரகாவியமான இடத்தில் மிகவும் உணர்வு பூர்வமாக கரும்புலிகள் நாள் நிகழ்வுகள்

05 யூலை 2005



முதற் கரும்புலி கப்டன் மில்லர் (வல்லிபுரம் வசந்தன் - துன்னாலை) வெடி மருந்து தாங்கிச் சென்று பகையழித்து வீரகாவியம் படைத்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 9.30 மணிக்கு கரும்புலி நாள் நிகழ்வுகள் இடம் பெற்றன. காலையில் இடம் பெற்ற நிகழ்வுகளின் போது பொதுச் சுடரினை வடமராட்சி மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் ந.அன்பு ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை வடமராட்சி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ந.இன்பன் ஏற்றிவைத்தார். மற்றும் கப்டன் மில்லரின் திருவுருவச் சிலைக்கு வடமராட்சி கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.அன்பரசனும் மற்றும் பொது மக்களும் மலர் மாலைகள் அணிவித்தும் மலரஞ்சலி செலுத்தினர். கரும்புலி மில்லரின் நினைவுக்கல்லிற்கு அரசியல்துறையைச் சேர்ந்த சு.பாலையா மலர்மாலை அணிவித்தார்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை



ஆக்கங்கள் அபிப்பிராயங்கள் மற்றும் தொடர்புகட்கு

ERIMALAI,
C/O T.C.C France, 341, Rue Des Pyrenees,
75020 Paris, FRANCE.

Tel: 01 - 43 58 11 42
Fax: (33) 1 43 58 11 91
e.mail: info@erimalai.info
www.erimalai.info

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

